இலவச வெளியீடு: GERMANY , ENGLAND மாசி.Feb. 2016
Free Circulation

# வெற்றிமணி

## Vettimaniy

மணி 66
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
மாபெரும் தொடர் மலிவு விற்பனை!
விபரம் பக்கம் 10

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

## முதுமையைத் தடுக்கமுடியாது கொஞ்சம் தள்ளிப்போடுவோமே!

சிவஜெனனி

## யார் மனதில் யார் இருப்பார்

சந்திரவதனா



Happy Valentine's Day Feb.14

தமிழ்க் கல்வி கலைக் கல்லூரி பீலபெல்ட்

Anamika .Ratna

வணக்கம் தமிழா

Kones Fotos

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288 விபரம் பக்கம் 09

கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740
விபரம் பக்கம் 24

டோட்முண்ட் நகரில் எட்டாவது ஆண்டில் எமது சேவை!
Gopara Gnanam Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மேலதிக விபரம் 11ம் பக்கம்

Frankfurt:Tel:069 97 693 374
SARAVANAA BHAVAN

Lucky Fly
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696

S.K.Silks & Gold Paraadise

என்றும் புதியது அழகின் இரகசியம் அது.
Mr.P.Sritharan.
Proprietor
காதலர் தினத்தை முன்னிட்டு
அன்பின் அடையாளமாக
அன்பளிப்புக்களை கொடுத்து மகிழ
மாபெரும் மலிவு விற்பனை!
Feb 29 வரை
Valentine's Sale
மாபெரும் ராஜமுத்திரை


Tel:0231 9501 647
Adler str 33 - 44137 Dortmund




# முதுமையைத் தடுக்கமுடியாது கொஞ்சம் தள்ளிப்போடுவோமே!

சிவஜெனனி





யாருக்கு தான் வயது போகாமல் இளமையான தோற்றத்துடன் நீண்ட காலம் இருக்க விருப்பம் இல்லை! ஆனால், வயது போவதும் முகத்தில் வயது போவது தெரிவதும் இயற்கையே! இந்த இயற்கை யையும் நாம் சற்று தள்ளிப் போடலாம்!

சில விடயங்களை நீங்கள் அறிந்து கொண்டு அதன்படி நீங்கள் நடந்தீர்கள் என்றால் நீங்களும் இளந் தோற்றத்துடன் நீண்டகாலம் இருக்கலாம்.
சிலரைப் பார்தால் அவர்களின் உண்மையான வயதை நம்பவே முடியாது, பார்க்க அவ்வளவு இளமையாக இருப்பார்கள். அதே சமயம் சிலரைப் பார்த்தால் இவருக்கு இத்தனை வயதா? என்று வியக்கும் வண்ணம் அதிக வயதானவர் போல் காட்சி அளிப்பர். இதற்கு காரணம் என்ன? காரணங்கள் பல இருக்கும் அதில் முக்கிய காரணம், அவர் அவர் பழக்க வழக்கங்களே ஆகும்! ஆகையால் எப்படியான பழக்க வழக்கங்கள் எமக்கு நன்மை தரும், எந்தப் பழக்கங்களை தவிர்ப்பது நன்மை தரும் என்பதனை பார்ப்போம்.



இளம் ரீன்ஏஞ் வயதில் எல்லோருக்கும் இரவிரவாக முழிப்பிருப்பது என்பது நல்லாக பிடித்த விடயம் தான். ஆனால் அதை நாம் வயது கொஞசம் போன பிறகும் பழக்கத்தில் கொண்டிருந்தால் அது சரிப்பட்டு வருமா? இல்லை! பியூட்டி சிலீப் *(beauty sleep)* என்று என்ன சும்மாவா எல்லோரும் சொல்கிறார்கள் என்று நினைக்கின்றீர்கள்? அதில் உண்மை உள்ளது! தூக்கமின்மை கண்களுக்கு கீழ் இருக்கும் பைகள் வீக்கமுடன் காட்சி அளிக்கப் பண்ணுவது மட்டுமல் லாமல் கண்கள் சோர்வுடன் காட்சியளிக்கவும் செய்கிறது என்று டாக்டர் அலன் ரோவிக் *(Allen Towfigh)* கூறுகிறார். சீக்கிரம் தூங்குவது மட்டும் அவசியமில்லை, எவ்வளவு நேரம் துங்குகிறீர்கள் என்பதும் முக்கியமான விடையமாகும். ஒவ்வொரு வருக்கும் 7மணித்தியால தூக்கம் அவசியம்! 7 மணித்தியாலத்திற்கு குறைவாக தூங்குபவர்களுக்கு கண்களுக்கு கீழ் கரு வளையங்கள் தென்படும் அத்தோடு உங்கள் வாழ்நாளும் குறையும்!.

உங்கள் கண்கள் சோர்வாக இருந்தால் அதை தயவு செய்து போட்டு கசக்காதீர்கள்! எமது முகத்திலேயே மிகவும் மென்மையானது என்ன என்றால் அவை கண்களும் அதைச்சுற்றி இருக்கும் தோல்களும்தான். கண்களை கசக்குவதால் அதைச்சுற்றி இருக்கும் தோலின் நெகிழ்ச்சியும் கொலாஜனும் குறைந்துவிடும் இதனால் சுருக்கங்கள் வர நிறையவே வாய்ப்பிருக்கின்றது. அதுமட்டும் இன்றி நுண்குழாய்களும் *(capillaries)* வெடிக்கும் ஏன் என்றால் கண்களைச் சுற்றி இருக்கும் தோல்கள் மிகவும் மென்மையானவை. கண்கள் சோர்வடைந்தவை போல் காட்சி அளித்தால் கிறின் ரீ *(green tea)* யை அவிய வைத்தபின் அதன் பைகளை *(green tea bags)* கண்களை மூடிக் கொண்டு கண்களின் மேல் 10 நிமிடங்களுக்கு வையுங்கள்! நுண்குழாய்கள் வெடித்திருக்கும் என்று நீங்கள் சந்தேகப் பட்டீர்கள் என்றால் விற்றமின் K யும் D யும் உள்ள கிறிம்களை வாங்கிப் பாவியுங்கள்!.
கண்களில் மட்டும் சுருக்கங்கள் தோன்றுவதில்லை அவை உதடுகளுக்கு அருகாமை இருக்கும் தோல்களிலும் தோன்றும். இதைத் தவிர்க்க *straw* வைத்துக் குடிபானங் களை அருந்துவதைத் தவிருங்கள். இதே போல் புகைப்பிடித்தலும் உங்கள் வாயிற்கு அருகே இருக்கும் தோலுக்கு சுருக்கங்களைக் கொடுக்கும்.

உங்கள் வயதை இன்னும் கூட்டுவதற்கு இன்னுமொரு காரணம் என்ன தெரியுமா? அதைச் சொன்னால் நீங்கள் இளமையாக மட்டும் தோற்றமளிக்க மாட்டீர்கள் இளமை யோடு சேர்ந்து மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் சேர்ந்து வரும்! அது என்னவென்றால், ஒருவர் மீது நீங்கள் காழ்புணச்சியோடு இருப்பது அறவே கூடாத தொன்றாகும். அதாவது மற்றவர்களை மன்னிக்காமல் அவர்களில் இருக்கும் கோபத்தை மனதில் வைத்துக் கொள்வது. மன்னித்தலுக்கும் எமது உடல் ஆரோக்கியத்திற்கும் பல தொடர்புகள் உண்டு என்பதனை பல ஆராய்ச்சிகள் மூலம் அறிந்த உண்மை! மன்னிப்பு ஒருவருக்கு நாம் வழங்காவிட்டால் அதனால் நமக்குத் தான் தொல்லை. அதாவது தூக்கமில்லாமை அத்துடன் அதிகரித்த நரம்பு செயற்பாடுகளும் வந்து சேரும்! இந்தக் காழ்ப்புணர்ச்சியால் எமக்கு மனஉளைச்சல் வருவதனால் கொற்றிசொல் *(cortisol)* என்னும் கோமோர்ன் அதிகரிக்கும் என்று டாக்டர் ஜெனிபர் லன்டா *(Jennifer Landa)* கூறுகிறார், இதனால் எடை அதிகரித்தல், இரத்த அழுத்தம், நீரிழிவு ஆகியவை நம்மிடம் சீக்கிரம் வந்து சேர்ந்துவிடும். ஆகையால் கோபத்தை விட்டு மற்றவர்களை மன்னித்து நீங்களும் சுகமாக வாழ வழியைப் பாருங்கள்!

தொடர்ச்சி 4ம் பக்கம்







வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 233


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

"ஓவியக்கலைவேள்"

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:

Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com

Company No: 8876276

"வெற்றிமணிமொழி"

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Vettimaniy Ltd

Sanje:07824 61 83 83

vai g (U.K) 00 44 7788 195962


# மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் வடக்கு கிழக்கில் இருக்கின்றதா?

கொள்கையும் நம்பிக்கையும் மக்களிடம் 60 ஆண்டுகளுக்கும் மேலாக மாறாமல் உள்ளது. ஆனால் மக்களின் உணர்வுகளின்மேல் சவாரி செய்து வாக்குகளை பெற்று பாராளுமன்றம் செல்லும் பிரதிநிதிகள்தான் கொள்கைகளை விலைபேசி லாபம் ஈட்டு கின்றனர்.
-அ.நிக்ஸன்-

**இலங்கையில் இருந்து -அ.நிக்ஸன்-**

முப்பது ஆண்டு அஹிம்சைப் போராட்டம் முப்பது ஆண்டுகால ஆயுதப்போராட்டம் மொத்தமாக 60 ஆண்டுகள் துன்பங்களுடன் காத்திருந்தும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு உரிய விடை இன்னமும் கிடைக்கவில்லை. உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய அரசியல் யாப்பும் சரியான தீர்வை வழங்கும் என்பதற்கான சாதகமான நிலையும் தென்படவில்லை. 2016ஆம் ஆண்டும் பிறந்து விட்டது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழ்களின் நம்பிக்கை. இம்முறையும் அந்த நம்பிக்கைக்கு பலம் சேர்க்க மக்கள் விரும்புகின்றனர்.

**60 ஆண்டுகாலம்**

மக்கள் மனம் தளரவில்லை. 60ஆண்டுகாலம் மனம் தளராமல் இருக்கும் மக்களை இன்னும் பல ஆண்டுகள் வரை காத்திருக்க வைக்காமல் அவர்களின் அரசியல் உரிமைகளை கையளிக்கும் ஏற்பாடுகளுக்கு உலக அரசியல் இடமளிக்க வேண்டும் என்பதுதான் மக்களின் பிராத்தனை. 2009ஆண்டு மே மாதத்துடன் யுத்தம் முடிந்துவிட்டது என மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் மார்தட்டியது போன்று நல்லாட்சி அரசாங்கமும் புகழ்பாடுகின்றது. ஆனால் யுத்தம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது என்பதற்கு நடைமுறை விடயங்கள் சான்றாகும். குறிப்பாக காணி அபகரிப்பு, பௌத்த சமய பரப்புரைகள், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இனவிகிதாசாரத்தை குறைத்தல், இராணுவ கிராமங்களை உருவாக்குதல், தமிழர்பிரதேச எல்லைகளை சிங்கள பிரதேசங்களுடன் இணைத்து தமிழர்களை நிலத் தொடர்பில்லாமல் பிரித்தல், நில உரிமைகளை பறித்தல் என்று வடக்கு கிழக்கில் மறைமுக யுத்தம் தொடருகின்றது.

இலங்கையின் அரசியலமைப்பு தமிழர்களுக்கு சமநீதி வழங்கவில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டு. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் 1883இல் முதன் முதலாக உருவாக்கப்பட்ட கோல்புறூக் அரசியல்யாப்பு முதல் இலங்கை 1948இல் சுதந்திரமடைந்து 1972இல் இறைமை அடைந்து உருவாக்கப்பட்ட யாப்புகள் வரை தமிழர்களுக்கு சமநீதி இல்லை என்பதும் வரலாறு.

1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு 19 திருத்தங்களுடன் தற்போதும் நடைமுறையில் இருக்கின்றது. இந்த யாப்பில் 1987இல் செய்யப்பட்ட 13ஆவது திருத்தம்தான் அதிகாரப் பரவாலக்கல் முறையாகும் இதுதான் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வாகவும் கூறப்பட்டது.

நடைமுறை யாப்பு

இன்று வரை 13ஆவது திருத்தம் பற்றி பேசினாலும் அரசியல் தீர்வு என்பது தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பின் அடிப்படையில் செய்ய முடியாது என்பது தமிழ் மக்களின் வாதம். நேர்மையான தீர்வுக்கான நேரடி அழுத்தங்களை உலக நாடுகளினால் இலங்கை அரசாங்கத்துக்கு கொடுக்கமுடியாமல் உள்ளது. தமிழ் அரசியல் தலைமைகளினால் எதுவும் செய்யமுடியாது என்ற நிலை தற்போது வந்துவிட்டது அஹிம்சைப் போராட்டம், ஆயுதப்போராட்டம் என்று தொடராக போராட்டங்களை சந்தித்த மக்கள் மீண்டும் ஒரு போராட்டத்தை காண விரும்பவில்லை,

ஆனால் மக்களிடம் நம்பிக்கை இருக்கின்றது தைரியம் உள்ளது நிரந்தர அரசியல் தீர்வுக்கான சர்வதேச ஆதரவை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் இலங்கை ஒரு சிறிய நாடு அந்த நாடு தான் விரும்பிய நாடுகளுடன் உறவுகளை வைத்து தனக்கு தேவையானவற்றை பெறட்டும் என்ற நல்ல நோக்கில் உலக நாடுகள் விட்டுக்கொடுப்பதை அல்லது பொறுத்துக் கொண்டிருப்பதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தமிழர்களின் அரசியல் இருப்புக்கு உலை வைக்கின்ற வேலைத் திட்டங்களை நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுப்பதை நிறுத்த, குறைந்த பட்சமேனும் உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இனப்பிரச்சினை விவகாரத்தில் முற்று முழுதாக அரசாங்கத்தை சர்வதேசம் நம்புகின்ற போக்கை காணமுடிகின்றது.

**பிராந்திய அரசியல்**

பிராந்திய அரசியல் நலன் மற்றும் லாபங்களை மாத்திரம் கருத்தில் கொண்டு உலக நாடுகள் குறிப்பாக அமெரிக்கா, கனடா, பிரித்தானியா அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இலங்கை விடயத்தில் தொடர்ந்து செயற்படுமானால் தமிழர்கள் பிரச்சினைக்கு உலகம் அழியும் வரை தீர்வுகிட்டாது. இந்தியா அயல்நாடு இந்திய தமிழர் பிரச்சினையை பாரத்துக்கொள்ளும் என்று கருதியும் உலக நாடுகள் செயற்படுமானால் அது இன்னும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்படும் அல்லது தள்ளப்பட்டு விட்டது என்றும் கூறலாம். 60ஆண்டுகள் காலம் கடந்து சென்றமைக்கு இந்திய அரசின் லாபங்கள் பிரதான காரணம். ஆகவே இந்த நிலைமைகளை அறிந்துகொண்டு நேர்மையான முறையில் உலக நாடுகள் சிந்திக்க வேண்டும் என்ற கருத்துக்களை தமிழ்த் தலைவர்கள் தொடர்ந்து முன்வைக்க வேண்டும்?

தொடர்ச்சி 05ம் பக்கம்...


Century Travels&Tours Dortmund,Essen நகரங்களில் முழுநேர பகுதிநேர வேலைக்கு ஆட்கள் தேவை!






**தமிழ்க் கல்வி கலைக் கல்லூரி பீலபெல்ட் 22 வது ஆண்டு விழா 09.01.2016-10.01.2016**



2ம் பக்கத் தொடர்ச்சி

## முதுமையைத் ....

உங்களுக்கு முகத்தைப் புதைத்துக் கொண்டு படுக்கும் பழக்கம் இருக்கிறதா? அப்படியென்றால் அதை உடனடியாக நிறுத்துங்கள்! நீங்கள் உங்கள் முகத்தை தலையணைக்குள் அழுத்தும் பொழுது அதில் இருந்து வரும் அழுத்தம் உங்களுடைய முகத்தில் இருக்கும் தோலுக்குக் கூடாது ஏனெனில் முகப் பகுதியில் இரத்த ஓட்டம் போதாமையால்! இதை தவிர்க்க நிமிர்ந்து படுங்கள். உங்களால் இந்தப் பழக்கத்தை விடமுடியாவிட்டால் தலையணை உறையை சில்க் துணியில் வாங்கிப் பாவிக்கவும்.

துரித *(fast food)* உணவுகளைத் தவிருங்கள். இவற்றில் அதிகளவு சோடியம், கொழுப்பு மற்றும் கொலஸ்ரோல் இருக்கிறது. இவைகள் நமக்கு வயதான தோற்றத்தை கொடுக்க இன்னுமொரு காரணம். அது மட்டுமல்லாமல் எமது உடல் பெருப்பதற்கும் இதுவே காரணமாகவுள்ளது. சம்மன் மீன், ரின்மீன் *(tuna)* மற்றும் வோல்நட் *(walnut)* ஆகியவை தோல்களிற்கு நன்மை கொடுத்து முகச்சுருக்கங்கள் வருவதையும் குறைக்கும்.
இனிப்பு வகைகளை தாங்கோ தாங்கோ என்று கேட்டு வாங்கிச் சாப்பிடுகிறீர்களா? அப்படி என்றால் தோல்சுருக்கங்களை வாங்கோ வாங்கோ என்று வெத்திலை வைத்து அழைப்பதற்குச் சமம். இனிப்பு வகைகள் எமது உடம்பில் இருக்கும் எல்லாப் பாகங்களுக்கும் வயதைக் கூட்டும். அதிக இனிப்பு வகைகள் உண்ணுபவர்களின் இடை மட்டும் காணாமல் போவதுமட்டுமல்லாது சர்கரைவியாதியையும் கைகோத்து கூட்டி வரும். அத்துடன் சில தோல் நோய்கள் (முகப் பரு தோல் சுருக்கம்) கொண்டு வரும் வல்லமை இதற்கு உண்டு. கட்டாயம் ஏதாவது இனிப்பாகச் சாப்பிட்டுத் தான் ஆக வேண்டும் என்று தோன்றினால், டார்க் சொக்கிலேட்டை அல்லது சர்க்கரை குறைந்ததாகப் பார்த்து வாங்கிச் சாப்பிடுங்கள்.

எடையை அளவாக வைத்திருப்பது அவசியமானதொன்றே! ஒழுங்காக உடற்பயிற்சி செய்வதென்பது அவசியமே!
எடை குறைவது நல்லது தான் ஆனால் அதற்காக நமது நடிகர் விக்ரம் போல எடை குறைவதும் கூடுவதாகவும் இருந்து வந்தால் அது நன்மை தராது! 2012 ஆம் ஆண்டில் செய்யப் பட்ட ஒரு ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது என்னவென்றால் இப்படிக் கூடிக் குறைபவர்கள் அதிகம் இதயநோய்களுக்கு உள்ளாவதுடன் சர்க்கரை வியாதியும் வரலாம் என்பதே!
நாம் உடற்பயிற்சிதான் ஒழுங்காகப் பண்ணுகிறோமே இரண்டு மணித்தியாலம் இருந்து ஒரு படத்தைப் பார்ப்போம் என்று ஒரேயடியாக ரீவிக்கு முன் உட்கார்ந்து விடாதீர்கள். 30 நிமிடங்களுக்கு மேல் ஒரே இடத்தில் உட்கார்ந்து இருந்தால் கணங்களில் சுகர் *sugar deposit* பண்ணும் ஆதலால் உடல் எடை அதிகரிக்கும்.

தண்ணீர் அருந்துவது பலர் அரிது. ஆனால் உடல் நலத்திற்கு மிகவும் முக்கியமானதொன்று இது.




**லூர்ட்ஸ் மாதா – போத்துக்கல் பார்த்திமா**

March, April, july, Aug , மாதங்களில் **புனிதப்பயணம்**

எம்மக்களின்
வேண்டுகோளுக்கிணங்க
லூர்ட்ஸ் மாதா கோவில்
மற்றும்
போத்துக்கல் பாத்திமாகோவில்
இவற்றிற்கு பஸ்மூலம் செல்ல
ஒழுங்கு செய்துள்ளோம்.

**போத்துக்கல்–(பார்த்திமா )**

**லூர்ட்ஸ் மாதா கோவில்**
உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

K.முருகா : 02972 7754    Handy: 0175 850 14 89

# இளங்கலைஞர்களை ஊக்குவிப்பதனால் கலையை வளர்க்க முடியும்

**கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா.**

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நடனப்பிரிவின் முன்னாள் தலைவர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நடனப்பிரிவின் முன்னாள் தலைவரும், 'நாட்டிய கலாகேந்திரம்' நாட்டியநிறுவனத்தின் இயக்குனருமான கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா. அன்று 1975 ஆண்டு யாழ்ப்பாணத்தில் நுண்கலைப்பிரிவில் பரதம் கற்றுவரும் பொழுது அவரது பெயர் கிருஷாந்தி சேனாதிராஜா. அப்போ நாம் களனி பல்லகலைக்கழகத்தில் இருந்து யாழ் பல்கலைக்கழகத்திற்கு களனி மாணவர்களுடன் வந்து 3 நாள் ஓவியக்கண்காட்சியை நடத்தினோம். அப்போது ஆடல் அரசியாத்திகழ்ந்த கிருசாந்தி அவர்களது நடன நிகழ்வு பல்கலைக்களகத்தில் வெளி அரங்கில் போடப்பட்ட மேடையில் இடம் பெற்றது. அப்போ அங்கு அந்த மேடையில் ஆடிய சிங்கள கதக்களி நடனக் கலைஞர் (பரணவிதான என எண்ணுகின்றேன்) ஆடும் போது மேடை உடைந்தது. அவ்வளவு ஆட்டம் என யாவரும் புகழ்ந்த வேளை, அந்த சிங்கள நடனக்கலைஞர் கூறினார். "எனது ஆவேசமான ஆட்டத்தில் அரங்கம் நொருங்கியது இது ஒரு இயல்பான நிகழ்வு. ஆனால் இங்கே மென்மையாக ஆடி எங்கள் மனதை எல்லாம் நெருடிவிட்டு அமைதியாக இருக்கிறார் அந்த ஆடலரசி" . அவர்தான் கிருசாந்தி என்ற கூறினார். எனது ஆட்டத்தில் மேடை நொருங்கியது. அவரது மென்மையான அசைவுகளில் நான் நொருங்கிப்போனேன், என்று மீண்டும் அந்தப் பெரும் கலைஞன் கூறினார். கலை இனம் மதம் கடந்தது. அவரது கூற்றும் எதிர்காலத்தில் பலித்தது. அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நடனப்பிரிவின் தலைவர் ஆனார். அவரது நேர்காணலை இங்கு வெற்றிமணியில் பிரசுரிப்பதை இட்டு மகிழ்கின்றது. எனது நன்றி நானிலத்திற்கும் நேர்கண்ட அ.றொக்ஸன் அவர்களுக்கும் உரித்தாகட்டும். (படங்கள்: யேர்மனியில் உள்ள இளம் கலைஞர்களதும் இடம் பெறும்.)

தமிழர் கலைகள் எல்லாம் ஆன்மீகத்துடனும் சமயச்சடங்குகளுடனும் இணைந்தும் பிணைந்தும் மரபுவழியாகப் பேணப்பட்டு சந்ததி சந்ததியாகக் கையளிக்கப்பட்டு வந்துள்ளது. இறைநம்பிக்கை சமய நம்பிக்கை என்ற இறுக்கமான பிணைப்புடன் எம்கலைகள் கட்டியெழுப்பப்பட்டதனால் அவை அழிவடையலாம் என்று எண்ணி அஞ்சவேண்டியதில்லை. என்று இந்நம்பிக்கைகளிற்கு பங்கம் வருகின்றதோ அன்று கலைகளும் தம் உயர் பண்பை இழந்து அழிவை நோக்கிய திசையில் பயணிக்கும்.

ஆன்மீக நாட்டம், தெய்வீக சிந்தனை என்ற வகையில் கலைகள் மக்களை அவ்வழி ஒருங்கிணைக்கும் பாலம் எனலாம். பரதக் கலையும் இவ்வகையில் தெய்வீகக்கலை எனும் உயர்செவ்வியல்கலையே எனில் அது மிகையாகாது. நற்சிந்தனையுடனும் தெய்வீக நாட்டமுடனும் அழகியல் உணர்வுடனும் ஆடல் ஆற்றுகையை அளிக்கும்போது அது அனைவரும் இரசித்து இலயித்து இன்பம் பெறக் கூடியதாகவே அமையும்.

கலைகளை பிரபல்யப்படுத்தி வளர்க்க வேண்டுமெனில், மக்கள் மத்தியில் அதன் மதிப்பினை மேப்படுத்த வேண்டுமெனில் நல்ல கலைஞர்களை குறிப்பாக வளர்ந்துவரும் இளங்கலைஞர்களை இனங்கண்டு வாய்ப்புகள் வழங்கி, உற்சாகமளித்து, ஊக்குவித்தல் வேண்டும். அப்போதுதான் எமது பாராம்பரியக்கலைகள் அடுத்த சந்ததியினர்க்கு முறையாகக் கையளிக்கப்பெற்று அவர்தம் கலை ஆர்வத்தை அதிகரித்து அத்துறையில் நாட்டம் கொள்ள வழிகோலும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நடனப்பிரிவின் முன்னாள் தலைவரும், 'நாட்டிய கலாகேந்திரம்' நாட்டியநிறுவனத்தின் இயக்குனருமான கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா தெரிவித்தார்.அவருடைய செவ்வியின் முழுமையான வடிவம் பின்வருமாறு:

**இன்றைய கணினிமய யுகத்தில் நாட்டியத்துக்கு எந்த அளவு முக்கியத்துவம்**



நாட்டிய கலாகேந்திரம்

இன்றைய நவீன வசதிகள் அதாவது மடிக்கணனிப் பயன்பாடு, வீடுகள்தோறும் வுஏ வசதிகள், இணையப் பயன்பாடு, முகநூல்பக்க செயல்பாடு, ஒளி ஒலி நவீன கருவி வசதிகள், இவையனைத்தும் இணைந்த Mobile Phone பயன்பாடு என்பன நாட்டியக்கலை வளர்ச்சியில் சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்தவல்லன. அன்று நாம் பரதக்கலை பயின்ற காலத்தில் கிடைத்த வசதி வாய்ப்புகளுடன் ஒப்பிடுகையில் இன்று பரதக் கலை பயில்பவர்களுக்குள்ள வசதி வாய்ப்புகள் மிகவும் முன்னேற்ற கரமானது.


எனவே இன்று (நவீனகாலம்) கலை ஆர்வம் கொண்ட மாணாக்கர்கள் பரதக்கலையினை விரும்பிக் கற்பதற்கான சூழ்நிலையும் வசதிகளும் வாய்ப்புகளும் ஏராளம் எனலாம். எனினும் கணனிமயம் எமது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கு முரணான பல்வேறு திசைகளில் மாணவர்களின் மனத்தை திசைதிருப்பக்கூடிய பாதக சூழ்நிலைகளயும் கொண்டுள்ளது. இன்றைய இயந்திரமயப்பட்ட துரித வாழ்க்கைமுறை மக்கள் மத்தியில் நிம்மதியற்ற, போட்டிச்சூழல் நிறைந்த, மனஅழுத்தம் கூடிய, ஓய்வுநேரமற்ற ஒரு பாதக சூழலை ஏற்படுத்தியுள்ளது. நிம்மதி, தியானம், மனதை ஒருநிலைப்படுத்தல், மனஆறுதல் என்பவற்றை நாடி மக்கள் அங்கலாய்த்தல் உணரப்படுகின்றது. இதற்கான அருமருந்து கலை இரசனையும் ஆன்மீக சிந்தனையும் ஆகும். இங்குதான் நாட்டியம் குறிப்பாக பரத நாட்டியம் முக்கியத்துவம் பெறுகின்றது.தகவல் தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சிக்கேற்ப அதன் பயன்பாடுகளை நாட்டியக்கலை சார்ந்த வல்லுனர்களும் தங்கள் தேவைகளையும் தகவல் வெளிப்பாடுகளையும் விளம்பரப்படுத்தும் உத்திகளையும் உள்வாங்கிக் கொண்டுள்ளார்கள்.

தொடரும்....




நெறியாள்கை:கலாசூரி திவ்வியா சுஜன்




முற்பதிவுக்கு முந்துங்கள்
Bochum, Essen, Dortmund
Lucky Fly Reisebüro
Luckyfly
2016 ஆம் ஆண்டு கோடைகால விடுமுறையைக் கோலாகாலமாகக் கொண்டாட
Bochum, Essen, Dortmund ஆகிய நகரங்களை உள்ளடக்கிய
Lucky Fly Reisebüro வழங்கும் சிறப்பு விலை
Summer holiday offers
2016
Now in Sale
துரித பணமாற்றுச் சேவை!!!
VALUTRANS MONEY TRANSFER
WESTERN UNION WU
MoneyGram
www.Lucky-fly.de
Email: info@lucky-fly.de
Emirates
Graphic Design Vettimaniy Ltd
Helmholtz Str.07
45143 Essen
Tel: 0201-80093764
Fax: 0201-80093749
e.mail:siva 0108 @hotmail.com
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
Rheinische Str 64
44137 DORTMUND
0179 14 84 892
Tel:0234 23 990 32



# யாழ்ப்பாணப் பண்பாடு
# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

## ஆட்பெயர் வழக்காறுகள்

### பனை மரத்திற்கும் பெயர்வைத்த பரம்பரை!

இங்கு யாழ்ப்பாணத்து ஆட்பெயர்கள் பற்றியே (Person name ) நோக்குகின்றோம்.

ஏறத்தாழ ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழங்கிய ஆட்பெயர்கள் ஏதோ ஒரு வகையிலே சில அடிப்படை அம்சங்களைக் கொண்டவையாகவே காணப்பட்டன. ஒருவரின் பெயரைக் கொண்டே அவரின் ஊரை அல்லது கிராமத்தை அல்லது குடும்பத்தை ஓரளவுக்கு அடையாளம் காணக்கூடிய தன்மை இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை காணப்பட்டதெனலாம். ஆங்கிலகல்வி வழி முகிழ்த்த சமூக மாற்றங்களின் விளைவாக ஆட்பெயர்களும் மாற்றம் பெற்றன.

தமிழகத்தின் செல்வாக்குப் பல வழிகளிலும் யாழ்ப்பாணத்தைப் பாதித்திருந்தபோதும் ஆட்பெயர்கள் என்ற வகையிற் செல்வாக்கைச் செலுத்தவில்லை என்றே கூறலாம். பெரும்பாலும் தமிழகத்திலே ஆட்பெயர்கள் குல அடிப்படையில் அல்லது சாதி அடிப்படையிலேயே அமைந்திருந்தன என்பர். யாழ்ப்பாணத்தில் அத்தன்மை பெருமளவிற்குப் பேணப்படவில்லை என்றே கூறலாம்.

யாழ்ப்பாணப் பகுதியிலே இடப்பட்ட ஆட்பெயர்கள் வழிபடு கடவுளரின் அல்லது வழிபடு தலத்தின் பெயராலும் தமது மூதாதையரை நினைவு கூரும் வகையாலும் புராணம் இதிகாசம் கூத்து இவைகளின் செல்வாக்கினாலும் பெருமளவுக்கு அமைந்தன. மிகச்சிறுபான்மையாகப் பொதுவான பெயர்கள் இடப்பட்டதும் உண்டு இப்பண்புகள் இலங்கைத்தமிழ் மக்கள் யாவருக்கும் பெரும்பாலும் பொருந்தும் என்றே கருதுகின்றோம். எமது கள ஆய்வு யாழ்ப்பாணப்பிரதேசத்தை மட்டுமே வைத்து செய்யப்பட்டமையைக் குறிப்பிட வேண்டும். பிற்காலத்தில் அரசியல் செல்வாக்கு தனிமனித ஆளமை, தனித்தமிழ் இயக்கம், நாவல் சிறுகதைகளில் வரும் கதாபாத்திரங்கள்.

### யாழ்பாணப் பெயர் வழக்குகள்

“யாழ்ப்பாணப் பெயர் வழக்குகளை இடப்பெயர்கள் காணிப் பெயர்கள் ஆட்பெயர்கள் அஃறிணைப் பெயர்கள் எனப் பகுத்து நோக்கலாம். யாழ்ப்பாணத்து இடப்பெயர்களைப் பற்றி பலர் ஆய்வு செய்துள்ளனர். சுவாமி ஞானப்பிரகாசர் முதல் பேராசிரியர் இ. பாலசுந்தரம் வரை இத்துறையிலே ஈடுபட்டு உழைத்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரதேசத்துக் காணிகள் அளவீடு செய்யப்பட்டுத் தோம்பு தயாரிக்கப்பட்டபோது காணிப்பெயர்கள் தோம்பிலே பதியப்பட்டுள்ளன. வளவு சீமா குறிச்சி வாரி வத்தை முதலான பல காணிப் பெயர்களைத் தோம்புகளிலே காணமுடிகிறது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பனை தென்னை பசு எருது நாய் பூனை முதலானவற்றைப் பெயரிட்டு அழைக்கும் வழக்காறும் மிக நீண்ட காலத்திலிருந்தே நிலவி வருகின்றது. யாழ்ப்பாணப் பொருளாதாரத்தோடு ஒன்றிப்போன பனை மரத்திற்கும் பெயரிட்டு அழைக்கும் வழக்காறு இன்றும் கிராமப்பகுதிகளில் உண்டு.

செண்பகவரியன் முடத்தி ஆயிரங்காய்ச்சி மாம்பழத்தி முதலான பெயர்களைப் பனைமரத்திற்கு இட்டு அழைப்பர். இவ்வாறே தென்னை மரத்திற்கும் சூரியகாந்தி சந்திரகாந்தி பச்சைதின்னி முதலான பெயர்களை இட்டு அழைப்பர். இப்பண்பு இப்பொழுது மிக அருகிவிட்டது.

இவ்வாறே பசுவிற்கு லக்குமி மீனாட்சி பொன்னி கண்ணாத்தை முதலான ஆட்பெயர்களை இட்டு வழங்குவர்.எருதுக்குப் பூச்சியன் நரையன் தண்டையன் கழுகன் கொம்பன் முதலான பெயர்களை இட்டு வழங்குவர்.

நாய்களுக்கு வீரன் சூரன் வீமன் வெள்ளையன் சிங்கன் முதலான பெயர்களைச்சூட்டி அமைக்கும் வழக்காறும் மிக அண்மைக்காலம் வரை இருந்து வந்துள்ளது. இவ்விடத்திலே நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் வீமா வீமா ஓடி வா அணில் வேட்டையாடிப் பிடித்துனக்கு ஊட்டுவேன் வா வா என்ற பாடலையும் நினைவுகூரலாம்.”

தென்னிந்திய சினிமா முதலானவை ஆட்பெயர் வழக்கில் செல்வாக்குச் செலுத்தின.

மேலைப்புலத்தவரின் வருகையாலும் கிறிஸ்தவத்தின் செல்வாக்கினாலும் சமயச் சார்பற்ற பெயர்களும் இடம்பெற்றன. (கிறிஸ்தவர்கள் கிறிஸ்த்தவ சமயச் சார்பான பெயர்களை வைத்தனர். அவை பற்றிப் பின்னர் விளக்குவோம்.) இன்று புலம்பெயர் தொடர்புகளினாலே புதுவகையான பெயர்கள் சூட்டப்படுவதும் உண்டு. இத்தோடு எண்சாத்திரத்தின் செல்வாக்கினாலும் பெயர்கள் இடப்படுகின்றன. இவற்றிலே பெரும்பாலானவை பொருளற்றவையாகவும் காணப்படுகின்றன. சமூகவியல் நோக்கிலே யாழ்ப்பாணத்திலே வழங்கிய- வழங்கும் ஆட்பெயர்களை ஆராய்வது சுவைபயப்பதாக அமையும்.

### வழிபடு கடவுளர்-தலங்களின் பெயர்கள்

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பிரசித்தி பெற்று விளங்கும் செல்வச்சந்நி நல்லூர் மாவிட்டபுரம் வல்லிபுர ஆழ்வார் வண்ணை வரதராஜப்பெருமாள்இ பொன்னாலைக்கிருஸ்ணர்,நயினாதீவுநாகபூசணிஅம்மன்முதலான தலங்களி லுள்ள தெய்வங்களின் பரியாய நாமங்கள் பெரும்பாலும் பிள்ளைகளுக்கு இடப்பட்டன. தம்ஊரில் தாம் வழிபடும் தெய்வங்களின் பெயர்களையும் பிள்ளைகளுக்குச் சூட்டினர். தமக்குப் பிறக்கும் பிள்ளைக்குத் தாம் வழிபடும் கடவுளின் பெயரை வைப்பேன் என்று நேர்த்தி வைப்பதும் உண்டு. சமூக மேலாண்மையையும், சாதி நிலையையும் பேணுவோர் இவ்வழிபாடு கடவுளரின் பெயர்களைப் பின்னொட்டுக்கள் சோர்த்து நீட்டி வழங்கினர். உதாரணம்:

தொடர்ச்சி 06 ம் பக்கம்...

3ம் பக்கத் தொடர்ச்சி

## மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் வடக்கு கிழக்கில் .....

அதற்கு ஏற்றவாறு மக்கள் சந்திப்புக்களை நடத்த வேண்டும்- புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்திற்காக தென்பகுதியில் உள்ள ஒவ்வொரு சிங்கள அரசியல் கட்சிகளும் மக்களை சந்தித்து உரையாடி வருகின்றனர். தொழிற் சங்க பிரதிநிதிகளிடம் ஆலோசணை பெறுகின்றனர். அதையும் தாண்டி அரசாங்கமும் மக்கள் சந்திப்புக்க ஏற்பாடு செய்கின்றது. ஆனால் வடக்கு கிழக்கில் மக்கள் சந்திப்புகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை. தமிழ் மக்கள் பேரவை கூட மக்களை சந்தித்து உரையாடவில்லை- மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் வடக்கு கிழக்கில் இல்லை. ஆனாலும் தமிழ்த்தேசிய கொள்கையும் நம்பிக்கையும் மக்களிடம் 60 ஆண்டுகளுக்கும் மேலாக மாறாமல் உள்ளது. ஆனால் மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்பவர்கள்தான் கொள்கைகளை விலைபேசி லாபம் ஈட்டுகின்றனர்



5ம் பக்கத் தொடர்ச்சி

## மறந்தவையும் மறைந்தவையும்

வேலன் -வேலாயுதம், வேலுப்பிள்ளை
முருகன் -முருகமூர்த்தி, முருகேசபிள்ளை
கந்தன் - கந்தசாமி, கந்தப்பு, கந்தசாமிப்பிள்ளை
வள்ளி - வள்ளிநாச்சி,வள்ளியம்மை , வள்ளிப்பிள்ளை
தெய்வி - தெய்வானை, தெய்வானைப்பிள்ளை
இவ்வாறு பல பெயர்களைச் சுட்டிக்காட்டலாம்.

ஈழத்துத் தலங்களை நினைவுபடுத்தியது போலவே தமிழகத்துத் தலங்களையும் கடவுளர்களையும் நினைவுகூரும் வகையிலேயும் பெயர்கள் இடப்பட்டன. யாழ்ப்பாணத்திலே செல்வாக்குச் செலுத்திய தமிழகத் தலங்களிலே சிதம்பரம், இராமேஸ்வரம், திருமறைக்காடு, மதுரை மீனாட்சி கோயில்,திருச்செந்தூர் முதலியன முக்கியமானவை இத்தலங்களை இத்தலங்களின் கடவுளர்களை நினைவுகூரும் வகையிலே இடப்பட்ட பெயா களும் உண்டு.

சிதம்பரம் - சிதம்பரநாதன்,சிதம்பரப்பிள்ளை, பொன்னம்பலம்
இராமநாதன்,இராமசாமி
திருமறைக்காடு - வேதவனம் ,வேதநாதன்
மதுரை - மீனாட்சி
திருச்செந்தூர் - செந்தில்நாதன் செந்தூரன் ( சற்றுப் பின்காலம்)
இவ்வாறு பலபெயர்களைச் சுட்டிக்காட்டலாம்.

இன்றும் வழிபடு கடவுளரின் பெயர்கள் இடம்பெறுகின்றன. செந்தூரன் மயூரன் மாதவன் நவநீதன் சிறீராமன் கஜானன் முதலான பெயர்களை உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம்.

"இவ்விடத்திலே யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கிவரும் செவி வழிக்கதையொன்றும் நினைவுகூரப்பட வேண்டியதே ஒல்லாந்தர் காலத்திலே பிறக்கும் பிள்ளைகளைகப் பதிவு செய்யும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டது. அக்காலத்திலே பிள்ளைப்பதிவு என அழைக்கப்பட்ட பதிவு செய்தலை மேற்கொண்ட கிராமத் தலைமைக்காரர்கள் அடித்தளத்தில் உள்ளவர்களின் பிள்ளைகளுடைய முழுப்பெயரையும் பதியாது குறுக்கிக் கந்தன் வேலன் முருகன் தருமன் சின்னவன் எனப் பதிந்ததாகக் கூறப்படுகின்றது. இவை அழகான தமிழ்ப்பெயர்கள் என்பதை அக்காலத்து ஆளும் வர்க்கம் அறிந்திருக்கவில்லை"

**மூதாதையர் பெயர்கள்**

சமூகத்திலே உயர்நிலையில் இருந்த மணியம் உடையார் முதலியார் முதலியோரின் பரம்பரையிலே வந்தவர்கள் தமது குடும்பப் பாரம்பரியத்தை நினைவு கூரும்வகையிலே பெயரிடுவதும் வழக்காறாக இருந்துள்ளது. புவிராசசிங்கன் இபரராசசிங்கன், செகராசசிங்கன் முதலான பெயர்கள் யாழ்ப்பாண அரச பாரம்பரியத்தை நினைவு கூரும் வகையிலே ஆரம்ப காலத்தில் இடப்பட்டன. யாழ்ப்பாணக் குடியேற்றத்துடன் தொடர்புடைய முதலியார்களின் பெயர்களையும் பரம்பரையை நினைவுகூரும் வகையிலே சூட்டியுள்ளனர்.

வண. தனிநாயகம் அடிகளார் ரோமில் கல்விபயிலும் பொழுது தனது மூதாதையரின் பெயரான (தனிநாயகமுதலி) தனிநாயகம் என்பதைத் தனது கிறிஸ்தவப் பெயருடன் சேர்த்துக்கொண்டமையை ஆய்வாளர்கள் அறிவர். இன்றும் நெடுந்தீவிலே தனிநாயகம் என்றபெயர் அவரது மரபினர் பலருக்கு வழங்கி வருவதை அவதானிக்கலாம். இவ்வாறே மழவராயர், குமாரசூரியர் முதலான பெயர்கள் பரம்பரையை நினைவு கூர்வதைக் கண்டு கொள்ளலாம். தமிழகத்திலே முதலியார் என்ற பெயர் சாதிப்பகுப்போடு தொடர்புடையதாக அமைய யாழ்ப்பாணத்திலே அதிகார மேலாதிக்கம் பெற்ற பதவியுடன் தொடர்புடையவாகவே வழங்கியது. முதலியார் பதவி வகித்தவர்களிற் பெரும்பாலானவர்கள் உயர்சாதியைச் சேர்ந்தவர்களே என்பதும் குறிப்பிடத் தக்கது.

சாதாரண குடும்பத்தில் உள்ளவர்களும் தமது மூதாதையரை நினைவு கூரும் வகையிலே பெயர் சூட்டியதும் உண்டு. உதாரணமாக முருகேசு - வேலுப்பிள்ளை, வேலுப்பிள்ளை - முருகேசு, முருகேசு வேலுப்பிள்ளை எனப் பரம்பரையாகப் பெயர்கள் வழங்குவதைக் குறிப்பிடலாம்.

## பேரை உடையவன் தான் பேரன்


பழையகால"உறுதிகளைப்" பார்ப்பவர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொளவர். பெயரை (பேரை) உடையவன் தான் பேரன் என்று கூறும் வழக்காறும் யாழ்ப்பாணத்திலே உண்டு.

**காப்பிய புராணப் பெயர்கள்**

யாழ்ப்பாணத்திலே காவியங்கள் புராணங்கள் இரண்டு வகையிலே பொதுமக்களிடம் செல்வாக்கைச் செலுத்தின. எனக் கொள்ளலாம்.
ஒன்று :புராணபடனம்
இரண்டு: கூத்துக்கள், நாடகங்கள்

புராணபடனத்தின் செல்வாக்கினாலே தமது பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும்போது காவிய, புராணக் கதை மாந்தர்களின் பெயர்களையும் சூட்டினர். கந்தபுராணம்,பெரியபுராணம்,திருவிளையாடற்புராணம், இராமாயணம், மகா பாரதம் முதலானவற்றின் செல்வாக்கினாலும் பெயர்கள் சூட்டப்பட்டன எனலாம். இப்பெயர்களின் குல ஒழுங்கு முறையொன்று பேணப்பட்டது எனக் கருதமுடிகிறது. உதாணம்:
தருமன் - தருமராசா தருமலிங்கம்
நகுலன் - நகுலராசா
இராமன் - இராமநாதன், இராமசாமி, இராமேஸ்வரன்
விஜயன் - விஜயராசா, விஜயநாதன், விஜயசுந்தரம்

இவ்வாறு பலவற்றைச் சுட்டிக்காட்டலாம். காவிய புராணங்களிலே வரும் கெட்ட பாத்திரங்களைப் பெரும்பாலும் பெயராகச் சூட்டுவதில்லை. உதாரணமாக சகுனி, துச்சாதனன், துரியோதனன், சூர்பனகை, தடாதகைஇ நாரதர், அசமுகி, காந்தாரி முதலானவற்றைக் குறிப்பிடலாம். இவை சிலருக்குப் பட்டப்பெயர்களாக அமைவதுண்டு.ஏனையவை


சிவாஜி


ராகினி பத்மினி

காவிய, புராண, கூத்து, நாடக ஈடுபாட்டினால் பெயர்கள் சூட்டப்பட்டது போலவே சினிமா ஈடுபாட்டினாலும் பெயர்கள் சூட்டப்பட்டதும் உண்டு. உதாரணமாக மெற்றாஸ்மயில் (மெயில்) சிவாஜி, சந்திரலேகா, பத்மினி, ராகினி, சறோஜாதேவி முதலானவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

புகழ்பெற்ற நாவல், சிறுகதைகளில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்களையும் சிலர் தம்பிள்ளைகளுக்குச் சூட்டினர். குறிப்பாக மு.வ. அகிலன், காண்டேகர், ஜெயகாந்தன்,மணிவண்ணன் முதலானவர்களின் நாவல்களில் வரும் பாத்திரங்களின் பெயர்களைச் சூட்டினர். நாவலாசிரியர்களின் பெயரையும் சூட்டினர். உதாரணமாக: அகிலன், ஜெயபாந்தன், மணிவண்ணன் முதலான பெயர்களைச் சுட்டிக்காட்டலாம். புகழ் பெற்ற தமிழ் நாவல்களில் வந்த கதாபாத்திரங்களின் பெயர்களையுடைய பலரை யாழ்ப்பாணப் பிரதேசத்திலே காணலாம்.

தனித்தமிழ் இயக்கத்தின் செல்வாக்கினாலே பெயரிட்டவர்களையும் பெயர்களை மாற்றிக்கொண்டவர்களையும் யாழ்ப்பாணத்திலே ஒரு காலத் திலற் காணமுடிந்தது. பாலசுப்பிரமணியம் இளமுருகனாக மாறியமை தனித்தமிழ் இயக்கத்தின் செல்வாக்கினாலேயே எனலாம்.

இந்தியசுதந்திரப்போராட்டத்தினால்ஈர்க்கப்பட்ட இப்பிதேசமக்கள் இந்திய சுதந்திரத்துக்காக உழைத்த தலைவர்களின் பெயர்களையும் சூட்டியுள்ளனர். சுபாஸ் சந்திரபோஸ்இ மோதிலால் நேரு முதாலான பெயர்கள் இச்செல்வாக் கினால் ஏற்பட்டவையே எனலாம்.

தொடர்ச்சி 08 ம் பக்கம்...

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது
உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை
தயாரித்து நாம் வழங்குகின்றோம்!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de

# “அண்ணா, ஐஃபோன் 6 ப்ளஸ் வந்திட்டாம். வேண்டி அனுப்புறியே..“

## சமூகச் சீரழிவுக்கு காரணம் வெளிநாட்டுப் பணமா! அல்லது வளர்ப்பு முறையா காரணம்?






விக்கி விக்னேஷ்
சூரியன் FM செய்தி தொகுப்பாளர்

“அண்ணா, ஐ.்.போன் 6 ப்ளஸ் வந்திட்டாம். வேண்டி அனுப்புறியே..“ “அக்கா, ஜேர்னலிசம் டிப்ளோமா ஸ்ட்டாற் ஆகுது.. ஒரு லட்சம் கட்டினா காணும்.. உடனே போட்டுவிடுவியே...“ “மகன், தம்பி ஏ.எல். எழுதிபோட்டான் தானே.. இப்போ பைக் ஒன்டு கேட்டுகொண்டிருக்கிறான். 2 லட்சம்தானே... அனுப்பிவிடுவியே..“

இப்படி வெளிநாட்டில் இருக்கும் பிள்ளைகளிடம், சகோதரர்களிடம், பெற்றோரிடம், நண்பர்களிடம் யாரிடமும் பணம் கேட்கும் உறவுகளுக்கு, பெரும்பாலும் அந்த பணம் எப்படி கிடைக்கிறது என்பது தெரிவதில்லை.
மனித இயந்திரங்களாக மாறி வெளிநாடுகளில் உழைத்து சேமிக்கின்ற பணம், தாயகத்தில் இருக்கும் உறவினர்களுக்கு அளவுக்கு அதிகமாகவே போய் சேர்ந்து விடுகிறது பெரும்பாலான சமயங்களில்.

இன்னல்களுடன் சேகரித்து அனுப்பி வைக்கப்பட்ட இந்த பணம், எந்த அளவுக்கு பிரயோஜனமான விடயங்களுக்கு பயன்படுகிறது? என்பது அநேகமான நேரங்களில் கேள்விக்குறிதான்.

கடினப்படாமல் கிடைக்கும் எந்த விடயத்துக்கும் பெறுமதிக் கொடுக்கப்படுவதில்லை.

யாரோ ஒரு உறவு உழைத்து அனுப்பிய பணம் கையில் கிடைத்த பின்னர், பெரும்பாலான இளைஞர்கள் அதனை கண்மூடித்தனமாக செலவிடுவது மிகச்சாதாரணமாக நடைபெறும் ஒன்று.

வேண்டிய பொழுதில் பணம் கையில் இருக்கும் என்ற நம்பிக்கை, பணத்தால் செய்யக்கூடிய எந்த காரியத்தையும் துணிந்த செய்ய அவர்களுக்கு தைரியத்தைக் கொடுத்து விடுகிறது.

எந்த குற்றத்துக்கும் பணத்தைக் கொண்டு தப்பிவிடலாம் என்ற அதீத உணர்வை ஏற்படுத்தி விடுகிறது.
இந்த பணமே, அரசியல் நோக்கத்திலும், வியாபார நோக்கத்திலும் தமிழ் பிரதேசங்களில் பரவச் செய்யப்பட்டுள்ள பல்வேறு கலாசார சீர்க்கேட்டு விடயங்களிலும் இளைஞர்ளை ஈடுபட வைத்து விடுகிறது.
போதைப் பொருள் பாவனை முதல், பாலியல் குற்றச் செயல்கள் வரையில் இளைஞர்களை இது கொண்டு செல்கிறது.
இதற்கு வெளிநாட்டு பணம் மட்டும் தான் காரணமா?
ஒரு காலத்தில் கடினமான கட்டுப்பாடுகளுடன் இருந்த சமுகம், திறந்துவிடப்பட்டதைப் போன்ற நிலைமை ஏற்பட்டது.
கூடவே கலாசார சீரழிவுக்கான எல்லா விடயங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டன.
வடக்கு கிழக்கு உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பாடசாலைகளுக்கு முன்பாகவே போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
மாணவர்களை இலக்கு வைத்து இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.
முறைத்தவறும் வகையிலான பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இவை அனைத்தையும் நாடிச் செல்லும் வகையில் ஒரு இளைஞர் பழகிக் கொள்கிறார் என்றால், அந்த பழக்கம் எங்கிருந்து வருகிறது?

பணம் இருக்கும் தைரியம்தான் இதனை எல்லாம் செய்யத்தூண்டுகிறது என்றால், பணம் இல்லாதவர்கள் இந்த தவறுகளை செய்யவில்லையா?
எனவே, இவற்றுக்கெல்லாம் அடிப்படையில்

பிள்ளைகளின் வளர்ப்பு முறையும் ஒரு பிரதான காரணமாக இருக்கிறது.
வளர்ப்பு என்றவுடன் பெற்றோர் மாத்திரமே எமக்கு தெரிகிறார்கள்.
ஆனால் உண்மை அது இல்லை. வளர்ப்பு என்பது சமுகம் தொடர்புபட்டது. சமுகத்தில் குடும்பம், பாடசாலைகள், தொழிலகங்கள், சமுக அமைப்புகள், பொது நிறுவனங்கள், ஊடகங்கள் என அனைத்தும் அடங்குகின்றன.

இந்த பல்வேறு அங்கங்களைக் கொண்ட சமுகம் ஒரு இளைஞனை எவ்வாறு வளர்க்கிறது? அவனுக்கு எவ்வாறான விடயங்களை ஊட்டுகிறது? என்பதிலேயே அவனது சீரான வளர்ச்சியும், நல்லொழுக்கமும், சீரழிவற்றத் தன்மையும் அமைந்துபோகிறது.
சமுக வளர்ப்பே ஒரு இளைஞனுக்கு பக்குவத்தை தருகிறது.

வெளிநாட்டில் இருந்து தாம் பெற்ற பணத்தை சம்பாதிக்க தமது உறவு எவ்வளவு சிரமப்பட்டிருக்கும் என்பதையும், இந்த பணத்தை எப்படி பிரயோஜனமாக செலவிடலாம் என்பதையும் பகுத்தறிந்து தீர்மானிப்பதற்கு அந்த பக்குவமே துணைபுரிகிறது.

எனவே, ஒரு இளைஞனுக்கு சீரழிவற்ற முறையான வளர்ச்சியை தருவதற்கு, சமுகத்தின் வளர்ப்பு அத்தியாவசியம் என்பது புலனாகிறது.
சமுகத்தின் வளர்ப்பு சரியாக இருந்தால், இளைஞன் சீரழிந்து போகாமல் இருக்கும் பக்குவத்தை பெற்றுக் கொள்கிறான்.





கஸ்ரொப் றவுக்சல் தமிழாலயத்தின் தைப்பொங்கல் விழா







## பொங்கல் விழா Dortmund

கஸ்ரொப் றவுக்சல் தமிழாலயத்தின் தைப்பொங்கல் விழா 16.01.2016 அன்று தமிழாலய மாணவர்கள்,ஆசிரியர்கள்,நிர்வாகத்தினர் மற்றும் பெற்றோர்களாலும் நகர மக்களாலும் இணைந்து கொண்டாடப்பட்டது.விழாவைச் சிறப்பிக்க வருகை தந்த சிறப்பு விருந்தினர்கள். கஸ்ரொப் றவுக்சல் நகரபிதாஅவர்கள் (Herr Kravanja) கஸ்ரொப் றவுக்சல் நகர கலைச்சாரப் பிரிவுப் பொறுப்பாளர் Integrationsbeauftragte Frau Dalkilinc தமிழாலயத்தின் மாநிலச் செயற்பாட்டாளர் திரு.தா. நற்குணராஜா கலைநிகழ்வுகள் சிறப்பாக இடம் பெற்றன.

5ம் பக்கத் தொடர்ச்சி

## மறந்தவையும் மறைந்தவையும்

தமிழ் இலக்கிய இலக்கணப் பரிச்சயமுடையவர்கள், ஈடுபாடு உள்ளவர்கள் தமது பிள்ளைகளுக்கு இலக்கிய கர்த்தாக்களின், உரையாசிரியர்களின் பெயர்களளையும் சூட்டியுள்ளனர். இளங்கோ, கபிலன், இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலான பெயர்களை இந்த வகைக்கு உதாரணமாகச் சுட்டலாம். அத்துடன் தமிழ் இலக்கியங்களிலே இடம்பெறும் அரசர்களின் பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன. உதாரணமாக சேரன், மாறன், வழுதி, செழியன், அகளங்கன், முதலான பல பெயர்களைச் சுட்டிக்காட்டலாம்.

புகழ் பெற்றவர்களளின் சாதனையாளர்களின் பெயர்களைச் சூட்டுவதும் வழக்காறாக உள்ளது. விவேகானந்தன், இராமகிருஷ்ணன், பாரதி, இராதாகிருஷ்ணன், ராஜாராம், முதலான பெயர்களை இந்த வகைக்கு உதாரணமாகச் சுட்டலாம்.

தி.மு கழகத்தின் புகழ் பரவத் தொடங்க, அதனாலீர்கப்பட்டவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தி.மு.க தலைவர்களின் பெயர்களையும்சூட்டினர். உதாரணமாக கருணாநிதி, அண்ணாத்துரை, மதியழகன், நெடுஞ்செழியன், கண்ணதாசன் முதலான பெயர்களைச் சுட்டிக்காட்டலாம்.

மேலைப்பலத்தவரின் வருகையாற் பரவிய கிறிஸ்த்தவத்தின் செல்வாக்கினாலே பாரம்பரியப் பெயர்கள் கைவிடப்பட்டுப் பொதுவான பெயர்கள் சூட்டப்பட்டன. தமிழ் மக்கள் சைவக்கடவுளரின் பெயரைச் சூட்டுவதை அக்கால கிறிஸ்தவ தலைமை விரும்பவில்லை. எனவே கிறிஸ்தவ ஞானஸ்நானப் பெயரோடு பொதுவான பொருள் தரும் பெயர்களையே சூட்டினர். உதாரணமாக ஜெபநேசன், ஜெயசீலன், ஜெயசிங்கம், ஜெபமோகன் முதலான பெயர்களைச் சுட்டிக்காட்டலாம். கிறிஸ்த்தவத்திலும் ரோமன் கத்தோலிக்க மதத்தினரின் பெயர்களுக்கும் புரட்டஸ்தாந்து மதத்தவரின் பெயர்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமை தனியே ஆராயப்படவேண்டியது. பெரும்பாலும் கத்தோலிக்க மதத்தவர்கள் தமது சமயத்தொண்டர்கள் இறைதூதர்கள் முதலானோரின் பெயர்களைத் தமிழ்ப்பண்பாட்டு மரபுக்கு இயைவாக இட்டுள்ளனர். உதாரணமாக அந்தோனிப்பிள்ளை, செபஸ்ரியாம்பிள்ளை, மரியாம்பிள்ளை, தைரியநாதன், சிமியாம்பிள்ளை, யேசுராஜா முதலிய பலவற்றைக் குறிப்பிடலாம். இவை தனியே ஆய்விற்கு உட்படுத்தப் வேண்டியவை:

யாழ்ப்பாணத்திலே செல்லப்பெயர்கள் வைத்து அழைக்கும் வழக்காறு இன்றுவரை நின்று நிலைக்கின்றது. மிக நீண்டகாலமாவவே இம்மரபு தொடர்ந்து வருகின்றது. கிளி, குஞ்சு, குட்டி, கட்டி முதலானவற்றைச் சான்றாகக் காட்டலாம். இயற்பெயர் மறைந்து ஊர்களிலே செல்லப்பெயர்கள் நின்று நிலைப்பதும் உண்டு.

குடும்ப உறவுநிலை அடிப்படையில் வழங்கும் பெயரே இயற்பெயரை மறைத்து நின்று நிலைப்பதும் உண்டு. உதாரணமாகப் பெரியதம்பி, பெரியராசா, சின்னராசா (இவை இயற்பெயராக அமைவதுமுண்டு) சின்னத்தங்கச்சி முதலானவற்றைச் சுட்டிக்காட்டலாம். இன்றும் இவ்வழக்கு உண்டு.

செல்லப்பெயர்களைப் போலவே இயற்பெயரோடு இணைத்து பட்டப்பெயர்களும் வழங்குவதுண்டு. பட்டப்பெயர்கள் வழங்குவதற்குப் பல காரணங்கள் உளவேனும் இரண்டு காரணங்கள் மிக முக்கியமானவை எனலாம்.

ஒன்று குணவியல்போடு பொருத்திக் கூறுவது. ஊரிலே ஒருவரின் குணவில்புகளை அவதானித்த ஒருவர் ஒரு பட்டப்பெயரைச் சூட்டியிருப்பர். அப்பெயர் பிரசித்தி பெற்று ஊர்முழுவதும் வழங்கும். நாளடைவில் இயற்பெயர் மறைந்து பட்டப்பெயரே நிலைப்பதும் உண்டு. உதாரணமாக எதிரி பொன்னையா ( எந்த விடயத்தையும் துணிச்சலாகத் தைரியமாக எதிர்த்து நிற்பவர்) காடர் சிதம்பரப்பிள்ளை (சண்டித்தனம் முரட்டுச் சுபாவமுடையவர்) விகட சுப்பு (நகைச்சுவையாகப் பேசுபவர் செயற்படுபவர்) முதலான பலவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

இரண்டு: உடலுறுப்புக்கள், தோற்றம் முதலியவற்றைக் கொண்டு வழங்கும் பட்டப்பெயர்கள். உதாரணமாக குருட்டுக்குமாரு, நுளம்புச் சின்னையா, கொசுவல்லியார், ஓட்டைச்சுப்பர் (இவருக்கு முன்பல்லுஇல்லை) சொத்தி சின்னத்துரை, கறுவல் கந்தையா முதலான பலவற்றைக் குறிப்பிடலாம். இப்பட்டப் பெயர்கள் ஊரிலே நிலைபெற்று விடும். பட்டப்பெயருக்குரியவர் இறந்த பின்னரும் இப்பெயர்கள் அழியாது வழங்குவதுமுண்டு. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழங்கும் பட்டப்பெயர்களைத் தொகுத்து ஆராய்வது சுவைபயப்பதாய் அமையும்.

பட்டப்பெயர்களோடு தொடர்புடையதாக அமையும் இன்னொரு வகைப்பெயர்களும் கிராமங்களிலே வழங்குவதுண்டு. குடும்பம், குறிச்சி, காணி இவைகளை முன்னெட்டாகச் சேர்த்து இப்பெயர்கள் வழங்கும். பெரும்பாலும் இவை காலப்போக்கில் மறைந்து விடுவதுமுண்டு.

தற்போது யாழ்ப்பாணப் பிரதேசத்திலே இடப்படும் பெயர்கள் புலம்பெயர் வாழ்வினாலும் எண்சாத்திர முறைமையினாலும் பெருமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளன. இப்பெயர்கள் எமது சூழலுக்கு இயைவு படாமலும், பொருளற்றவையாகவும், எதிர்ப்பொருளைத் தருபவையாகவும் அமைவதை அவதானிக்கலாம். உதாரணமாக டிவிசன், டிவிசி, டிலூாசன் என்று பெயரிட்டு விட்டு வீட்டிலே டிலூாசனை, லூாசன் என்று குறிப்பிடுகின்றார்கள்.

பெற்றோர் தமது பிள்ளைகளுக்குப் பெயரிடும் பொழுது ஏதோ ஒரு வகையிலே தமது மனநிறைவை மனங்கொண்டே செயற்படுகின்றனர். பிள்ளைகளின் பெயருக்கும் பெற்றோரின் உளநிலைக்கும் நெருக்கமான உறவுண்டு எனலாம்.

இன்னும் அடுத்த இதழில்...




# நரம்புப் பாதிப்புக்குள்ளான சிறுநீர்ப்பை நோயைக் கணித்தலும் மருத்துவமும்!



**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

சிறுநீர் கழித்தல் பிரச்சனைகள் - நரம்புப் பாதிப்பிற்குள்ளான சிறுநீர்ப்பை - இந்தப்பிரச்சனை ஒருவருக்கு இருக்கிறதா என்பதை அறிய மருத்துவர் என்னென்னசெய்யக்கூடுமென்பதை அடுத்துப் பார்க்கலாம்.

**உடற் பரிசோதனை**

பெரும்பாலும் நோயாளியிடம் கேட்டறிவதன் மூலம் மட்டுமே பிரச்சனையை அவர்கள் புரிந்து கொள்வார்கள். நோயின் அறிகுறிகளை விபரமாகக் கேட்டு அறிவதுடன் அது எப்பொழுது ஆரம்பித்தது, அருந்தும் நீராகாரங்கள் எவை எவ்வளவு, எந்த நேரத்தில் அருந்துவதுண்டு போன்ற விடயங்களையும் கேட்டு அறிவார்.
உடற் பரிசோதனையின்போது வழமையான பிரஷர், இருதயத் துடிப்பு, நாடித்துடிப் போன்றவற்றை அளவிடுவதுடன் வயிற்றைப் பரிசோதித்து சிறுநீர்ப்பை வீங்கியிருக்கிறதா என்பதை அறிவதுடன், மலவாயில் ஊடாக விரல் பரிசோதனை செய்து புரஸ்ரேட் சுரப்பி வீங்கியிருக்கிறதா என்பதையும் அறிய முயல்வார்.

ஆய்வுப் பரிசோதனை கிருமித் தொற்று உள்ளதா என்பதை அறிய குருதி மற்றும் சிறுநீர்ப் பரிசோதனைகள் உதவும்.
வயிற்றறை ஸ்கான் பரிசோதனை (US Scan Abdomen) ஒரு முக்கிய ஆரம்ப கட்ட பரிசோதனையாகும்.

புரஸ்ரேட் சுரப்பி வீங்கியிருக்கிறதா என்பதை இதன் மூலம் அறிய முடியும். ஆண்களிடட புரஸ்ரேட் சுரப்பி வீக்கம் காரணமாகவே பெரும்பாலான சிறுநீர் கழித்தல் பிரச்சனைகள் ஏற்படுவதால் இதை செய்வார்கள்.

சிறுநீர் கழித்த பின்னரும் சிறுநீர்ப்பையில் சிறுநீர் முழுமையாகக் கழியாது மீதி தேங்கி நிற்கிறதா என்பதை அறியவும் வயிற்றறை ஸ்கான் பரிசோதனை உதவும். சிறுநீரகத்தின் நிலையையும் கண்டறிய முடியும்.
இப் பரிசோதனை தெளிவாக இருக்க வேண்டுமாயின் குறைந்தது 5 மணிநேரம் உணவு தேநீர் போன்றவை அருந்தாமல் பரிசோதனை அறைக்குச் செல்ல வேண்டும்.


சிறுநீரை முழுமையாக வெளியேற்றிய பின்னர் செல்லக் கூடாது. சிறுநீர் இருந்தால்தான் அதைக் கழித்த பின்னரும் தேங்கி நிற்கிறதா என்பதை அறிய முடியும். இது முக்கியமானது.

சிஸ்டஸ்கோப்பி (Cystoscopy) பரிசோதனை என்பது சிறுநீர்க் குழாய் ஊடாக நுண்ணிய கமராவைச் செலுத்தி சிறுநீர்ப்பையில் பிரச்சனை எங்குள்ளது என்பதைக் கண்டறியச் செய்யப்படுவதாகும். இது அதற்கான நிபுணத்துவ மருத்துவரால் செய்யப்பட வேண்டியதாகும்.
சிறுநீரானது சிறுநீர்ப்பையில் எவ்வாறு வருகிறது, தேங்கி நிற்கிறதா, எவ்வாறு வெளியேறுகிறது போன்றவற்றை Urine flow test- Urodynamic என்ற பரிசோதனை மூலம் கண்டறிவர். இவற்றைத் தவிர எக்ஸ்ரே, சிரி ஸ்கான் (X Ray CTScan) பரிசோதனைகளும் தேவைப்படலாம்.

**மருத்துவம்**

நாளாந்தம் தொல்லைப்படுத்தும் அடிக்கடி கழிதல், சிந்துதல், கட்டுப்பாடின்றிக் கழிதல், சிறுநீர்ப்பையில் தேங்கி நிற்றல் போன்ற பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெறுவதே சிகிச்சையின் முக்கிய நோக்கமாகும். சிறுநீரகத்துக்கு பாதிப்பு ஏற்படாது தடுப்பதும் கிருமித் தொற்று ஏற்படாது தடுப்பதும் சிகிச்சையின் இலக்காகும்.

சிகிச்சையைப் பொறுத்தவரையிடட அதீதமாகச் செயற்படும் சிறுநீர்ப்பை, மந்தமாகச் செயற்படும் சிறுநீர்ப்பை ஆகியவற்றுக்கான சிகிச்சை முறைகள் வேறுபடும்.




Overactive/Spastic Bladder

அதீதமாகச் செயற்படும் சிறுநீர்ப்பை (Overactive/Spastic Bladder) இதன் முக்கிய அம்சம் தவிர்க்க முடியாதவாறு திடீர் என எழும் சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உணர்வு. சில வாழ்க்கை முறை மாற்றங்களைச் செய்வதன் மூலம் அறிகுறிகளை ஓரளவு கட்டுப்படுத்த முடியும்.

சிறுநீர் கழிப்பதைத் தாமதப்படுத்தப் பழகல். சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டதும் உடனடியாக கழிப்பறைக்குச் செல்லாதீர்கள். மனத்தை சற்று அடக்கி கழிப்பறை செல்வதைத் தாமதப்படுத்துங்கள். ஆரம்பத்தில் ஒரு சில நிமிடங்களுக்கு மட்டுமே ஒருவரால் தாமதப்படுத்த முடியும். ஆயினும் தொடர்ந்து செய்து வரும்போது ஒரு சில மணிநேரத்துக்கும் தாமதப்படுத்தும் ஆற்றல் கிட்டிவிடும்.

நேரங்குறித்து சிறுநீர் கழிப்பது மற்றொருமுறையாகும். உணர்வு ஏற்பட்டவுடன் கழிக்கச் செல்லாது இரண்டு முதல் நாலு மணிநேர இடைவெளியில் கழிப்பதென தீர்மானம் எடுத்து அந்த நேரத்தில் மட்டும் கழிப்பறை செல்வதாகும். சிறுநீர்ப்பை பயிற்சிகள் உதவும். சிறுநீர்ப்பையையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள தசைகளையும் (pelvic muscles) இறுக்குவதும் தளர்த்துவதுமான பயிற்சி உதவும். சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கும்போது அதை அவசரமாக நிறுத்த வேண்டுமாயின் உங்கள் பிறப்புறுப்புப் பகுதியில் உள்ள தசைகளை எம்மை அறியாமல் இறுக்கும். இதேபோல சும்மா இருக்கும் வேளைகளில் இறுக்குவதும் தளர்த்துவதுமே,அப்பயிற்சியாகும்.

அதீத எடையுள்ளவராயின் அதை பொருத்தமான எடைக்குக் குறைப்பதாலும் ஓரளவு கட்டுப்பாடு கிட்டும். தசைகளைத் தளர்த்தும் மருந்துகள் உதவும். Oxybutynin, tolterodine போன்றவை உதாரணங்களாகும்.

**தொடர்ச்சி 10ம் பக்கம்...**



**T.T.S.Brothers GmbH&Co.KG**

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd

09 பக்கத் தொடர்ச்சி

## நரம்புப் பாதிப்புக்குள்ளான சிறுநீர்..



ஆயினும் இவற்றை மருத்துவரின் ஆலோசனையுடன் அவரது கண்காணிப்பின் கீழ் மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

மந்தமாகச் செயற்படும் சிறு நீர்ப்பை (Underactive/Flaccid Bladder) இப்பிரச்சனையின் போது நீங்கள் சிறுநீர் கழிக்க முயன்றாலும் முழமையாக வெளியேற்ற முடியாதிருக்கும்.

அல்லது சொட்டுச் சொட்டாகவே வெளியேறும்.நேரங்குறித்து சிறுநீர் கழிப்பது இங்கும் உதவலாம். உணர்வு ஏற்பட்டவுடன் கழிக்கச் செல்லாது இரண்டு முதல் நாலு மணிநேர இடைவெளியில் கழிப்பதென தீர்மானம் எடுத்து அந்த நேரத்தில் மட்டும் கழிப்பறை செல்வதே இம்முறையாகும். மீண்டும் முயல். ஒரு முறை கழிக்கும்போது முழுமையாக வெளியேறாது விட்டால் சில நிமிடங்களில் மீண்டும் முயற்சித்தால் வெளியேறலாம்.

குழாய் மூலம் அகற்றுவது மற்றொரு முறையாகும். ஒரு நாளுக்கு 4 தடவைகள் இவ்வாறு தாங்களே மிகவும் சுத்தமான முறையிடட கிருமித் தொற்று ஏற்படாதவாறு செய்யலாம். சிறுநீர்த் துவாரத்தின் ஊடாக அதற்கான கதீட்டர் எனப்படும் குழாயை சிறுநீர்ப்பையினுள் செலுத்துவதன் மூலம் அகற்ற முடியும். தங்களால் முடியாவிடில் வீட்டில் உள்ளவர்களைக் கொண்டு செய்யலாம். Clean Intermittent Catheterization(CIC) எனச் சொல்லுவார்கள்.

இருந்தபோதும் சிலருக்கு குழாயை மீண்டும் மீண்டும் போடாமல் தொடர்ந்து வைத்திருக்க நேரும். இதை Continuous Catheterization எனச் சொல்லுவார்கள். மிகச் சிலரில் சத்திர சிகிச்சைகளும் தேவைப்படலாம். சுருக்கித் தசை sphincter தசைநார்களை இளக்குவது, செயற்கை சுருக்கித் தசைகளை பொருத்துவது, வேறு பாதையால் சிறுநீரை அகற்றுவது போன்ற பல்வேறு வகையான சத்திர சிகிச்சைகள் நோயின் தேவைக்கு ஏற்பச் செய்யப்படும். இவை சிறுநீர்த்தொகுதி சத்திரசிகிச்சிசை நிபுணர்கள் தீர்மானித்துச் செய்ய வேண்டியவையாகும்.

அதீதமாகச் செயற்படும் சிறுநீர்ப்பை (Overactive/Spastic Bladder) மற்றும் மந்தமாகச் செயற்படும் சிறுநீர்ப்பை (Underactive/Flaccid Bladder) என இருவகையான சிறுநீர்ப்பை நோய்கள் பற்றியே இங்கு பேசினோம்.

ஆயினும் நீரிழிவு நோயாளர்களில் இவை இரண்டும் கலந்த வகையான பிரச்சனை ஏற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சிபிலிஸ் எனப்படும் பாலியல் நோயிலும் அவ்வாறு இரண்டும் கலந்த பிரச்சனை ஏற்படுகிறது.

அதீத மதுப் பாவனை, பக்கவாதம், விட்டமின் பீ12 குறைபாடு, எயிட்ஸ் போன்றவையும் நரம்புப் பாதிப்பிற்குள்ளான சிறுநீர்ப்பை பிரச்சனையை ஏற்படுத்தலாம்.












# யார் மனதில் யார் இருப்பார்

பிரியமானவர்களோ அன்றில் முக்கியமானவர்களாக நாம் கருதுபவர்களோ எம்மைக் கண்டு கொள்ளாதிருப்பதை விடஇ எம் மேல் பிரியமானவர்களையோ அன்றில் எம்மை நேசிப்பவர்களையோ நாம் கண்டு கொள்ளாமலோ, கருத்தில் கொள்ளாமலோ விட்டு விடுவது கவலைக்குரியது. அவர்களை மீண்டும் ஒரு முறை சந்திக்கும் வாய்ப்பு வாழ்வில் வந்து விடாமலே போய் விடலாம்.

அப்படித்தான் அவனும். நினைவுகளில் மட்டும் அவ்வப்போது வந்து முகம் காட்டிப் போவான்.

அவனை நான் முதன் முறையாக மணியம் ரியூற்ரறியில்தான் பார்த்தேன். அது 1975ம் ஆண்டில் ஒரு நாள். அப்போது நான் க.பொ.த உயர்தரத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அன்று இரசாயனவியல் வகுப்பு முடிந்து, பிரயோககணித மாஸ்டருக்காக ரியூற்றறியின் பின்புற முற்றத்தில் நாங்கள் காத்திருந்தோம். மாணவிகளுக்கு என அந்த இடந்தான் ஒதுக்கப் பட்டிருந்தது. ஆண் மாணவர்கள் வழமை போல ஹகேற்´றோடு கூடிய முன் முற்றத்தில் நின்றார்கள்.

சிரிப்பும்இ கதையுமென அவ்விடம் கலகலப்பாகவே இருந்தது. அப்போதுதான் பானுமதியை அவன் தூது விட்டிருந்தான். காதல் தூது.

பானு என்னருகில் வந்து “நிமிர்ந்து பார். அந்த யன்னலோடை நிற்கிறானே அவனைப் பார்“ என்று குசுகுசுத்தாள். பார்த்தேன்.

யன்னல் கம்பிகளினூடு அவன் என்னையே பார்த்துக் கொண்டு நின்றான். வெள்ளையாக, மற்றவர்களிலிருந்து வித்தியாசமாகத் தெரிந்தான். அந்தப் பார்வையில் ஏதோ ஒரு எதிர்பார்ப்புஇ ஏக்கம்இ இறைஞ்சல், காதல். சட்டென தலையைத் தாழ்த்திக் கொண்டேன்.

„அவனுக்கென்ன இப்ப..?“
“அவனுக்கு உன்னிலை விருப்பமாம். சொல்லச் சொன்னவன்“

விருப்பமா?

ஏற்கெனவே ஒருத்தனை விரும்பியிருப்பதால் அப்போது நான் எனது வீட்டில் ஒரு குற்றவாளியாகவே நடமாடிக் கொண்டிருந்தேன். „அவனை மறந்து விடு“ என்பதுதான் அனேகமான பொழுதுகளில் எனது வீட்டில் ஒலிக்கும் திருமந்திரம். என்னோடு பேசும் போதெல்லாம் அம்மாவின் கண்கள் கரைந்து தாரை தாரையாக ஓடும். மூன்று தங்கைகளுக்கு அக்காவாக இருந்து கொண்டு எப்படி என்னால் காதலிக்க முடிந்தது என்பது வீட்டில் யாருக்குமே புரியாத புதிர். நான் செய்து கொண்டிருக்கும் இம் மாபெரும் குற்றத்தால் வீடு ஒரு சோகவனமாகி இருந்தது. அம்மா அடிக்கடி சாப்பாட்டை மறந்துஇ கண்களை மேலே சொருகி யோசித்துக் கொண்டேயிருந்தா. அம்மம்மா என்னைக் காணும் போதெல்லாம் அவனை மறந்து விடுவதாக தனது தலையலடித்துச் சத்தியம் செய்யச் சொல்லி திருப்திப் பட்டுக் கொண்டா. அவ்வப்போது அப்பா தந்தியடித்து வரவழைக்கப்பட்டார். கடிதம் பரிமாறிய நாட்களில் செய்தி கிடைத்து அண்ணன் என் மண்டை பிளக்காத குறையாக குட்டினான். எங்கு போனாலும் துணைக்கு தம்பி கூடவே வந்தான்.



**சந்திரவதனா**

வீட்டுக்கு வெளியிலே வந்தால் ஊரவர் „பதின்னாலு, பதினைஞ்சு வயசிலை காதல் ஒரு கேடோ“ என்பது போலப் பார்த்தார்கள்.

நண்பர்கள், பாடசாலைத் தோழிகள் கூட „மறந்து விடு“ என்று புத்திமதி சொன்னார்கள். இந்த நிலையில் இன்னொரு காதல் தூதா?

மீண்டும் பார்த்தேன்.

அவன் என்னையே பார்த்துக் கொண்டு நின்றான். சிவந்த அழகான உதடுகள். ஊடுருவிப் பார்க்கும் கண்கள். அழகாகத்தான் இருந்தான். ஆனாலும் ஏனோ அவன் மேல் எனக்கு எந்த ஈடுபாடும் வரவேயில்லை.

அதன் பின்னும் சில தடவைகள் தூதுகள் வந்தன. என்னால் அவனை விரும்பவே முடியவில்லை. அவன் என்ன படிக்கிறான் என்றோ அவனுக்கு என்ன பெயரென்றோ கூட நான் அறிய விழையவில்லை. அப்படியே காலங்கள் கரைந்தன. என் தோழிகள் இன்னும் படித்துக் கொண்டே இருக்க நான் காதலித்தவனையே திருமணம் செய்து மூன்று குழந்தைகளுக்குத் தாயாகியும் இருந்தேன். எனது உலகம் குழந்தைகள்இ கணவர் என்ற வட்டத்துக்குள் குறுகிப் போயிருந்தது.

அப்போதுதான் எனது மைத்துனர்கள் எல்லோரும் வெளிநாடு சென்று விட எனது புகுந்த வீட்டில் எனது மாமிக்குத் துணையாக மாமியோடு போய் வாழ வேண்டிய தேவை வந்தது.

போய் சில நாட்களிலேயே அந்த அவனின் தரிசனம் எனக்குக் கிடைத்தது. கையில் ஓரிரு கொப்பி, புத்தகங்களுடன் அவன் அவ்வப்போது சைக்கிளில் மாமி வீட்டைத் தாண்டிப் போவான்.

அவன் மாமி வீட்டிலிருந்து நான்கைந்து வீடுகள்தான் தள்ளியிருந்தான். அவர்களுக்குக் கொஞ்சம் சொந்தமாகவும் இருந்தான்.

மாமி அவனைப் பார்த்துச் சிரிப்பா. ஓரிரு கதைகள் அவனோடு கதைப்பா. எப்போதோ ஒரு நாள் எனக்குக் காதல் தூது அனுப்பியவன் என்ற நினைவு உள்ளிருந்தாலும் நான் எந்த உணர்வையும் காட்டிக் கொள்வதில்லை. மருந்துக்குக் கூட அவனைப் பார்த்துச் சிரிப்பதுவுமில்லை. பேசாமல் ஓரமாய் நின்றிருப்பேன். விழிகள் மட்டும் எப்போதாவது எதேச்சையாக மோதிக் கொள்ளும்.
பிறத்தி ஆண்களைப் பார்த்துச் சிரிக்கக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வு அப்போது எல்லாப் பெண்களிடமும் இருந்திருக்கும். அதுதான் நான் ஒரு தடவை கூட அவனைப் பார்த்து ஒரு புன்முறுவல் கூட பூக்காது விட்டதற்குக் காரணமாக இருக்கலாம்.

காலம் எது பற்றியும் யோசிப்பதில்லை. அது தன்பாட்டில் ஓடிக் கொண்டேயிருந்தது. எனது கடைசி மகன் கிண்டர்கார்டின் போகத் தொடங்கினான். பெரும்பாலான நாட்களில் மகனை கிண்டர்கார்டனில் இருந்து கூட்டி வர நான் தான் சமைத்த குறையிலே சேலையைச் சுற்றிக் கொண்டு ஓடிப் போக வேண்டியிருக்கும்.
கிராமக்கோட்டு வைரவர் கோயிலடியில் இருந்து கிராமக் கோட்டுச் சந்தி தாண்டி வடமாராட்சிப் பாடசாலை ஒழுங்கை வரை நடந்து போய் அவனைக் கூட்டி வருவதற்கிடையில் நிறையப் பேரையும், நிறைய விடயங்களையும் வழி வழியே காண்பேன்.

தொடர்ச்சி 12ம் பக்கம்







11 ம் பக்கத் தொடர்ச்சி...

## யார் மனதில் யார் இருப்பார்



வைரவர் கோவிலில் மணி கிணுகிணுக்கும். வாசலிலோ, கோயிலின் முன் முற்றத்தில் விறாந்தையை ஒட்டியோ கற்பூரம் எரிந்து கொண்டிருக்கும். யாராவது கும்பிட்டுக் கொண்டிருப்பார்கள். அல்லது சப்பாணியில் தியானத்தில் இருப்பார்கள். இரத்தினக்காவோ, கமலாக்காவோ, லலியக்காவோ வீட்டு வாசல்களில் நின்று என்னைக் குசலம் விசாரிப்பார்கள். பாலாம்பிகையக்கா வீதியைக் கடந்து எங்காவது போய்க் கொண்டிருப்பா. பேருந்து, சைக்கிள்கள் என்று எதிரும் புதிருமாய் வாகனங்கள் விரையும். கிராமக்கோட்டுச் சந்தியில் இருக்கும் பெரிய கல்லில் பெரும்பாலும் சாராயக்கடை துரைசிங்கத்தின் மகன் பொடி இருப்பான். பலர் சந்தியில் குறுக்கும் நெடுக்குமாய் விரைந்து கொண்டேயிருப்பார்கள்.

இத்தனை களேபரங்களுக்கும் நடுவில் எப்போதும் அவனும் வருவான். எதிர்புறத்திலிருந்து சைக்கிளில் வருவான். அவன் கையில் உள்ள புத்தகமோ, கொப்பியோ அவன் படிக்கிறான் என்றே என்னை எண்ண வைக்கும். ஒரு சில சமயங்களில் அவன் என்னைத் தாண்டும் பொழுது விழிகள் ஒரு கணம், ஒரேயொரு கணம் மோதிக் கொள்ளும்.

அவன் எதேச்சையாகத்தான் ஒவ்வொரு முறையும் வந்தானா அல்லது நான் மகனைக் கூட்டப் போகும் நேரம் பார்த்து வந்தானா என்பது எனக்கு இன்று வரை தெரியாது. ஆனால் அவன் கண்டிப்பாக வருவான், என்னைத் தாண்டிப் போவான் என்பது மட்டும் ஒரு கட்டத்துக்குப் பிறகு எனக்குத் தெரிந் திருந்தது.

தொடர்ந்த காலங்களில் போர், புலம்பெயர்வு என்று வாழ்க்கையே மாறிப்போனது. அப்போதெல்லாம் அவன் என் நினைவில் வந்தானா, இல்லையா என்பதே நினைவில் இல்லை.

வருடங்கள் கிட்டத்தட்ட 20 க்கு மேல் ஓடிய பின் ஒரு நாள் லண்டனில் வசிக்கும் எனது தங்கையுடன் தொலை பேசியில் பலவிதமான கதைகளையும் கதைத்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் "எங்கட ஊர்தான், ஒருவன் நான் முந்தியிருந்த இடத்திலை எனது பிளாற்றிலை, பக்கத்து றூமிலைதான் இருந்தவன். மாமியின்ரை சொந்தமாம். திடீரென்று செத்திட்டானாம்" என்றாள் தங்கை.

யாரென நான் துருவித் துருவி விசாரித்த போதுதான் அது அவன் என்று தெரிய வந்தது. மனம் ஒரு முறை துணுக்குற்றது.

அவன் திருமணமே செய்து கொள்ளவில்லையாம்.

ஏன்..?

அதன் பின் சிலகாலம் அவன் பற்றிய நினைவுகள் என்னுள் ஓடிக் கொண்டேயிருந்தன. ஏன் ஒரு தரம் கூட நான் அவனுடனோ அல்லது அவன் என்னுடனோ பேசவேயில்லை என்ற கேள்வி எனக்குள் எழுந்து கொண்டேயிருந்தது. ஒரு சகோதரன் போல நினைத்தாவது பேசியிருக்கலாமே! அல்லது ஒரு நண்பன் என்ற ரீதியிலாவது அவனைப் பார்த்து புன்னகைத்திருக்கலாமே! மனசு அங்கலாய்த்தது.

காலம் ஓடிக் கொண்டேயிருக்கிறது. அவனை என் நினைவுகளில் இருந்து அத்தனை சுலபமாக தூக்கியெறிந்து விட முடியவில்லை. எப்போதும் இல்லாவிட்டாலும், அவ்வப்போது அவன் என் நினைவுகளில் வந்து போய்க் கொண்டுதான் இருக்கிறான்.


சந்திரவதனா 19.01.2015












## முகப் புத்தகத்தில் சுட்டவை



# இரண்டாம் பிறப்பு

காலை நேரம்., அலுவலகத்திற்கு கிளம்பியாக வேண்டும் நான்.
செய்தித் தாளை எடுத்துப் பார்க்கிறேன், கண்ணீர் அஞ்சலி அறிவிப்பில் எனது புகைப்படம்.
அய்யோ....

என்ன ஆயிற்று எனக்கு?
நான் நன்றாகத்தானே இருக்கிறேன்?
ஒரு நிமிடம் யோசிக்கிறேன்....

நேற்று இரவு படுக்கைக்கு செல்லும் போது , என் இடது மார்பில் கடுமையான வலி ஏற்பட்டது. ஆனால், அதன் பிறகு எனக்கு எதுவும் நினைவில் இல்லை, எனக்கு நல்ல தூக்கம் என்று நினைக்கிறேன்.

காபி வேண்டுமே, என் மனைவி எங்கே? மணி பத்தாகிவிட்டது

என் பக்கத்தில் படுத்திருந்த யாரையும் காணோம். அது யார் கட்டிலில் கண்மூடி அசைவின்றி? அய்யோ நானே தான்.

அப்படியானால் நான் இறந்துவிட்டேனா? கதறி னேன்......
என் அறைக்கு வெளியே கூட்டம், உறவுக் காரர்களும், நண்பர்களும் கூடியிருந் தார்கள்.

பெண்கள் எல்லோரும் அழுதுகொண்டிருந்தார்கள். ஆண்கள், சோக கப்பிய முகத்துடன் இறுக்கமாக நின்றிருந்தார்கள். தெரு ஜனங்கள் உள்ளே வந்து என் உடலைப் பார்த்துவிட்டுப் போகிறார்கள்.

என் மனைவிக்கு சிலர் ஆறுதல் சொல்கிறார்கள். குழந்தைகளைக் கட்டிப்பிடித்து அழுகிறார்கள்.

நான் இறக்கவில்லை.,
இங்கே இருக்கிறேன் என்று கத்தினேன்.
ஆனால், என் குரல் யாருக்கும் கேட்கவில்லை.
என் உடல் அருகே நான் நிற்பது கூட யாருக்கும் தெரியவில்லை. அய்யோ என்ன செய்வேன் நான்?
எப்படி அவர்களுக்குத் தெரிவிப்பேன்?

நான் மீண்டும் என் படுக்கை அறைக்கு சென்றேன். "நான் இறந்துவிட்டேனா?" நான் என்னையே கேட்டேன். இறப்பு இப்படித்தான் இருக்குமா?
என் மனைவியும், அம்மா, அப்பாவும் அடுத்த அறை யில் அழுதுகொண்டி ருந்தார்கள். என் மகனுக்கு என்ன நடக்கிறது என்பது விளங்க வில்லை. எல்லோரும் அழுவதால், அவனும் அழுது கொண்டி ருக்கிறான்.

நான் அவனை மிகவும் நேசிக் கிறேன். அவனை பிரிந்து என்னால் இருக்கவே முடியாது.

என் மனைவி, பாசமும், பரிவும் கொண்டவள். எனக்கு தலைவலி என்றால் கூட அவள் அழுவாள்.

அவளை பிரியப்போவதை என்னால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை.
அம்மா, நான் ஒரு குழந்தைக்கு தந்தையான போதும், இன்னமும் என்னை குழந்தையாகவே பார்ப்பவள். அப்பா, கண்டிப்பானவர் என்றாலும், அந்த வார்த்தைகளில் ஒவ்வொன்றிலும் பாசமே நிறைந்திருக்கும்.
இதோ, ஒரு மூலையின் நின்று அழுது கொண்டிருப்பவன், அட.. என் நண்பன். பகையை மறந்து வந்திருக்கிறானே? சிறு தவறான புரிதல் எங்களை பிரித்துவிட்டது. இருவரும் பேசி ஓராண்டுக்கு மேலாகிறது. அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று தோன்றுகிறது.

அருகில் சென்று அவனை அழைக்கிறேன். ஆனால், என் குரல் அவனுக்குக் கேட்கவில்லை. என் உடலைப் பார்த்து தேம்பித் தேம்பி அழுது கொண்டிருக்கிறான்.

ஆம்.. நான்தான் இறந்துவிட்டேனே. அருகில் மாட்டப்பட்டிருக்கும் சாமிப் படங்களைப் பார்க்கிறேன்.
"ஓ கடவுளே! எனக்கு இன்னும் சில நாட்கள் கொடுங்கள். நான் என் மனைவி, பெற்றோர்கள் நண்பர்களிடம் எவ்வளவு அன்பு வைத்துள்ளேன் என்று வெளிப்படுத்த வேண்டும்" என் மனைவி அறையில் நுழைந்தாள். "நீ அழகாக இருக்கிறாய் "
என்று நான் கத்தினேன். நான் அவளால் என் வார்த்தைகளைக் கேட்கவில்லை.
உண்மையில் இதற்கு முன்னால் இவ்வாறு சொல்லவே இல்லை.

"கடவுளே!" நான் கதறினேன். அழுதேன். தயவு செய்து இன்னும் ஒரு வாய்ப்பு, என் குழந்தையை கட்டி அணைக்க , என் அம்மாவை ஒரு முறையாவது சிரிக்க வைக்க , என் அப்பா என்னை பெருமையாய் நினைக்க வைக்க , என் நண்பர்களிடம் மன்னிப்பு கேட்க, இப்பொழுது நான் அழுதேன்!

திடீரென என் உடலை பிடித்து யாரோ உலுக்கினார்கள். அதிர்ந்து கண் விழித்தேன். "தூக்கத்தில் என்ன உளறல், கனவு ஏதாவது கண்டீர்களா? என்றாள் மனைவி.
ஆம் வெறும் கனவு. நிம்மதியானேன். ..

என் மனைவியால் தற்போது நான் பேசுவதைக் கேட்க முடியும் இது என் வாழ்க்கையில் மகிழ்ச்சியான தருணம். அவளை கட்டி அணைத்து. " இந்த பிரபஞ்சத்திலேயே நீ மிகவும் அழகான மற்றும் பாசமான மனைவி, உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன்" என்றேன் முதன் முறையாக.

முதலில் புரியாமல் விழித்த அவள், பின்னர், என் அருகே வந்து என்னை அணைத்துக்கொண்டாள். அவளது கண்களில் இருந்து லேசாக கண்ணீர் வெளியேறத் துடித்தது. அது ஆனந்தக் கண்ணீர் என்பதை என்னால் புரிந்துக்கொள்ள முடிந்தது.

இந்த இரண்டாவது வாய்ப்பு கொடுத்த கடவுளுக்கு நன்றி.

இன்னும் உங்களுக்கு நேரம் இருக்கிறது. உங்களது ஈகோவை புறம் தள்ளி விட்டு உங்களது பாசத்தையும் நேசத்தையும் உங் களிடம் நெருக்கமானவர்களிடம் வெளிபடுத் துங்கள்.

ஏனெனில் உங்களுது பாசத்தையும் நேசத்தையும் வெளிபடுத்த உங்களுக்கு இரண்டாவது வாய்ப்பு கிடைக்காமல் போகலாம்!!!!



Essen மாநகரில் Öffnungszeiten 14.00-19.00 Uhr
Oviyan textiles
ஓவியன் ஆடைகள் உலகம்
Tel:0201 330 99 464
அழகிய பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பெரியவர் சிறுமிகளுக்கான
அழகிய பஞ்சாபிகள்,இமிற்ரேசன் நகைகள் அனைத்தையும்
மலிவாகவும் தரமாகவும் பெற நாடுங்கள்,ஓவியன் ஆடைகள் உலகம்!
எசன் நகர பிரதான புகையிரத நிலையித்தில் (Hbf) இருந்து 5 நிமிட நடைத்தூரம்
Ihn.Balasundaram
Baedecker Str.11
45128 Essen





Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com

## பங்குச் சந்தை ஏற்றத் தாழ்வு!!!

முகவுரை

இந்த வருட ஆரம்பத்தில் இருந்து உலகப்பங்குச் சந்தைகளில் பாரிய வீழ்ச்சிகளை நாம் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. அதாவது U.K. பங்குச்சந்தையில் இருக்கும் FTSE 100 என்பது 6300 புள்ளிகளில் இருந்து மூன்று வார காலத்திற்குள் இந்தக்கட்டுரை எழுதும் நேரத்தில் 5700 ஆக அதாவது 10 வீத தாழ்வை அடைந்திருக்கின்றது. இதற்கு மிக முக்கியகாரணமாக சீனா நாட்டின் எதிர்கால பொருளாதார வளர்ச்சி அளவில் குறைப்பும், அமெரிக்கா நாட்டில் வட்டி வீத அதிகரிப்பையும் சொல்லலாம்.

### பங்குச் சந்தையில் கடந்த காலம்.




இங்கே இருக்கும் வரைபடத்தின்படி பார்த்தால் தைமாதம் 2000 ஆவணிமாதம் 2007 வைகாசிமாதம் 2015 போன்ற காலப்பகுதிகளில் பங்குச்சந்தை அதிகூடிய புள்ளிகளை, அதாவது 7000 அளவைப் பெற்றும் பங்குனி 2003பங்குனி 2009 பகுதிகளில் அதிகுறைந்த புள்ளிகளையும் அதாவது 3500 நீங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கும். பங்குனி 2009 ஆண்டு முதல் வைகாசி 2015 ற்கு இடைப்பட்ட ஆறுவருட ஆண்டில் FTSE 100 இன் இருமடங்காக அதாவது 3500 இருந்து 7000 ஆக அதிகரித்து இருந்தது. அதாவது தங்களது Pension கம்பனி இந்த காலகட்டத்தில் FTSE 100 கம்பனிகளில் முதலீடு செய்திருந்தால் தங்களது Pension முதலீடும் இரு மடங்காக அதிகரித்து இருக்கும்.

### பங்குச் சந்தையின் எதிர்காலம்.

பங்குச்சந்தையின் அதிகூடிய புள்ளிகளில் இருந்து அதாவது FTSE 100 ஐ பொறுத்தவரை 7100 (வைகாசி 15) 20 வீதம் குறைவாகத் தாழ்த்தப்பட்டால் அதாவது 5700 புள்ளகளை அடைந்தால் அதனை Bear Market- அதாவது வீழ்ச்சி அடைந்து செல்லும் பங்குச்சந்தை என்று கூறுவார்கள். இந்த நிலமை FTSE 100 ஐ பொறுத்தவரை தை 20ம் திகதி ஏற்பட்டது, அதாவது FTSE 100 ன் நிலமை 5650 வரைகுறைந்து சென்றது. எனவே அடுத்த சில வாரங்களில் இது 5700 ற்கு மேலே சென்றால் "Bear Market" இல்லை என்றும், 5700 ற்கு கீழே சென்றால் அது "Bear Market" என்றும் கூறலாம்.

கடந்த இரண்டு பெரிய "Bear Market" தாழ்வு நிலைகளும் பங்குனி மாதங்களில் ஏற்பட்டதால், இந்த வருட அதிகுறைந்த தாழ்வு நிலையும், பங்குனி 2016 இல் ஏற்படலாம். அதே சமயம் பங்குனி 2016 ற்கு பின்னரும் பங்குச் சந்தையில் மேலதிக சரிவு ஏற்பட்டால், எதிர்காலத்தில் அதிகூடிய பங்குச்சந்தை சரிவை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

### எண்ணை விலைகுறைவு:

கடந்த 8 மாத காலத்தில் Oil இன் விலையானது $63 இருந்து குறைவடைந்து $30 பவுண்ஸ் ஆக வீழ்ந்துள்ளது. அதாவது 50 வீதம் ற்கு மேலதிகமான வீழ்ச்சி. இந்த வீழ்ச்சியால் Oil சம்மந்தமான பங்குகளிலும் பல வீழ்ச்சிகாணப்பட்டன. இவற்றைக் கிழேகாணலாம்.

| பங்கின் பெயர் | May15 | - Jan 16 |
|---|---|---|
| Tullow oil | 460 p | 130 p |
| Amec Foster | 1000 p | 360 p |
| BP | 490 p | 335 p |
| Nostrum oil | 625 p | 300 p |

Shars to watch!!

Oil கம்பனிகளின் பங்கு விலையைத்தவிர mining கம்பனிகளின் பங்கு விலைகளும் கடந்த சிலவாரங்களாக பெரிய சரிவை நோக்கியிருந்தது. RIO TINTO மற்றும் Anglo American போன்ற இரண்டு கம்பனிகளையும் குறிப்பிடலாம்.

| பங்கின் பெயர் | Aug 2014 இல் விலை | Jan 2016 விலை |
|---|---|---|
| Rio TinTo | 3600 p | 1625 p |
| Anglo American | 1600 p | 260 p |

மேலே குறிப்பிட்ட இரண்டு கம்பனிகளும். இன்றுகூட 5 வீத dividend yield செலுத்துவதனால் பங்குகளின் விலைக் குறைவால் முதலீடு குறை வடைந்தாலும் வருட dividend வருமானத்தை முதலீட்டாளர்கள் பெற்றுக் கொள்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.



நல்லூர் ஆலயத்தின் சுற்றுப்புறத்தில் தமிழர் கலாச்சார ஆடைகளுடன் மிளிரும் வெள்ளைக்காரப் பெண்கள்




Neuss நகரில்..

ShaRun Saree

all indian traditional dresses

காதலர்தின வாழ்த்துக்கள் . Feb. 14

திருமணப் பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள்
இன்னும் பஞ்சாபிகள் அனைத்தும் நீங்கள்
விரும்பும் ரகத்தில் எம்மிடம்
தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்!

August-Macke.Str.79a
41470 Neuss.

02137/92 96 836
0178-35 79 015
0178-35 79 002





# காதலில் சலிப்பா அப்போ கண்டிப்பாகப் படியுங்கள்!



**நானும் என் மனைவியும் உயிருக்கு உயிராகக் காதலித்தோம். திருமணம் செய்துகொண்டோம். ஆரம்பத்தில் எங்களுக்குள் இருந்த ஆனந்தக் கிளர்ச்சி இப்போது இல்லை. எங்களுக்குள் அன்பு குறையவில்லை. ஆனால் இயந்திரத்தனமான வாழ்க்கை வாழ்கிறோம். திருமணம் செய்துகொண்ட ஒரே கட்டாயத்துக்காகக் கடைசிவரை சலிப்புடன் சேர்ந்தே இருக்க வேண்டி.....**

சுவீடன் தேசத்தில் ஃபக்கின் (Fahkin) என்ற இடத்தில் சில வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் இது. அங்கே சுரங்க வேலையில் ஈடுபட்டு இருந்தவர்கள் பூமிக்குள் புதைந்துகிடந்த ஓர் உடலைக் கண்டுபிடித்தனர்.

கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு முன்பு நேர்ந்த ஒரு நிலச்சரிவில் பூமிக்கு அடியில் சிக்கிக்கொண்ட இளைஞனுடைய உடல் அது. அங்கிருந்த குளிர்ந்த தன்மை காரணமாக அந்த உடல் அழுகிப்போகாமல், அதே இளமையுடன் இருந்தது. அடையாளம் காண்பதற்காக, அந்த உடல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. கூடிய மக்களில் 70 வயதுக் கிழவி ஒருத்தி இருந்தாள். தன் ஊன்றுகோல்களைப் போட்டுவிட்டு, அவள் அந்த இளைஞனின் உடல்மீது விழுந்தாள். அணைத்துக்கொண்டு அழுதாள்.

இளமை மாறாமல் சிலையாகிப் போயிருந்த ஒருவனும், சுருக்கங்கள் விழுந்த சருமத்துடன் இருந்த கிழவியும் அரவணைத்துக் கிடந்தது எல்லோர் கவனத்தையும் கவர்ந்தது.
நிலச்சரிவில் சிக்கி மறைந்த தன் காதலனை 50 வருடங்களுக்குப் பின்பு பார்த்து, அவள் உணர்ச்சிவசப்பட்டு இருந்த நிலை, இதல்லவா உண்மையான அன்பு... இதல்லவா உண்மையான காதல் வாழ்க்கை என்பது பல கட்டங்களைக் கொண்டது.

குழந்தையாக இருந்தபோது எது உற்சாகம் தந்ததோ, அது இளமையில் தொடர்வது இல்லை. இளமையில் எது கிளர்ச்சி தந்ததோ, அது அடுத்த கட்டத்தில் பரபரப்பு ஏற்படுத்துவது இல்லை. உங்கள் உறவில் அதே பழைய கிளர்ச்சியையும், பரபரப்பையும் நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்றால், வாழ்க்கையில் நீங்கள் பயணப்படாமல் தேங்கி நின்றுவிட்டீர்கள் என்று அர்த்தம். வாழ்க்கையின் வெவ்வேறு பரிமாணங்களை அனுபவித்து உணர, ஒரு கட்டத்தில் இருந்து அடுத்த கட்டத்திற்கு ஆனந்தமாக, நேர்த்தியாக, விருப்பத்துடன் பயணம் செய்யவேண்டும்.
அதில்தான் சந்தோஷத்தின் சூட்சுமம் இருக்கிறது. வாழ்க்கையை ரசிப்பதற்கும், கொண்டாடுவதற்கும் காதல் சாகசங்களைவிட வேறு பல அம்சங்கள் இருக்கின்றன.
இருவருக்குள்ளும் அன்பு விலகவில்லை என்கிறீர்கள். பரஸ்பர உணர்வுகளுக்கு மதிப்பு கொடுப்பவர்களாகவும் இருக்கிறீர்கள். அப்புறம் என்ன? உடல், மனம், உணர்ச்சி இவற்றைத் தாண்டிய ஒரு முக்கியமான பரிமாணம் வாழ்க்கைக்கு இருக்கிறது. வாழ்க்கையின் அந்த மூலத்தை உய்த்து உணர்வதையே நோக்கமாகக் கொண்டு, இருவரும் ஒன்றாக இணைந்தே பயணப்படலாம்.
உங்களுக்குள் இருக்கும் அந்த அடிப்படைச் சக்தியுடன் உங்களுக்குத் தொடர்பு ஏற்பட்டுவிட்டால், உயிர் உடலைப் பிரியும் கடைசித் தருணம்வரை, ஒவ்வொரு கணமும் ஆனந்தம்தான்... கொண்டாட்டம்தான்... உற்சாகம்தான். சலிப்பான தருணம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை".

### சதாம் உசைனின் இறுதி நிமிடங்கள் பற்றி அமெரிக்க படைவீரர் வெளியிட்ட உண்மை கடிதம் !

## நடுக்கம் அச்சத்தால் வந்தது என்று ஆகிவிடக்கூடாது!!!



இராக் அதிபராக இருந்த சதாம் உசைனை அமெரிக்கா அநியாயமாக கொலை செய்த கொடுமையை உலகறியும்.

சதாமின் இறுதி நிமிடங்கள் பற்றி சில அழகான தகவல்களை அந்த நேரத்தில் அவரின் அருகில் இருந்த மிக சிலர்களில் ஒருவரான அமெரிக்க படைவீரர் ஒருவர் வெளியிட்டுள்ளார்.

அந்த படை வீரர் தனது அந்த கால கட்டத்தில் எழுதிய கடிதம் தற்போது வெளியாகியுள்ளது. ஒரு முஸ்லிமின் வாழ்வு எப்படி இருந்தாலும் அவனது இறுதி கட்டம் சிறப்பானதாகவும் இறைவனுக்கு விருப்பமானதாகவும் இருப்பது முக்கியம்.
அந்த அடிப்படையில் சதாமின் இறுதி நிமிடங்கள் ஒரு உண்மை முஸ்லிமின் நிலைகளை எதிரொலிப்பதாக அமைந்திருப்பதை அறிய முடிகிறது. சதாம் உசைன் அவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முந்தைய இரவின் நடு பகுதியில் சதாம் அவரை சுற்றியிருந்த காவலர்களில் ஒருவரை அழைத்தார். தான் கைது செய்யப்படும் போது அணிந்திருந்த குறிப்பிட்ட கனத்த அங்கியை தருமாறு வேண்டினார்.

காவலர் காரணம் கேட்கவே, அதிகாலையில் எனது உயிரை பறிப்பதற்கான முயற்சிகளில் நீங்கள் இருக்கின்றீர்கள். நான் மரணத்திற்காக அஞ்சவுமில்லை நடுங்கவும் இல்லை. ஆனால் இராக்கின் அதிகாலை நேரம் நடுங்க வைக்கும் குளிரை கொண்டதாக இருக்கிறது.

என்னை நீங்கள் தூக்கு மேடைக்கு அழைத்த செல்லும் போது குளிரினால் எனது உடல் நடுங்கலாம். அதை பார்ப்பவர்கள் சதாம் மரணத்திற்கு அஞ்சகூடியவன் என்று எண்ண கூடாது. நான் மரண மேடையை நோக்கி நடந்து வரும் போது குளிரினால் கூட எனது உடல் நடுங்க கூடாது என்று நான் எண்ணுவதால் குளிரில் இருந்து காக்கும் அந்த கனத்த ஆடையை அணிய விரும்புகிறேன் என கூறினார்.

அவர் தூக்கு மேடையில் ஏற்றப்படுவதற்கு முதல் நாள் இரவின் நடுபகுதியில் தனக்கு விருப்பமான கோழி இறைச்சி மற்றும் சாதத்தை கேட்டு பெற்று மனமகிழ்வோடு சாப்பிட்டு விட்டு அவரின் குழந்தை பருவத்தில் இருந்தே வென்னீரோடு தேன் கலந்து குடிக்கும் வழமைக்கு ஏற்ப வென்னீரில் தேன் கலந்து பல கோப்பைகளை அவர் அருந்தினார்.
பிறகு ஒளு செய்துவிட்டு தனது கட்டிலில் அமர்ந்து திருகுர்ஆனை ஓதி கொண்டிருந்தார். அவர் தூக்கு மேடையில் ஏற்ற படுவதற்காக அவர் அழைத்து செல்ல பட்ட போது அவர் எந்த சலனமும் இல்லாமல் அஞ்சா நெஞ்சனை போன்று மலர்ந்த முகத்தோடு மரண மேடையை நோக்கி நடை போட்டார்.

இறுதியில் ஏகத்துவ முழக்கமான ஷஹாதத்தை மொழிந்த நிலையிலேயே மலர்ந்த முகத்துடன் அவரின் உயிர் பிரிந்தது. இவ்வாறு அமெரிக்க இராணுவ வீரர் தனது கடித்தில் குறிப்பிட்டுள்ளார்.





### தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால்


# சுவர் இல்லாமலும் சித்திரம் வரையலாம்.




சேவியர்

# திட்டமிடு, வெற்றி வானில் வட்டமிடு.

வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என விரும்பாத மனிதர்கள் இருக்க முடியாது. விரும்புவதால் மட்டுமே ஒருவர் வெற்றிகளைப் பெற்றுவிடவும் முடியாது. வெற்றிக் கதவைத் திறப்பதற்கான சாவிகள் கையில் இருக்க வேண்டியது அவசியம். அந்தச் சாவிகளில் முக்கியமானது "தயாராதல்" எனும் சாவி. ஒரு சூழலை எதிர்கொள்வதற்கு நம்மை எந்த அளவுக்குத் தயார்படுத்திக் கொள்கிறோம் என்பதில் அடங்கியிருக்கிறது நம்முடைய வெற்றியும் தோல்வியும்.



ஆபிரகாம் லிங்கனை அறிந்திருப்பீர்கள். அமெரிக்காவின் பதினாறாவது ஜனாதிபதி. மேடைப்பேச்சிலும், விவாதங்களிலும் உலகப் புகழ் பெற்றவர். மிகத் திறமையான ஜனாதிபதி, தலை சிறந்த தலைவர் என உலகின் மூலை முடுக்கெல்லாம் தன்னுடைய பெயரை எழுதியவர். ஒரு முறை அவர் வழக்கம் போல அசத்தலான ஒரு மேடைப்பேச்சை நிகழ்த்திக் கொண்டிருந்தார். கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அனைவரும் பிரமித்துப் போனார்கள். அதில் முன் வரிசையில் அமர்ந்திருந்த இளைஞன் ஒருவன் ரொம்பவே வசீகரிக்கப்பட்டான். பேச்சு முடிந்தபின் அவன் அவரிடம் கேட்டான்

"சார். ரொம்ப ரொம்ப பிரமாதமா பேசறீங்க. இதன் ரகசியத்தைச் சொல்ல முடியுமா ?". ஆபிரகாம் லிங்கன் சிரித்துக் கொண்டே சொன்னார்

"நான் மேடையில் அரை மணி நேரம் பேசினதைத் தான் கேட்டாய். அதற்காக அரை நாள் நான் தயாரானதைப் பார்க்கவில்லையே" !

அவருடைய அந்தப் பதிலில் அடங்கியிருந்தது அவருடைய வெற்றிக்கான ரகசியம் !. "தயாராதல் ! "

ஆபிரகாம் லிங்கன் தன்னுடைய ஒவ்வோர் மேடைப்பேச்சுக்கும் முன்பும் தன்னை மிகச் சிறப்பாகத் தன்னைத் தயாரித்துக் கொள்பவர். எல்லாரும் எல்லா விஷயங்களிலும் கில்லாடிகளாய் இருக்க முடிவதில்லை. எனவே ஆபிரகாம் லிங்கனுக்கே தயாரிப்பு தேவைப்படுகிறது. அந்தத் தயாரிப்பு தான் அவருடைய உரையை வசீகரிக்கும் விதமாக மாற்றியமைக்கிறது. அந்த தயாரிப்பு தான் அவரை மேடைப் பயமின்றி பேச வைக்கிறது. அந்தத் தயாரிப்பு தான் அவரை உலகத் தலைவருக்குரிய குணாதிசயத்தோடு பணியாற்ற வைக்கிறது.

அவர் மட்டுமல்ல, உலகின் புகழ் பெற்ற எல்லா பேச்சாளர்களுடைய வாழ்க்கையிலும் சுவாரஸ்யமான தயாராகும் வழிகள் அடங்கியிருக்கின்றன. கண்ணாடியின் முன் நின்று பேசுவது, வீட்டில் உள்ள நபர்களை கூட்டமாய் நினைத்து அவர்கள் முன் உரையாற்றுவது, டேப் ரிகார்டரில் ரெக்கார்ட் பண்ணிப் பழகுவது என ஒவ்வொருவருடைய வாழ்க்கை அனுபவமும் சொல்லும் பாடம் ஒன்று தான். தயாராதல் மிக முக்கியம் !

"வெற்றிக்கு மிக மிக முக்கியமான தேவை தன்னம்பிக்கை. தன்னம்பிக்கைக்கு முக்கியத் தேவை தயாராதல் !" என்கிறார் பிரபல டென்னிஸ் விளையாட்டு வீரரான ஆர்தர் ஆஷே. வெற்றிக் கோப்பைகளுடன் கொடிகட்டிப் பறந்த காலத்தில் அவருடைய தன்னம்பிக்கையின் ரகசியம் என்ன என்ற வினாவுக்கு அவர் சொன்ன பதில் தான் இது ! தயாரிப்பு இல்லாத மனிதர்கள் தன்னம்பிக்கை உடையவர்களாக இருக்க முடியாது. தன்னம்பிக்கை இல்லாத மனிதர்கள் வெற்றியாளர்களாய் ஜொலிக்க முடியாது.

விளையாட்டு வீரர்களைப் பொறுத்தவரையில் சில நிமிட விளையாட்டுக்காக ஆண்டுக் கணக்கில் தங்களைத் தயாரித்துக் கொள்வார்கள். அந்தத் தயாரிப்பு தான் அவர்களுக்குத் தன்னம்பிக்கையை அளிக்கிறது. தன்னம்பிக்கை அவர்களுடைய கையைப் பிடித்து உள்ளங்கைக்குள் வெற்றிக் கோப்பையைத் திணிக்கிறது.

தன்னம்பிக்கைக்கும் அதீத நம்பிக்கைக்கும் வேறுபாடு உண்டு. இரண்டு பேர் மலையேறச் செல்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒருவர் மலையேற்றத்துக்குரிய உபகரணங்களோடு மலையேறச் செல்கிறார். இன்னொருவர் எந்த ஒரு உபகரணமும் எடுக்காமல் மலையேறச் செல்கிறார். இது தான் தன்னம்பிக்கைக்கும், அதீத நம்பிக்கைக்கும் உள்ள வித்தியாசம்.

ஒரு செயலைச் செய்யும் முன் அந்தச் செயலுக்கான அனைத்து தயாரிப்புகளையும் செய்வது தன்னம்பிக்கையாளரின் வழக்கம். அதீத நம்பிக்கை உடையவர்களோ சரியான தயாரிப்புகள் இல்லாமல் களமிறங்குவார்கள். தயாரிப்புகள் இல்லாமல் இறங்கும் மனிதர்கள் கடைசியில் அதிர்ஷ்டத்தைத் தான் துணைக்கு அழைக்க வேண்டும். தன்னம்பிக்கைக்காரருடைய வெற்றியோ முழுக்க முழுக்க அவரைச் சார்ந்தே இருக்கிறது. !

தொடர்ச்சி 17 ம் பக்கம்

AMMA's food
ammas-food.de
எங்கள் இனிய
தைப்பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
Amma's Food
Rheinische Straße 80A
44137 Dortmund
டோட்மூண்ட் நகரில் ...
அம்மா'ஸ் உணவகம்
அறுசுவைக்கறிகளுடன் சோறும், புறியாணியும்
கொத்து ரொட்டி ,இட்டலி , தோசை, வடை இடியப்பம்
இவற்றுடன் இன்னும் இன்னும் உங்கள் விருப்பறிந்து
தரக்காத்திருக்கின்றோம்!
உங்கள் இலத்தின் மங்கல வைபவங்கள் அனைத்திற்கும்
அம்மாவின் சமையலை நினைவூட்டும் உருசியுடன்
தயாரித்து பரிமாறுவோம்!
காலை 11.00 மணி முதல் மாலை 11.00 மணிவரை
செவ்வாய் கிழமை விடுமுறை!
அம்மாஸ் உணவகத்தின் சிறப்பு அம்சம்
சுவையைச் சுடச்சுடத் தருவதும் ஆகும்.


Tel:0231 33 89 86 91
Fax:0231 33 89 86 93

## தன்னம்பிக்கைத் தொடர்...

குடும்ப வாழ்க்கையிலும் இந்த அதீத நம்பிக்கை சிக்கலைக் கொண்டு வந்து சேர்க்கிறது. உதாரணமாக, காதலிக்கும் போது தங்கள் வாழ்க்கையில் காதலிக்கும் நபரை எப்படியெல்லாம் எதிர்கொள்ளலாம், வசீகரிக்கலாம் என திட்டமிடுகிறார்கள். ஒரு காதல் கடிதத்தை எழுதவே இராத்திரி முழுதும் விழித்திருந்து பேப்பர் கிழிக்கிறார்கள். அந்தத் தயாரிப்புகள் அவர்களுக்கு தன்னம்பிக்கையைத் தருகிறது. காதல் வாழ்க்கை தென்றலாய் வீசுகிறது.

அதே நேரம், அவர்கள் திருமணத்தில் இணைந்தபின் "இனிமேல் இவர் நமக்கே" எனும் அதீத நம்பிக்கை எதையும் தயாரிக்காத ஏனோ தானோ எனும் சூழலுக்குத் தம்பதியரைத் தள்ளி விடுகிறது. வாழ்க்கை தன்னுடைய சுவாரஸ்யத்தையும், பிடிமானத்தையும் இழந்து தத்தளிக்கத் துவங்குகிறது.

எனக்கு இதெல்லாம் தெரியும் என தம்பட்டம் அடிப்பதை தன்னம்பிக்கை என பலர் நினைக்கிறார்கள். அது தன்னம்பிக்கையல்ல. தன்னம்பிக்கை வார்த்தைகளில் மிளிர்வதல்ல, அது செயல்களில் ஒளிர்வது.

சரியாய் தயாரானவன் தேர்வுக்கு எந்த விதமான பதட்டமும் இல்லாமல் செல்வான். அவனுடைய கண்களில் தன்னம்பிக்கை நட்சத்திரங்கள் சுடர்விடும். தயாராகாமல் ஏனோ தானோ என்று செல்பவனோ அதிர்ஷ்டத்தையும், அடுத்தவனையும் நம்பியே தேர்வு எழுதச் செல்வான். வெற்றி எப்போதுமே தயாராய் இருப்பவனுக்காய் தயாராய் இருக்கிறது !

ஒரு வெற்றிக்கு என்னென்ன தேவையோ அவற்றை அனைத்தையும் தயாராய் வைத்திருக்கும் போது நமக்கு முன்னால் இருக்கும் பணி எளிதாக முடிந்து விடுகிறது. உதாரணமாக ஒரு சாலையைக் கடக்க வேண்டுமென வைத்துக் கொள்ளுங்கள். அது ரொம்பவே எளிதான வேலை. அதே நேரம் ஒரு கால் ஊனமாய் உள்ள மனிதன் என்று வைத்துக் கொள்ளுங்கள் ! அந்த வேலை மிகக் கடினமானதாகி விடுகிறதல்லவா ? இந்த ஊனம் தன்னம்பிக்கைக்கு ஒரு வேகத் தடையையும் தந்து விடக் கூடுமல்லவா ? எனவே தயாராதல் என்பது ஒவ்வோர் சூழலுக்கும் ஏற்ப மாறுபடும் தன்மை கொண்டது !



ஐந்து மணி ரயிலைப் பிடிக்க நான்கு மணிக்கே கிளம்புவது ரொம்ப எளிதான வேலை. ஆனால் அதே ரயிலைப் பிடிக்க ரொம்பவே தாமதமாய்க் கிளம்பும் சூழலை நினைத்துப் பாருங்கள். எத்தனை பரபரப்பு, எவ்வளவு கஷ்டம் ! சரியாய்த் திட்டமிடுதல், சரியாகத் தயாராதல் இவை இல்லாவிடில் தேவையற்ற மன அழுத்தம் நம் முதுகில் ஏறி அமர்ந்து விடுகிறது. அதுவே நமக்கு மிகப்பெரிய தோல்வியாக அமைந்து விடுகிறது.

சிலர் வேலையில் நுழைந்த சில ஆண்டுகளிலேயே வெற்றி வானில் வட்டமிடுவார்கள். அதற்குக் காரணம் சிறப்பான திட்டமிடுதலும், அதற்காகத் தயாராவதும் தான். வந்தோமா, போனோமா என்று இருப்பவர்கள் எப்போதுமே ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் செல்வதில்லை. அவர்கள் காற்றில் பறக்கும் பட்டத்தைப் போன்றவர்கள். எப்போதும் நிலத்திலுள்ள கயிறோடு கட்டப்பட்டு இழுக்கும் இழுப்புக்கெல்லாம் ஓடிக் கொண்டிருப்பார்கள்.




அவர்களுக்கு இலக்கு இருப்பதில்லை. எனவே அவர்களால் எந்தத் திசையில் பறக்க வேண்டுமென முடிவு செய்ய முடிவதில்லை. அவர்களுக்குச் சொந்தமாகச் சிறகுகள் இருப்பதில்லை. எனவே சுயமாக செயல்பட முடிவதில்லை. அவர்கள் எப்போதும் இன்னொருவரைச் சார்ந்தே இருப்பார்கள். திட்டமிட்டுப் பறப்பவர்கள் கழுகைப் போன்றவர்கள்.


ஹாரிபாட்டர்

அவர்களுடைய சிறகுகள் அவர்களுக்கு வலுவூட்டும். அவர்களுடைய பார்வை அவர்களுக்குத் திசைகளைக் காட்டும். அவர்களுடைய பயணம் அவர்கள் திட்டமிட்ட திசையில் நடக்கும். அவர்களுடைய வெற்றியையோ, தோல்வியையோ இன்னொருவர் நிர்ணயிக்க முடியாது. அவர்களுடைய வாழ்க்கை மொத்தத்தில் அவர்களால் நிர்ணயிக்கப்படுகிறது. வெற்றியின் ரகசியங்களில் ஒன்று இது தான். வெற்றி என்பதைப் பெற ஏதேதோ வேண்டுமென நாமாகவே கருதிக் கொள்கிறோம். ஆனால் சில வேளைகளில் வெற்றிக்காக சரியான திட்டமிடுதலும், தயாரித்தலுமே போதுமானதாக இருக்கிறது.

உட்கார்ந்து எழுதவே ஒரு இடம் இல்லாமல் கஷ்டப்பட்டார் ஒரு எழுத்தாளர். வெளியே உறைய வைக்கும் குளிர். கையில் போதுமான அளவு பணம் இல்லை. ஒரே ஒரு காபி வாங்கிக் கொண்டு அந்த காபி ஷாப்பில் பல மணிநேரம் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார். ஒரு நாவலுக்கான முயற்சியில் தன்னைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அந்தத் தயாரிப்பு தான் அந்த எழுத்தாளரை உலகப் புகழ் பெற்ற எழுத்தாளராக்கியது. இன்று அவருடைய நாவலுக்காய் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் விடியற்காலையிலேயே கடைகளில் நிரம்பி விடுகிறது கூட்டம். அவர்தான் ஹாரிபாட்டர் நாவலை எழுதிய ஜே.ஜே ரௌலிங்கர்.

வெற்றியை நோக்கிய பயணத்தில் இந்த தயாரிப்பு ரொம்பவே அவசியம். இன்றைக்கு வெற்றியாளர்களுடைய வாழ்க்கையைப் புரட்டிப் பார்க்கும்போது புலப்படும் விஷயம் ஒன்று தான். அவர்கள் தங்கள் இலட்சியத்துக்காக தங்களைத் தயாரித்துக் கொண்டார்கள்.

அலெக்சாண்டர் கிரகாம்பெல்லிடம் ஒருமுறை கேட்டார்கள் "உங்கள் வெற்றிக்கான ரகசியம் என்ன ?" "வேறொன்றுமில்லை, சிறப்பாகத் தயாராவதே எனது வெற்றியின் ரகசியம்" என்று பளிச் எனப் பதிலளித்தார் அவர்.

தயாராதல் வெற்றியின் ரகசியம்
தயாராவோம் வெற்றிகள் அவசியம்.



# காதலர் தினக் கவிதைகள்



## இடை இடையே வந்து போகிறாள்

ஒன்றாக அயலவர்களாக அவளும் நானும் வளர்ந்தும்
அவளாளாகிய போதும்  தொடரந்த நட்பு காதலாகியது - அவளின்
எடுப்பான தோற்றத்தில்  தோகைமயிலாள் எனத் தோற்றமளித்த கூந்தழகி
இன்னும் இடை இடையே வந்து போகிறாள்

மகாஓயா ஆற்றிலே ஒன்றாக மாலைமயக்கதில் குளித்து
தலைகுனிந்து விழிநிமிர்த்தி பாரத்து சிரித்த சிரிப்பழகி
ஆற்றின் கரையோரத்தில பேசியும் பேசாமல்
இடைவெளி விட்டு உட்கார்ந்து பின் காற்றுப் போக நெருக்கத்தில்
உட்கார்ந்து நம்மிருவர் தலையும் மடிகளைப் பகிர்ந்து
சுகம் தந்தழகியும் இடை இடையே மனதில் வந்து போகிறாள்

மாமன் மகளைப் பார்க்கவென பலமைல் தாண்டி சைக்கிள் உழக்கி
வந்ததற்கு பல காரணம் மாமிக்குச் சொல்லி வந்துவிட்டானே
என்ன செய்வது என்று மாமி  இருத்தி சோறு போடுகையில்
என்னைக் கண்டுஅறைவிட்டு வெளியே வந்தவளை அருகில் பார்க்க
ஆசை கொண்டு வராத விக்கலை நானும் வரவழைக்க விரைந்து வந்து
குனிந்து தண்ணீர் தந்து என் விழியைச் சந்தித்து முகம் சிவந்த
மாமன் மகள் இடை இடையே மனதில் வந்து போகிறாள்

ஏலையா முருகதாசன்

## இடை இடையே மனதினுள் வந்து போகிறான்

அன்பிற்கு புது பல அர்த்தங்கள் தேடி
அகங்காரத்துடன் காதலையும் அலர்ச்சியம் செய்து

தெரிந்தே நான் அவனுடன் புரிந்த சண்டைகள்
தெளிவு தரும் என்று ஏதோ ஓர் நினைப்பில்

வர்ணங்களில் வானவில்லை காண்பது போல்
வாட்டும் ஏக்கங்களில் அன்புக்கு விளக்கங்கள் தந்தாலும்

நெடுந்தூரத்தில் அவன் உருவம் என் விழிப்பார்வை கைது செய்தால்
நெஞ்சில் சுமந்த சுமைகள் யாவும் நெகிழ்ச்சியில் உருகுதே

கதிரவனின் வருகையில் மலரும் தாமரையாய்
கண்களின் இரு கருமணிகள் விண்மீன்களானது ஏனோ ?

சொற்களுக்கு எட்டாத உணர்வுகள் யாவும் உடனே விழித்துக்கொள்ளும்
சொப்பனத்தில் கூட அழியா சுவடாய் மனதினுள் பதிந்து கொள்ளும்

ஆனாலும் தனிமையை வேண்டி அரவணைத்துக் கொண்டு
ஆதரவு கரம் நீட்டும் காலத்திற்காக மீண்டும் வீணான காத்திருப்பு

இடை இடையே மனதினுள் மீண்டும் அவன் வந்து போனதால்
இக் காவிய காதலை காலமும் தூரமும் அழிக்க முடியாததை உணர்ந்து

வெண்மதியிடம் தூது விட்டு விடிவெள்ளிக்காய் பாத்திருந்து
வெகுமதியாய் என்னைத் தர கொண்ட திமிர் தனை விட்டு விட்டேன்

மீரா குகன்
ஜேர்மனி

## இடை இடையே மனதில் வந்து போகிறாள்

அவள் எள்ளி
நகைக்கையில் இதயம்
குளிருதே ..

அவள் -
என்னைப்பார்க்கையில்
விண்ணில் பறக்கிறேன்

கண்ணில் பூசிய மை
அழகா -இல்லை அவள்
கண்ணழகா . கனவில்
கூட புலம்புகிறேன்
விடை தெரியா

கனவில் மட்டும்
பேசுகிறாய் -கண்டவுடன்
யோசிக்கிறாய்
மறைந்து மறைந்து
பார்க்கையிலே -மனதை
மெல்ல வருடுகிறாய் .

கவிதை சொல்லும்
கவிஞருக்கு காதல்
வந்தால் கவி எதற்கு

ஹேமா மகாலிங்கம்

## இடையிடையே அவள் வந்து போகின்றாள்...

தேனூற்றிப் போகின்றாள் ஒருபொழுது
தீமூட்டிச் செல்கின்றாள் மறுபொழுது
இடையிடையே அவள்
வந்து போகின்றாள்... எனக்கு
இதமான ஒத்தடங்கள் தருகின்றாள்!
இளநகை நாள்மலராய் தோன்ற
இடையது மிருதங்கமாய் தானொலிக்க
உடையது உடையவனுக்காய் வழிவிட
நாணத்தை நிலமதில் சிந்தி
நளினத்தால் எனைமயக்கிச் செல்கின்றாள்!
இளமை பூச்சொரிந்து போய்விடவும்
முதுமை கல்லெறிந்து நின்றிடவும்
முத்தத்தின் சத்தங்கள் மட்டும்
முதுமையிலும் ராகங்கள் மீட்டுகின்றது.
இரா. சம்பந்தன்

## இடை இடையே மனதில் வந்து போகிறா(ன்)ள்

நினைக்க வைத்தவனுக்கு
நின்னை என்னுடன் சேர்த்து வைக்க
நேரமில்லாததால்
நேசத்தை உதறிவிட்டவே(ள)ன
முன்பெல்லாம் என் நினைவுகள்
முழுவதும் நீதான் ஆக்கிரமித்திருப்பாய்.

சிலகாலம் உன் நினைவுகள்
சிதறியது போன்ற உணர்வு
என் அவஸ்த்தை உன்னுள் இருக்கும்
என் ஆன்மா
எடுத்தியம்பிவிட்டதோ
இடை இடையெ வந்து போகிறவே(ள)ன..
என் அவஸ்த்தை
எள்ளளவேனும் குறைந்தாலே போதும்
என்றெண்ணி இடை இடையே மனதில்
போய் வருவோம் என சங்கல்பம்
கொண்டுவிட்டாயோ?

பா.பிரியதர்ஜினி-  (இலங்கை)



## திருமண வெள்ளிவிழா




சிவநாதன் நகுலா தம்பதிகளின்

16.01.2016

யேர்மனியில் வசிக்கும் சிவநாதன்
நகுலா தம்பதிகளின்
25 வது  திருமணநாள்

கடந்த 16.01.2016 அன்று சிறப்பாகக்
கொண்டாடினார்கள். இவர்களை
பிள்ளைகள் உறவினர்கள்
நண்பர்கள் சுற்றத்தார் அனைவரும்
பல்லாண்டு காலம் சிறப்புற வாழ்க
வாழ்க என வாழ்த்தினார்கள்.

அன்புடன்
அன்பு மகள் ஷரீகா சிவநாதன்
அன்பு மகன்   ஷரிகன.சிவநாதன்



# எதிர்வுகூறல்

விநோ

கலிகாலம் வந்தால் எரிந்துவிடும் உலகம். வஞ்சகம் குடியேறி, வார்த்தைகள் பிழைத்து, மனிதாபிமானமற்ற மனிதகுலம் தோன்றும் என்று கூறப்பட்ட எதிர்வுகூறல் சரிபாதிக்கு மேல் சரியாகி நிகழ்வது கண்கூடு. எதிர்வுகூறல் என்றாலே கண்ணிற்கு முன்னால் முதலாவதாக வருபவர் பல்துறை மேதை லியொனார்டோ டா வின்சி (Leonardo da Vinci) தான். டா வின்சி என்றால் உடனே உள்மனதில் தோன்றும் விடையங்கள் என்னவென்று பார்த்தால் அவரின் ஓவியங்களே ஆகும்.

எதிர்காலத்தை எட்டுக் கட்டி ஓவியங்களில் எடுத்துக்காட்டி எதிர்வுகூறி இருப்பார் அந்த மாமேதை. அவருக்கு எதிர்காலமாக இருந்த இன்றைய நிகழ்காலத்திற்கு அவரால் கூட எதிர்வுகூற முடியாத எதிர்காலம் உள்ளது தான் மிகவும் வியக்கத்தகு விடையம். இந்த வியப்பும் வித்தியாசமும் அறியாத முறையில் அமைந்ததால் தான் இது கலியுகமாக எம் முன்னோர்களால் எதிர்வுகூறப்பட்டிருக்கலாம். இன்றிலிருந்து ஐந்து வருடம் முன்னோக்கிப் பார்த்தால் புரியும் எம் உள்ளுணர்வில் இருந்து உலகம் வரையும், அதையும் தாண்டி எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது என்று. இயற்கையால்ப் பிறந்த மனிதன் இன்று இயற்கைக்கே கற்றுக் கொடுக்குமளவு அடைந்துள்ள முன்னேற்றம் உண்மையிலேயே முன்னேற்றமா? என்றால் அது சந்தேகத்துக்குரிய விடையம் என்றாலும், மனித மூளையின் சாமர்த்தியம் சிலிர்க்க வைக்கின்றது. இந்த அதிபுத்திசாலித் தனம் இன்னும் ஐந்து வருடங்களில் உலகை எப்பிடி மாற்றும் என்று எண்ணும் போது தான் ஆச்சரியக்குறி விரிகின்றது.

பெட்டிக்குள் போவது பிணங்கள் தான் என்பதை மாற்றி அப்பிணங்களையே ஆட வைத்து அதிசயப்படுத்தியது தொலைக்காட்ச்சிப் பெட்டி. இன்று ஒவ்வொருவரும் தனியொரு அலைவரிசை வைத்து ஒளிபரப்பும் அளவு (www.youtube.com/weknowddjvino) மாற்றிவிட்டது இணையம். பண்டமாற்றுக்காக கண்டுபிடிக்கப் பட்ட பணம் பண்பாட்டையே மாற்றியமைத்தது. அப் பணப் புழக்கத்தையே மாற்றியது இன்றைய இலத்திரனியல் இலக்க அட்டை. எதிர்காலம் இதையும் மீறி அமையும். பணத்தைப் பறிக்கும் திருடர்கள் அதிகரிக்க, வங்கி பாதுகாப்பிற்கு அட்டையையும் அதற்காய் இலக்கத்தையும் அளித்தது. அதுவும் களவு போக, அனைத்தையும் இணையத்திற்கு மாற்றியது. எண்ணிப் பாருங்கள் எம் எதிர்காலத்தை. இரத்தத்தில் இலத்திரனியல் அட்டைகள் இணைக்கப்பட்டு எவராலும் திருட முடியாமல் மனித வாழ்க்கை மாற்றி அமைக்கப்பட்டால் எப்படி இருக்கும்.



கண்ணிமைக்கும் கணப்பொழுதில் கண்டம் விட்டுக் கண்டம் கதைக்கும் மனிதன், நாளை கண்ணிமைக்கும் கணப் பொழுதில் கண்டம் விட்டுக் கண்டம் செல்வதை எண்ணிப் பாருங்கள். இவை நிகழ்வதற்கு எத்தனையோ வாய்ப்புக்கள் உண்டு.

மனித உடல் போன்றே மாற்றம் உணர்கின்ற உடலை உருவாக்கி இலத்திரனியல்க் கதிர்மூலம் இலகுவில் கண்டம் விட்டுக் கண்டம் கடந்து கடமைகளை முடிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.

விண்வெளிக்குச் சென்றால் மீண்டும் திரும்பி வருவோம் என்ற நம்பிக்கையே இன்றி விண்ணில் கால் வைத்தார் அலெக்சேய் அர்கீபவிச் லியோனவ் (Alexey Leonov). இன்று செவ்வாயில் குடியேற மூட்டை கட்டும் கூட்டம் கோடிக்கணக்கில் பணம் கட்டி வருகின்றது. கணப்பொழுதில் கண்டம் மாற கட்டாதா பணத்தை.

மூளையின் எண்ணங்கள் அனைத்தும் அலைவரிசையில் இயங்குகின்றது என்பதை அறிந்த மனிதன், அதன் அலையோட்டத்தையும் அறிந்தான் என்றால் ஹிப்நோடிஸ் என்ற கலையை கணனி மூலம் மாற்றி அறியாத பல மனநோய்களை தீர்க்க முடியும்.

நாம் கதைக்கும் அனைத்து ஒலி அலைகளும் அழிவடையாமல் குறுகிக் குறுகி எதோ ஒருவகையில் எங்கோ மறைந்து எம்மைச் சுற்றியே உள்ளது என்பதும் ஒருவகை எதிர்வுகூறல் ஆகும். அந்த சேமிப்பு வகையைக் கண்டறிந்தால் பல விடையங்களைச் சாதிக்கலாம்.

உதாரணமாக குற்றம் நடந்த இடத்தில் என்ன உரையாடல் நடந்தது என்பதை இதன் மூலம் கண்டறிந்து குற்றத்தை நிகழ்த்தியவரை கண்டறியலாம். இந்தக் கண்டுபிடிப்பை முள்ளி வாய்க்காலில் நிகழ்த்தி அந்த மக்களின் அவல ஓலத்தை சிங்களவருக்கும், அவலத்தை உணராத தமிழருக்கும் போட்டுக் காட்டினால் கண்டிப்பாக உண்மைகள் வெளிவரும். தமிழருக்கு விடிவும் கிட்டும்.

கனவுகாணுங்கள் என்று கலாம் ஐயா சொன்னது இந்த எதிர்வுகூறலைத்தான். கண்டு பிடித்தால்த் தான் சாதனையாளன் அல்ல கண்டு பிடிப்பதைக் கனவில் காண்பவனும் சாதனையாளன் தான் லியொனார்டோ டா வின்சி போன்று.

**கண் மூழக்காணும் கனவுகளை, விழித்த வினாழியே**
**வினைத்திறனோடு செயற்பட்டு, வெற்றி காண்போம்.**


## மங்கல இசைக் குழு

நாதஸ்வர இன்னிசைச் செல்வன் N.K.ரகுராமன்

உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
**N.K.Raguraman**

Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236





Mob: 0049 157 89 15 95 71

RKL IMMO.de IMMOBILIEN & BAUFINANZIERUNG



Sinnadurai.Kiritharan

Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan|Tel. 05723-914519| www.rklimmo.de|info@rklimmo.de

Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை
**நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!**
மேலதிகவிபரங்களிட்கு **Tel. 05723-914519** or www.rklimmo.de
or www.lankasri.com

## Akchaya Digital Photography& Decoration

*Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration*

உங்கள் திருமணநாள் பிறந்தநாள், மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும்
மண்டபம் மணவறை சோடினை, நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி
குடிபானங்கள் உணவுவகைகள், மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும்
ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.
Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474










# நடிகர் ரஜினிகாந்த் பத்ம பூஷண் விருது பெறுகிறார். சக கலைஞர்கள் வாழ்த்து!



ரஜினிகாந்த்



ஸ்ரீ ரவிசங்கர்

குடியரசு தினத்துக்கு முன்பாக நாட்டின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்ம பூஷண் விருது அறிவிக்கப்படுவது நடைமுறை. நடப்பாண்டு நடிகர் ரஜினிகாந்த், வாழும் கலை ஸ்ரீ ரவிசங்கர், ஊடக அதிபர் ராமோஜிராவ், ஜம்மு காஷ்மீர் முன்னாள் ஆளுநர் ஜக்மோகன், திருபாய் அம்பானி ஆகியோருக்கு பத்மவிபூஷண் விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.








குஷ்பு நடிகையும் காங்கிரஸ் பிரமுகருமான குஷ்பு ட்விட்டரில் ரஜினியை வாழ்த்தினார். இந்த விருதுக்கு நீங்கள் தகுதியானவர் தலைவா என்று அவர் கூறியுள்ளார். அதற்கு ரஜினியும் நன்றி தெரிவித்துள்ளார்.

நயன்தாரா "ஒன் அண்ட் ஒன்லி தலைவருக்கு பத்மவிபூஷண் கிடைத்தது மகிழ்ச்சியாக உள்ளது. நீங்கள்தான் அதற்கு தகுதியானவர் தலைவா" - இது நயன்தாராவின் வாழ்த்து.

லட்சுமி மேனன் "வாவ்.. இதுதான் ஆசீர்வதிக்கப்பட்ட உண்மையான பெருமை தலைவா.. நீங்கள் எதிர்காலத்தில் இன்னும் நிறைய விருதுகள் பெறவேண்டும்." - நடிகை லட்சுமி மேனன் இப்படி வாழ்த்தியுள்ளார்.

சிவகார்த்திகேயன் தலைவர் ரஜினிக்கு பத்மவிபூஷண்... என்றும் அவரது ரசிகன் என்பதில் பெருமை.



தனுஷ் தலைவருக்கு பத்ம விபூஷண்... சூப்பர்.. பெருமை யாக உள்ளது. இதைவிட பெரிய சந்தோஷமில்லை - தனுஷ்

ஐஸ்வர்யா தனுஷ் பத்மவிபூஷண் ரஜினிகாந்த்... சூப்பர், பெருமைக்குரிய மகள்.

சௌந்தர்யா ரஜினி பெருமைக்குரிய மகள் நான். அப்பா இப்போது பத்மவிபூஷண்.





கடந்த 2014ஆம் ஆண்டு நடிகர் கமல்ஹாசன் கவிஞர் வைரமுத்துவுக்கு பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.


## ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிடம்

உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்

ஆதிவாசி பண்டித் கே.சுவாமி





உறவுச்சிக்கல்கள் -
தவறாகப் புரிந்துகொள்ளல்
- நிதிச் சிக்கல்கள்
மன அழுத்தம் - காதல்பிரச்சினைகள்
- வேலை தேடுதல்
- குடும்பவாதங்கள்
குழந்தைகள் இல்லாத தம்பதிகள்
- வாகனப் பொருத்தம்

தலை முறை தலைமுறையாக ஜோதிடக் கலையை
பயின்றுவரும் ஜோதிடவித்துவான்
பேசும் மொழி தமிழ் கிந்தி மற்றும் ஆங்கிலம்.

Tel: 015 21 46 02 865 / 0151 63 50 9059

கிழமை 7 நாட்களும் 09.00 முதல்
20.00 மணிவரை வரலாம்.

Make an Appointment
Prapa Super Market
Hindenburg Straß 212
41061 Mönchengladbach




## 31 வது நாள் நினைவு அஞ்சலி

(அந்தியெட்டி)

அமரர் கணபதி கந்தையா
(பிள்ளையார்)

யாழ். அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி கந்தையா அவர்கள் 30-12-2015 புதன்கிழமை அன்று காலமானார்.அன்னார், காலஞ்சென்ற கணபதி, சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, கற்பகம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,பொற்கொடி அம்மா அவர்களின் அன்புக் கணவரும்,ரேணுகாதேவி, சந்திரசேகரம், தேவிகாதேவி, சிவநேசன், ஞானசேகரம், கர்ணசேகரம், சோதிசேகரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆவார்.ஆன்னாரின் மரணச்செய்தி அறிந்து நேரில் வந்து ஆறதல் கூறியவர்களுக்கும்,தொலைபேசிமூலம் ஆறதல் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்தக் கொள்கின்றோம்.

குடும்பதினர்-சார்பாக மகன்- க.சிவநேசன் (குணம்) -யேர்மனி.
(49) 02351 6711054







Ram Mohan

உங்கள் ஆசையை
நிறைவு செய்ய
இதுவே தருணம்
விரையுங்கள்

15 வருட அனுபவம் மிக்க சேவையாளர்

Büro für Deutsche Vermögensberatung
Ram Mohan
Westwall 117
47798 Krefeld

Ram.Mohan@dvag.de
www.dvag.de/Ram.Mohan

Telefon: +49 2151 3259152-Fax: +49 2151 3259153- Mobil: +49 1726835790




# வரியை மீளப் பெற சில ஆலோசனைகள்!

றஜினா தருமராஜா

எம் ஒவ்வொருவரினது வருமானத்திலிருந்து அரசாங்கம் வரி என்பதனைப் பெற்றுக்கொள்கின்றது. வருடம் முடிந்தபின் முதலில் சிந்தனைக்கு வருவது இக்கணக்கினைக் கொடுத்துப் பணத்தைத் திருப்பி எடுக்கவேண்டுமென்பது தான்.
”சில சமயம்” திருமணம் ஆனவர்கள் சேர்த்து அவர்களின் கணக்கினைக் கொடுப்பதை விட தனியாகக் கொடுத்தால் அவர்கள் செலுத்திய வரிப்பணம் கூடக் கிடைக்கும். இதைப்பற்றி உங்கள் வரி ஆலோசகரைக் கேட்பது நன்று.

நாம் வைத்தியரிடம் சென்று வாங்கும் மருந்து மற்றும் மருத்துவமனைச் சீட்டுகளை (ரசீதுகளை) கட்டாயம் சேகரித்து வைப்பது நன்று. நிறுவனம் ஊடாக வீட்டில் திருத்தம் செய்த வேலைகளின், தோட்ட வேலைகளின் பில்களில் வேலை செய்தவரின் நேரத்துக்குரிய விலை போட்டிருந்தால் உங்களின் வரிக்கணக்கில் அத்தொகையை இணைத்துக் கொள்ளலாம். மற்றும் உங்கள் கணவருக்கோ, மனைவிக்கோ அல்லது கல்வி கற்கும் 25 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளுக்கோ 25 முதல் 100 வரையிலான சுகயீனவிகிதம் இருந்தால் குறிப்பிட்டத் தொகையினை அரசு இக்கணக்கில் தந்து எமது சுமையை இறக்கும்.

ஆயுள் காப்புறுதி, சிற்றூந்துக் காப்புறுதி, ஓய்வூதியக் காப்புறுதி அனைத்தும் கணக்கில் குறித்துக் கொள்ளலாம்.
மற்றும் சில நன்கொடைகளும் குறிப்பிடலாம், முக்கியமாக ஆவணப்படுத்தல் வேண்டும், ஆனால் முன் நிபந்தனைகள் உறுதிப் படுத்தல் வேண்டும்.

வேலை செய்பவரின் போக்குவரத்துச் செலவு, அதாவது வீட்டிலிருந்து வேலை இடத்துத் தூரம் மட்டுமே (230 நாட்கள் x Kilometer x 0,30 €) வேலைக்கென்று மாத்திரம் வாங்கும் உடைகள், இச் செலவுகள் ஆயிரம் யூரோவைவிட அதிகமாக இருத்தல் வேண்டும். ஏனெனில் யேர்மனியச் சட்டம் வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் அவர்களின் வரிக்கணக்கின் போது ஆயிரம் யூரோக்களை அவர்களுக்கு ஏற்படும் செலவாக அளிக்கின்றது.

முக்கியமாக எல்லா ஆவணங்களையும் சேர்த்துக் கொடுத்தல் வேண்டும்.

# பொங்கல் விழா தமிழர் திருநாளாக மலர்ந்தது!



மதங்களைக் கடந்த மங்கலப் பொங்கல் விழா!



15.01.2016 அன்று யேர்மனி டோட்முண்டில் இயங்கிவரும் தமிழ் அரங்கம் படைப்பாளிகள் அகம் சிறப்பான முறையில் பொங்கல் விழாவைத் தமிழர் திருநாளாக விழா எடுத்து கொண்டாடியிருந்து.

தமிழ் அரங்க மண்டப முற்றத்தில் கோலமிட்டு அழகுபடுத்தப்பட்ட இடத்தில் ஒரு இஸ்லாமியர், ஒரு கிறீஸ்தவர், ஒரு சைவசமயத்தவர், ஒரு பகுத்தறிவாளர் என நால்வரும் இணைந்து பொங்கல் பானையை அடுப்பில் வைத்து பொங்கலை ஆரபித்து வைத்தனர். பொங்கல் ஒரு மதத்திற்கு மட்டுமே உரியது அல்ல அது உணவை உற்பத்தி செய்ய உதவும் சூரியனுக்கு உழவன் நன்றி செலுத்தும் கடமை கொண்ட விழா என்பதை இச்செயல் கோடிட்டு உறுதிபடுத்திக் காட்டியது.

பொங்கலைத் தொடர்ந்து இவ்விழாவை முன்னெடுத்த வி.சபேசன் இப்பொங்கலை ஏன் இவ்வாறு பொங்கல் பானையை நால்வரும் இணைந்து அடுப்பில் வைத்து பொங்கலிட்டோம் என்பதை தனது ஆரம்ப உரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.



திருமதி.கலைநிதி சபேசனின் வடிவமைப்பில் நடனங்களும், திருமதி. நந்தி சதீஸ்ஸின் மாணவிகளின் வாய்பாட்டுடன் சிறந்த குறும்படத் தயாரிப்ப ாளரும் கவிருமாகிய நெடுந்தீவு முகிலனின் கவிதை வாசிப்பும் இடம்பெற்றது. புத்திசிகாமணி, தருமலிங்கம், அகரம் முதன்மை ஆசிரியர் த.இரவீந்திரன், யேசுதாசன், ஏலையா க.முருகதாசன், திருமதி. ரவீந்திரா தெய்வேந்திரம் முல்லை மோகன் ஆகியோர் இவ்விழாவில் உரையாற்றினார்கள்.



# அடுப்படி 16



புவனம் தர்மரட்ணம்

## சீஸ் கட்லட்

சீஸ் கட்லட்
தேவையான பொருட்கள்

பீன்ஸ் 1 கப்
கரற் 1 கப்
கோவா 1. கப்
குடை மிளகாய் சிவப்பு 1 கப்
உருளைக் கிழங்கு 1 கப்
சீஸ் துருவியது 1.˙.2 கப்
வெங்காயம் 1 பெரிது
மிளகாய்த் தூள் 1.˙.2 தே.க
றஸ்க் தூள் 2 மே.க
உப்பு தேவைக்கு
மிளகு தூள் 1.˙.2 தே.க
கறி வேப்பிலை தேவைக்கு
எண்ணெய் பொரிக்க
அரிசி மா கட்லட் பிரட்ட
சோள மா கட்லட் தோய்ப்பதற்கு

**செய்யும் முறை**

உருளைக் கிழங்கை அவித்து தோல் உரித்து வைக்கவும்.

பீன்ஸ்,கரற்,கோவா,குடை மிளகாய்,அனைத்தையும் சிறு துண்டுகளாக வெட்டவும். வெங்காயம்,கறிவேப்பிலையையும் பொடியாக வெட்டவும்.

ஒரு கடாயில் சிறிது எண்ணெய் விட்டு பீன்ஸ்சை லேசாக வதக்கிய பின் கரற்றைசேர்த்து வதக்கி பின் கோவா,குடை மிளகாயையும் ஓரிரு நிமிடம் வதக்கிய பின் இறக்கி ஆறியதும் வெங்காயம்,கறிவேப்பிலை,றஸ்க் தூள்,உப்பு,மிளகாய்த் தூள் சீஸ் துருவியது ,உருளைக் கிழங்கையும் பிசைந்து எல்லாவற்றையும் சேர்த்து வட்டமாக கட்லற் போல் தட்டி வைக்கவும்.

பின் சோள மாவை கட்லற் தோய்க்கும் பதத்திற்கு கரைத்து அதில் கட்லற்றை தோய்த்து அரிசி மாவில் பிரட்டி எண்ணெய் காய்ந்ததும் பொன்னிறமாக பொரித்து எடுத்து சுடச், சுட பரிமாறவும்.


## பசியை அடக்க பலூன் மாத்திரை!

டயட் இருக்க முடியாதவர்களுக்கு பலூன் மாத்திரை.


பசியும் இருக்கமாட்டோம், உடற் பயிற் சியும், செய்யமாட்டோம், ஆனால் பெண்கள் அழகா கன மெல்லிடையும், ஆண்கள் தொந்தி இன்றி இருக்கவே விரும்புகின்றனர்.

இப்படியானவர்களது விருப்பை நிறைவு செய்தால் வியாபாரம் பெருகும் எனத் தெரிந்த ஒரு நிறுவனம் களத்தில் இறங்கியுள்ளது.

உடல் எடை அதிகரிப்பினால் டயட் இருக்க முடியா தவர்களுக்கு பலூன் மாத்திரை என



பெயரிடப்பட்ட மாத்திரை ஒன்று அமெரிக்கா விலுள்ள Food and Drug Administration (FDA) நிறுவனத் தின் ஆராய்ச்சியாளர் களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இம்மாத்திரையை உள்ளெடுத்ததும் இரைப்பைக்குள் பலூன் போன்று ஊதியதும் பசி அடங்கிவிடும்.



# லண்டன் நுண்கலைக் கல்லூரியின் (Ofaal) பட்டமளிப்பு விழா



**கலாஜோதி சிந்துஜா சிவபாதசுந்தரலிங்கம்**

நெதர்லாந்து நாட்டில் ஸ்வால்மன் எனும் இடத்தைச் சேர்ந்த சிந்துஜா சிவபாதசுந்தரலிங்கம் வாய்ப்பாட்டு இசையை முறைப்படி பத்து வருடங்கள் பயின்று சித்தி பெற்று லண்டன் நுண்கலைக் கல்லூரியினால் (முகயயட) 16-01-2016 நடாத்தப்பட்ட நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்ட மாபெரும் பட்டமளிப்பு விழாவில் சங்கீத கலாஜோதி என்ற பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார். இவர் இசைக்கலைமணி , கலாவித்தகர் திருமதி யோகேஸ்வரி சிவபாதசுந்தரலிங்கத்தின் மாணவியாவார்.






கலாநிதி
வானதி தேசிங்குராஜா

யேர்மனி வானதி நர்த்தனாய மாணவிகளான கீர்த்தனா தியாகராஜா,ராகவி ரத்னரூபன்,பிருந்தா தருமராஜா,தமிழினி தேசிங்குராஜா ஆகியோர் பரதத்தினை முறைப்படி பல வருடங்கள் பயின்று சித்தி பெற்று லண்டன் நுண்கலைக் கல்லூரியினால் (Ofaal) 16-01-2016 நடாத்தப்பட்ட மாபெரும் பட்டமளிப்பு விழாவில் நாட்டியஜோதி என்ற பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

மேலே வானதி நர்த்தனாய அதிபர் கலாநிதி வானதி தேசிங்குராஜா அவர்களையும் காணலாம். இம்மாணவிகள் வெற்றிமணிவிழாக்களை பல வருடங்களாக அலங்கரித்த நடனவித்தகிகள் என்பது குறிப்பிடத்தக்கது.






**நாட்டியஜோதி ஒலிவியா.T**

யேர்மனியில் இருந்து சங்கீதம்,நடனம்,வீணை ஆகிய மூன்று துறைகளிலும் நுண்கலைப்பட்டைத்தப் பெற்றுள்ளார் ஒலிவியா.T. நாட்டியத்திற்கு நாட்டிய ஜோதி என்கின்ற பட்டத்தையும் வீணை,பாட்டு இவற்றிற்கு முறையே கலாஜோதி என்கின்ற பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் நடனப் போட்டிகயில் ஆடற்கலையரசி விருது பெற்றவரும். வெற்றிமணி விழாக்கள் பலவற்றில் தன் திறமையை வெளிப்படுத்தியவரும் ஆவார். இவரது கலைகளின் குரு: பரத நாட்டியம் ஆடற்கலாலயம் அதிபர் திருமதி ரஜினி சத்தியகுமார், சங்கீதம் திருமதி. விஜயலட்சுமி. வீணை திரு செல்வசீராளன்.




கே.எஸ்.சுதாகர்

## கார் விபத்துக்கு ஒரு அரிச்சனை

குகநாதன் குடும்பம் சென்ற கார் விபத்திற்கு உள்ளாகிவிட்டது. காரிற்கு பலத்த சேதம். ஆக்களுக்கு ஒன்றும் இல்லை.


கோயில் ஐயருக்கு ரெலிபோன் செய்தி பறந்தது. “ஐயா! யமன் வந்து எட்டிப் பாத்திட்டுப் போயிருக்கிறார். உடனை ஒரு அருச்சனை செய்து விடுங்கோ. பிறகு சந்திக்கேக்கை காசைத் தாறம். காரின்ரை நம்பரைச் சொல்லிறன். எழுதுங்கோ”

“அந்த நம்பர் வேண்டாம் பிள்ளை. குடும்பம் எண்டு பொதுவாச் செய்யிறன். நீர் கிறடிற் காட் நம்பரைச் சொல்லும்”

நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு
சூபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!

தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
“Umschuldung”





வீட்டுக்கடன்
1,6%
வட்டிவீதத்திலிருந்து

உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், 60.000€ வரை உடனடி கடன் உதவி!

தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/13029415
0231/10876361
0152/53961138
Th. Gobinath

## Thushi -Deko

உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்..... Christal mandapa Set round Rada Krishna Stage and Raja Gopuram






Elephant Stage

Thushiyanthan. Thiruselvam

Tel:02305 - 85945 - 0176 608 108 13




Home: 02171 948036
Mob: 01786709612
01777076958

## திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

உங்கள் தாய் மொழியில்....

## HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!




உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb3 VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN
rmb3 ist Partner der Gothaer

15 வது ஆண்டு நிறைவான சேவை

## Kaneen Electronics

Internet-sat, Receiver,Camera-Alam
கருவிகள் மலிவு விலையில் பெற்று பயனடையுங்கள்

அனைத்து தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெறவேண்டுமா!
மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள் ஒளிபரப்பவேண்டுமா!எம்மை நாடுங்கள்.
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal

## Nirubagini Magendiran LL.M.

Vereidigte Dolmetscherin und Übersetzerin

Tamil- Deutsch
Deutsch- Tamil

மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்

Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

## Nimal வீடியோ அன் போட்டோ

Professional Video Movie




கலை விழாக்கள்...
உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள் எதுவானாலும் மனதோடு நிற்க நமது ஒளிப்பதிவு கைகொடுக்கும்...
சிறந்த முறையில் உங்கள் மங்கல விழாக்களை வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்க எம்மை நாடுங்கள்

தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55
Tel:01776794261




## Theeban Kiosk

உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்

வாரத்தில் 7 நாளும் திறந்திருக்கும்

மாலை 22.00 மணிவரை

01741 39 59 78
Hohenfriedeberger Straße 01
46325 Borken



# கிரகப் போர்

**காசியரின் பேரன்**

„விடிஞ்சு பத்து மணியாச்சு இந்த மனுசன் படுத்துக் கிடக்கு, இஞ்சருங்கோ எழும்பி தேத்தண்ணி குடிச்சிட்டு போய் சந்தையிலை மரக்கறியும் மீனும் வாங்கிக் கொண்டு வாங்கோ காலைமையிலையிருந்து நாயாய்ப் பேயாய் கத்திறன் காதிலை விழுந்தால்தானே" கணவன் பரமசாமிக்கு இடியப்பமும் சொதியும் சமைத்து வைத்துவிட்டு கிழிந்த சட்டையை தைத்தபடியே கணவன் படுத்திருந்த அறையை நோக்கி குரல் கொடுத்து எழுப்பிக் கொண்டிருந்தாள் கனகசுந்தரி. மனைவி சத்தம் போட்டுக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டே மறுபக்கம் திரும்பிப் படுத்த பரமசாமி „இந்த மனுசியாலை பெரிய கரைச்சல் சனி ஞாயிறுகளிலாவது நிம்மதியாக நித்திரை கொள்ள விடுதே எப்ப பார்த்தாலும் பழஞ்சீலை கிழிஞ்ச மாதிரி யொஞ்யு....யொஞ்யு என்று" மனைவிக்கு கேட்காதவாறு முணுமுணுத்தபடி „இஞ்சரப்பா இப்ப ஏன் சத்தம் போடுறாய் கொஞ்சம் நித்திரை கொள்ள விடு" என்றன்.

தெருவில் பெரும் ஆராவரமாகவிருக்கின்றது. தெருவில் அங்குமிங்குமாக நடந்தபடியும் சைக்கிளிலும் கார்களிலும் போவோராலும் வருவோராலும் தெரு சந்தடியாகின்றது. யன்னலால் எட்டிப் பார்த்த கனகசுந்தரி தைத்த சட்டையை அப்படியே போட்டுவிட்டு கணவனை கட்டிலிலிருந்து தள்ளிவிழுத்தாத குறையாக உசுப்பி எழுப்புகிறாள்" இஞ்சரப்பா எழும்பிப் போய் தெருவிலை என்ன நடக்குது என்று பாருங்கோ.....

ஒரு கைத்தொலைபேசியாவது இருந்திருந்தால் சாராதாவிற்காவது ரெலிபோன் பண்ணி என்ன ஆரவாரம் என்று கேட்கலாம். உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு என்னத்தைக் கண்டன் ஒரு ரிவி இருக்கா, வீட்டுத் தொலைபேசி இருக்கா இல்லை கைத் தொலைபேசிதான் இருக்கா, கலியாணம் செய்து இரண்டு வருசமாச்சு இதிலை எதையாவது வாங்கியிருக்கியளா"

சுந்தரி சொன்னதை காதில் விழுத்தாமல் சைக்கிளை எடுத்த நான் தெருவோர வீடுகளின் முன் படலையடியில் நின்றவாறு எல்லோரும் கைத்ததொலைபேசி எண்களை விரல்களால் அமத்தியவாறு வானத்தை அண்ணாந்து தீராத கவலை முகத்துடன் பாரத்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் ஏதோ பாரதூராமாக நடந்திருக்கு போல என்று நானும் வானத்தை நல்லாத் தலையைச் சுற்றி சுற்றி அண்ணாந்து பார்த்தேன். மேகம் எதையுமே வானத்தில் காணவில்லை. பளிச்சென்று நீலநிறமாக இருந்தது.

எனக்கு பரமசாமி என்று பெயரென்றாலும் ஊருக்குள்ளை எனக்கு பிபிசி, சிஎன்என், சாமிசன்னதம் என்ற செல்லப் பெயர்கள் உண்டு.
சைக்கிள் செயினுக்கு எண்ணைவிட்டால் வீண் செலவென்று எண்ணையும் விடுறதில்லை.அதாலை என்ரை சைக்கிள் தெருவிலை இறங்கிவிட்டதென்றால் செயினின் கர்ர்ர்ர்றாபுர்ர்ர்றாச் சத்தத்தால் ஊருக்கே தெரிந்துவிடும் சாமி புறப்பட்டுவிட்டார் என்று. எல்லாருடைய கையிலும் கைத்தொலைபேசி இருக்கு ஆனால் எல்லாருடைய முகத்திலையும் ஒரே சோகம்.சிலர் இலக்கங்களை அமத்துவதும் மேலே அண்ணாந்து வானத்தைப் பார்த்தபடி இருக்க எனக்கு மனம் கேட்கவில்லை, ஒரு ஆளுக்கு கிட்டப் போய்" ஏன் எல்லாரும் சோகமயமாய் இருக்கிறியள் ஒருத்தற்றை முகத்திலையும் சிரிப்பைக் காணலை, யாராவது முக்கிய தலைவர் போயிட்டாரோ இல்லாட்டி யாராவது நடிகர் நடிகைகள் அவுட்டோ" என்று கேட்டன். அந்தாள் என்னை முறைச்சுப் பார்த்திட்டு „தலைவர் கிலைவர் செத்தால் எங்களுக்கென்ன நடிகர் கிடிகர் நடிகை கிடிகை செத்தால் எங்களுக்கென்ன அதைவிடப் பாரதூரமான பிரச்சினை அதுதான் கவலை"என அந்தாள் சொல்ல," தம்பி அப்பிடி என்னப்பு பிரச்சினை என்றேன்" அவரோ „அதெல்லாம் உங்களுக்குப் புரியாது இது இன்ரநெற் சமாச்சாரம் „ எனச் சொல்ல, அவரிட்டை கேட்டு நடக்கப் போகிற காரியம் எதுவும் இல்லை என்றபடி சைக்கிளை உருட்டிக் கொண்டு சந்திக்கு போனன்.
சந்தியிலை ஒரே சனம். கோப்பிக்கடைக்கு உள்ளேயும் வெளியேயும் ஒரே சனம். இன்ரநெற் கடைக்கு உள்ளேயும் வெளியேயும் சனம். ஆள் மாறி ஆள் „என்னவாம் ஏதாவது தகவல் கிடைச்சுதா" எனக் கேட்க" ச்சா ஒன்றுமில்லையடா மச்சான்" என்று பொடியள் சொல்ல" என்ன வாழ்க்கையடா இது இன்ரநெற் வேலை செய்யுதில்லை பேஸ்புக்கில்லை ருவிற்றர் இல்லை நிம்மதியே போய்விட்டுது எங்கையாவது ஆத்திலை குளத்திலை விழுந்தோ இல்லாட்டி எக்ஸ்பிரஸ் றெயினிலை விழுந்தோ செத்துப் போகலாம்" என்று பொடியள் சோகமாகச் சொல்ல நான் உண்மையிலை திகைச்சுப் போயிட்டன். தற்கொலை செய்யுமளவிற்கு இன்ரநெற் அப்பிடி ஒரு பிரச்சினையோ என்று நினைச்சபடி பொடியளை ஒரு நோட்டம் விட்டன் பெரும்பாலும் எல்லாற்றை விரலிலும் சிகரட். ஊதித்தள்ளிக் கொண்டேயிருந்தார்கள். அடிக்கொரு தரம் „என்ன வாழ்க்கையடா இது தண்ணி சாப்பாடு வீடில்லாமல் கூட இருக்கலாம்......என்ன வாழ்க்கை இது" என்று புலம்பிக் கொண்டே யிருந்தார்கள். இந்தச் சோகத்திலையும் பொடியளுக்குள் யாரோ ஒருத்தன் „அண்ணை பிபிசி அண்ணை இன்றைக்கு சாமி சன்னதமாடலையோ" எனச் சொன்னது கேட்டுது குரல் வந்த திசையைப் பார்த்தேன் யாரென்று தெரியேலை.பிபிசி என்று சொன்னது என்னைத்தான்.

கோப்பிக் கடைக்குள் நுழைஞ்சன். கோப்பி குடிச்ச சிலரும் மேசையில் தலையை வைச்சு அழுதபடி பலரும் இருந்தனர். வழமையாக அந்தக் கோப்பிக் கடை கலகலவென்று ஒரே கொண்டடாட்டமாக இருக்கும். பொம்பிளைப் பிள்ளையள் அடிக்கடி மூக்கையும் கண்ணையும் துடைச்சபடி இருந்தனர். மேசையில் கைத்தொலைபேசிகள் சத்தம் போடாமல் செத்துப் போய்க் கிடந்தன. எனக்கு இந்தப் பிள்ளைகள் அழுதபடி இருந்தது பொறுக்கேலை கிட்டப் போய ஒரு ஒரு பிள்ளையிட்டை,பிள்ளை ஏனம்மா அழுறாய்" என்றன், அந்தப் பிள்ளை தலையைத் தூக்கிப் பார்த்திட்டு திரும்பி மேசையிலை தலையை வச்சி படுத்திட்டு எனக்கோ மனம் பொறுக்கவில்லை. எல்லாரையும் சுற்றுமுற்றும் பார்த்தன் எல்லாரும் கோப்பி கோப்பியாய்க் குடிச்சபடி மேலே பார்த்தபடி இருந்தனர். எனக்கு மனம் பொறுக்கேலை அந்தப் பிள்ளையிட்டை „இஞ்சரம்மா அழாமல் என்ன நடந்தது எண்டு சொல்லன் ஆரெண்டாலும் பொடியள் கிடியள் சேட்டை கீட்டை விட்டவையோ" என்று கேட்க அந்தப் பிள்ளை „அப்பிடி நடந்தாலும்கூட பரவாயில்லை அங்கிள் அதைவிட இது பெரிய கொடுமை" என்று சொன்ன அந்தப்பிள்ளை „அங்கிள் உங்கடை வீட்டிலை றேடியா ரிவி ரெலிபோன் மொபைல் ஏதாவது இருக்கா" என்று கேட்க நான் ஒன்றுமே இல்லையென்றேன் „இவையெல்லாம் இல்லாமல் ஒரு வாழ்க்கையா" என்று என்னைப் பார்த்துச் சொல்ல „நான் தலைசுத்தாத குறையா திகைச்சுப் போய் பக்கத்து கதிரையில் தில்லையில் கூத்தனே தெண்பாண்டி நாட்டானே இந்தப் பூமிக்கு என்னு வந்தது" என்றபடி உட்கார்ந்தேன்.கோப்பிக்கடைக்கு எதிரே என்ரை மனுசியின்ரை பள்ளித் தோழி சாராதாவின் வீடிருக்கு. இண்டைக்கு மனுசிக்கு சொல்ல நல்ல புதினம் கிடைச்சிட்டுது என்று நினைச்சுக் கொண்டு கோப்பிக்கடையை விட்டு வெளியே வந்தன் திடிரென்று சாராதாவின் வீட்டிலிருந்து"ஐயையோ ஐயையோ நான் இனி என்ன செய்வேன் என் வாழ்க்கையே முடிஞ்சு போச்சுது. கண்கெட்ட கடவுளுக்கு கண்ணே இல்லையா „என்று அலறல் சாராதாவின் வீட்டிலிருந்து வர சாராதாவின் வீட்டுக்கு நான் ஓட என்னோடு பொடியள் சிலரும் ஓடிவந்தனர். வீட்டுக்குள் போன நான் அங்கை கண்ட காட்சியைப் பார்த்து திகைச்சுப் போட்டன். (தொடரும்)




# காதோடு காதாக

**கலைக் கதிர் கதிர்.துரைசிங்கம்**

## அமெரிக்கா சந்திரனில் கால்பதித்தது தெரியும். இலங்கையில் கால்பதித்து 200 வருடங்கள் அது தெரியுமா?

செல்லர்: தெல்லிப்பளை யூனியன் கல்லூரி இந்த வருஷம் 200வது ஆண்டாம். தெல்லிப்பளையில் பிறந்து வளர்ந்த நீ இது பற்றி ஏன் எனக்குச் செல்லவில்லை?
சோமர்: எனக்குத் தெரிந்ததையும் நான் கண்டதையும் நீ கேளாமலே உனக்குச் சொல்லுவன். ஆனால் நான் கேட்டு அறிந்ததையும் தேடி அறிந்ததையும் நீ கேட்டால் மட்டும் சொல்லுவன்.
செல்லர்: உன்ரை இலக்கணத்தை விட்டிட்டு இப்ப கேட்கிறன் சொல்லு.

சோமர்: 1816ம் ஆண்டு மசாசுசெற்ஸ் இல் இருந்து இலங்கை வந்த அமெரிக்க மதபிரசாரகர்கள் கால் பதித்த இடம் தெல்லிப்பளை. மக்களின் கல்வியறிவு முக்கியம் என்பதை உணர்ந்த மிசனறி, அதே ஆண்டு அமெரிக்கமிஷன் தமிழ் பாடசாலை ஒன்றை தெல்லிப்பளையில் ஆரம்பித்து இலவச கல்வியை தமிழில் ஆரம் பித்தனர். பின்னர் ஆங்கில மொழியையும் இணைத்தனர். இன்றைய USA அன்று அமெரிக்க யூனியன் என்று அழைக்கப்பட்டபடியால், தாம் முதலில் ஆரம்பித்த பாடசாலைக்கு Union College எனப் பெயர் சூட்டினர். 1818ல் வதிவிட வசதியும் பெண்கள் கல்வியும் ஆரம்பிக்கப்பட்டது.

செல்லர்: மதபிரசாரத்தோடு நிற்காமல் தமிழ்மொழி வளர்ச்சியிலும் மிசனறி ஈடுபட்டிருக்கு. வேறு என்ன செய்தவை சொல்லும்.

சோமர்:
1820ல் அச்சு இயந்திரசாலை ஒன்றை தெல்லிப் பளையில் நிறுவினர்.
1823 பண்டைத்தரிப்பில் ஒரு டிஸ்பென்சரி நிறுவப்பட்டது. இப்பொழுது வைத்தியசாலையாக இயங்குகிறது.
பட்டிக்கோட்ட செமினரி என்று பல்கலைக்கழக தர கல்லூரி ஒன்றை அமைத்தனர். இன்றைய வட்டுக்கோட்டை Jaffna College அதுவே.
1824 Uduvil Girls College ஆரம்பிக்கப்பட்டது. இதுவே ஆசியாவில் பெண்களுக்கென வதிவிட வசதியுடன் ஆரம்பிக்கப்பட்ட முதல் பாடசாலை ஆகும்.

1833 பண்டத்தரிப்பில் குழந்தைகளுக்கு முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.
1834 ஓலைச் சுவடிகளில் இருந்த தமிழ் ஆக்கங்கள் மிசனறியால் அச்சுவடிவில் வெளிவர ஆரம்பமானது.


உதயதாரகை.—MORNING STAR.
Thursday, January 7, 1841. [No. 1.

1841 ஜனவரி 7 இலங்கையின் 2வது ஆங்கிலப் பத்திரிகையாக 'Morning Star' றும் இலங்கையின் முதலாவது தமிழ் பத்திரிகையாக "உதய தாரகை"யும் யாழ்பாணத்திலிருந்து மாதம் இருமுறை வெளிவரத் தொடங்கின.

1842 ஆங்கில தமிழ் அகராதி வெளிவந்தது.
1847 மானிப்பாயில் கல்லூரி ஒன்றும் வைத்திய சாலை ஒன்றும் ஆரம்பமானது. Dr.Samuel Fisk Green வைத்தியசாலையைப் பெறுப்பேற்றார். (Green Memorial Hospital).

1853 புகைப்படக்கலை முதலில் மிசனறி இலங்கைக்கு (யாழ்ப்பாணம்) கொண்டு வந்தனர்.
1855 Dr. Green மானிப்பாயில் மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்து மேலைத்தேச மருத்துவ இயலை தமிழில் போதித்து வைத்தியர்களை உருவாக்கினார். இலங்கையின் முதல் மருத்து வக்கல்லூரி மானிப்பாய் மருத்துவக் கல்லூரி.
1862 Winslow வின் தமிழ் ஆங்கில அகராதி வெளியானது.

**200 வருடங்கள்** Union College




1872 மேலைத்தேச மருத்துவ நூல்கள் தமிழில் வெளிவந்தன.
1897 மகப்பேறு மற்றும் மகளீர் மருத்துவத்திற் குமாக முதன்முதலில் இணுவிலில் ஆரம்பிக் கப்பட்ட The McLeod Hospital இன்னும் இயங்குகிறது.

**ஆசியாவில் முதாலவது பெண்கள் கல்லூரி**





# 3 திருமந்திரமும் வாழ்வியலும்

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**

திருமந்திரத்தின் இறை வழிபாடு பற்றிய கொள்கை (தொடர்ச்சி)
பாதைகள் பல பயணம் ஒன்றே என எல்லாச் சமயங்களும் இறைவனை அடையும் ஒரே நோக்கத்தையே கொண்டவை எனக்கூறும் பாடல் எண் 54 இல்

"திருநெறி ஆவது சித்து அசித்தன்றிப்
பெருநெறி ஆய பிரானை நினைந்து
குருநெறி ஆம் சிவமாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே."

இப்பாடலின் பொருள் "இந்தப் போற்றத் தக்க சமய நெறி வழி நடப்பதாவது அறிவதும் அறியப்படாததுமான சித்து, அசித்து என்னும் இரண்டும் தவிர்ந்த உயர்ந்ததான பரம்பொருளை எண்ணி வழிபடுவதும், குரு நெறியாகிய சன்மார்க்க வழியில் ஈடுபடுவதும் பரம்பொருளைச் சென்றடைய உள்ள ஒரு வழியாகும். எனவே வேதாந்தம், சித்தாந்தம், சன்மார்க்கம், பூசைவழிபாடு என்கின்ற எல்லா வழிகளுமே இறையருள் பெற உதவும் போற்றத் தக்க சமய நெறிகளே." என்பதாகும்.





இக்கருத்தை நான்கு வேதங்களில் முதல் வேதமாகிய ரிக் வேதத்தில் ஒரே உபநிடதமான ஐதரேய உபநிடதத்தில் வரும் மகா வாக்கியம் "வசுவைத குடும்பகம்" அதாவது அனைவரும் ஒரே குடும்பத்தினர் எனக் கூறுகிறது.
இக்கருத்தை சுவாமி விவேகானந்தர் தனது 31 ஆவது வயதில் 1893 ஆம் ஆண்டு செப்ரம்பர் 11 ஆம் திகதி அமரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் நடந்த உலக சைவ சமயப் பேரவையில் இந்து சமயப் பிரதிநிதியாக இந்தியாவிலிருந்து கலந்து கொண்டு உரையாற்றும் போது "ஆறுகள் பல இடங்களில் தோன்றி பல பாதைகளால் பாய்ந்தாலும் கடலில் தான் போய்ச் சேருகின்றன. இதேபோலத்தான் சமயங்கள் பல பல பெயர்களில் பல பல கலாச்சாரங்களுடன் தோன்றினாலும் இறுதியில் நோக்கம் இறைவனை அடைவதே" என்னும் உன்னத கருத்தைக் கூறி இந்து சமய அரிய தத்துவங்களை உலகறியச் செய்துள்ளார்.

அன்பு இல்லாமல் அறம், அருள், இன்பம் ஒன்றுமே இல்லை. நாம் சகல ஜீவராசிகளிடமும் அன்பு செலுத்திவதன் மூலம் இவ் உலகில் அமைதி நிலவச்
செய்யலாம் என்பதை திருமந்திரத்தின் அடிப்படைக் கொள்கைகளில் மற்ற ஒன்றான அன்பே சிவம் என்னும் தத்துவத்தைக் கூறும் பாடல் எண் 270 இல்

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

இப்பாடலின் பொருள் "அன்பு வேறு, இறைவன் வேறு இரண்டும் ஒன்றல்ல தனித்தனியானவை என்று சொல்பவர்கள் அறிவில்லாத மூடர்கள். அன்பே இறைவன் என்பதைப் பலரும் அறியாது இருக்கிறார்கள். அன்புதான் இறைவன் என்பதை எல்லாரும் அறிந்துவிட்டால் பிறகு அவர்களே அன்புருவான இறைவனாய் ஆனந்த வெள்ளத்தில் அமர்ந்திருப்பார்கள் (வாழ்ந்திருப்பார்கள்)." என்பதாகும்.
திருவள்ளுவர் திருக்குறளின் 8 ஆம் அதிகாரத்தை அன்புடைமை எனப் பெயரிட்டு 10 பாடல்கள் மூலம் அன்பைப் பற்றிக் கூறியுள்ளார்.

சமய குரவர் நால்வரில் ஒருவரான மாணிக்கவாசகப் பெருமான் இறைவனை "ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என் அன்பே" எனப் பாடியுள்ளார்.

இறைவன் எம்முடன் இருக்கும் போது நாம் எங்கெங்கோ இறைவனைத் தேடுகிறோம். உள்ளத்துள் உள்ள இறைவனை உணர்க எனக் கூறும் பாடல் 109
"வானவர் என்றும் மனிதர் இவரென்றும்
தேனமர் கொன்றைச் சிவன்அருள் அல்லது
தான்அமர்ந்து ஓரும் தனித்தெய்வம் மற்றில்லை
ஊன்அமர்ந் தோரை உணர்வது தானே."

இப்பாடலின் பொருள் "தேவர்கள் என்றும், பூவுலகத்து மனிதர்கள் என்றும் உள்ள வேறுபாடுகள் எல்லாம், தேன் நிறைந்த கொன்றை மலர்மாலை சூடிய சிவபெருமான் அருளால் அறியப்படும் பேதங்களேயன்றி வேறில்லை. வானவரும், மனிதரும் சேர்ந்து தெளிந்து உணர்ந்த ஒரே தெய்வம் சிவன் அன்றி வேறில்லை. எனவே உண்மையான வழிபாடு நம் உள்ளுறையும் இறைவனை உணர்ந்து, அறிந்து வழிபடுவதேயாகும்." என்பதாகும்.

எமது உள்ளம்தான் பெரும் கோயில் என்பதை வலியுறுத்தும் பாடல் எண் 509
"உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின்று ஆடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வி இலாரே."

இப்பாடலின் பொருள் "ஒவ்வொருவர் உள்ளத்தின் உள்ளேயும் பல புனித தீர்த்தங்கள் இருக்கின்றன (உள்ளம் பெரும் கோவில்) இருந்த போதிலும் அந்தப் புனித நீரில் மெள்ள இறங்கி, மூழ்கி நீராடி உடல் தூய்மையும் உள்ளத் தூய்மையும் பெற்று மகிழ எண்ணாமல், தங்கள் வினைத் துயர் பாவச்சுமை நீங்க, மேடு பள்ளம் கோயில் குளம் என்று வீணே அலைந்து திரிபவர்கள் உள்ளத்தில் கள்ளம் உடையவர்கள். அறிவற்ற மூடர் ஆவார்கள்." என்பதாகும்.

உள்ளமே உறைவிடமானவன் எனக் கூறும் பாடல் எண் 19
"இதுபதி ஏலம் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே."

இப்பாடலின் பொருள் "வாசமணம் வீசும் ஏழுலகங்களுக்கும் அதிபதியாகத் திகழ்பவனே சுடலையை இருப்பிடமாகக் கொண்டிருக்கும் பேரறிவாளன். யோக மார்க்கத்தை உயிர்களுக்கு உதவும் இவனே உயிர்கள் செய்யும், கடைப்பிடிக்கும் மேலான தவ ஒழுக்கத்திற்கு ஏற்ப அந்த உள்ளங்களைக் கோயிலாகக் கொண்டு அமர்ந்திருக்கின்றான்." என்பதாகும்.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!



# தமிழினத்தின் முகவரியை உலகம் எங்கும் எழுதியவர்கள் இலங்கைத் தமிழர்கள்.

## முல்லைத்தீவில் கவிப்பேரரசு வைரமுத்து முழக்கம்



வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கவிஞர் வைரமுத்துவுக்குப் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்குகிறார்.

இலங்கை முல்லைத்தீவில் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தலைமையில் உழவர் பெருவிழா கொண்டாடப்பட்டது. அதில் சிறப்பு விருந்தினராகக் கவிஞர் வைரமுத்து கலந்து கொண்டார். அனைத்து அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பொதுமக்களும் கலந்து கொண்டார்கள். முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தலைமை உரையாற்றினார். விவசாயத் துறை அமைச்சர் ஐங்கரநேசன் வரவேற்புரை ஆற்றினார். அதில் சிறப்புரையாற்றிய கவிஞர் வைரமுத்து, “ஈழமகாகாவியம் எழுதுவதை என் வாழ் நாளின் பெரும்பணியாகக் கருதுகிறேன்” என்று தெரிவித்தார்.

கவிஞர் வைரமுத்து பேசியதாவது,

இந்தத் தியாகத் திரு மண்ணில் நான் உணர்ச்சி மயமாக இருக்கிறேன். என் பேச்சு நிறை வடைவதற்குள் இருதயமே உடைந்து விடாதே, என் கண்ணே கலங்கிவிடாதே என்று எனக்கு நானே சொல்லிக்கொள்கிறேன். ஆசியாவிலேயே அதிகம் கல்வி கற்ற இனம் இலங்கைத் தமிழினம். தமிழினத்தின் முகவரியை உலகம் எங்கும் எழுதியவர்கள் இலங்கைத் தமிழர்கள். ஆனால் இன்று எல்லாவற்றையும் இழந்து நிற்கிறீர்கள் உங்கள் நம்பிக்கையைத் தவிர. அந்த நம்பிக்கையை ஊட்டத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.

விழா தொடங்கும் போது வானம் மெல்லிய தூறல் போடத் தொடங்கியது. பெரு மழையே வந்து விடுமோ என்று பலரும் அஞ்சினார்கள். எந்த மழை வந்தாலும் தமிழர்கள் கலைய மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். வெடி மழையிலேயே கரைந்து போகாத தமிழர்கள் இந்த இடிமழையிலா கரைந்து போவார்கள் என்று நினைத்துக் கொண்டேன். வந்த மேகம் கலைந்து போய்விட்டது. உழவர் பெருவிழா கொண்டாடும் முதலமைச்சரையும் பொதுமக்களையும் பெரிதும் பாராட்டுகிறேன்.

தமிழர்களின் ஆதிப் பெருந்தொழில் முதலில் வேட்டை, பிறகு வேளாண்மை. மரபு வழி அறிவோடு வேளாண்மையை அறிவியல்பூர்வமாகக் கையாண்டவர்கள் தமிழர்கள். ஜப்பானிய நடவு முறை தான் பயிர்களுக்கு இடைவெளியைச் சொல்லிக்கொடுத்தது என்று சொல்லுகிறார்கள்.

ஆனால் அதற்கும் முன்பே வேளாண்மையில் நடவு முறையை விஞ்ஞானப்படுத்தியவர்கள் தமிழர்கள். நெல் நாற்று நட்டால் இரண்டு நெற்பயிர்களுக்கு இடையில் நண்டு ஊர்ந்து செல்லவேண்டும், கரும்பு நட்டால் இரண்டு கரும்புகளுக்கு மத்தியில் நரி ஓடும் இடைவெளி இருக்கவேண்டும். வண்டி ஓடுகின்ற இடை வெளியில் வாழைக் கன்றுகள் நடப்பட வேண்டும். தென்னை மரம் நட்டால் இரண்டு தென்னைகளுக்கு இடையில் தேர் ஓடவேண்டும்.

“நண்டு ஊர நெல்லு, நரி ஓடக் கரும்பு, வண்டி ஓட வாழை, தேர் ஓடத் தென்னை”
என்ற வேளாண்மை விஞ்ஞானம் படைத்தவர்கள் தமிழர்கள். அதனால் தான் திருவள்ளுவர் உழவுக்கு என்று அதிகாரமே இயற்றினார்.

இரசாயன உரங்களைத் தவிர்த்து இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டிய கால கட்டத்தில் நாம் இருக்கிறோம். இரசாயன உரங்களால் விளையும் விளைச்சலால் மனித குலம் புற்று நோய்த் தாக்குதலுக்கு ஆளாகும் அபாயம் இருக்கிறது.

இராசயன உரங்கள் வளர்ந்து வந்த கதையே வேறு. முதல் உலகப்போரில் எட்டு இலட்சம் கைதிகளைக் கொன்று குவித்த அமோனியாப் புகை தான் போர் முடிந்ததும் பூச்சி கொல்லி மருந்தாய் உருமாறியது. இரண்டாம் உலகப் போரில் மனித குலத்தை அழிக்கப் பயன்பட்ட அமோனியா சூப்பர்பாஸ்பேர்ட் என்ற வெடி உப்புக் களைத் தான் போர் முடிந்ததும் வர்த்தகச் சூதாடிகள் இரசாயன உரங்களாக மாற்றி விற்பனைச் சந்தையை ஏற்படுத்தினார்கள். ஆனால் தமிழர்கள் கண்டறிந்த இயற்கை உரம்தான் மண்ணுக்கும் மனிதர்களுக்கும் தீங்கு செய்யாதது. மண்ணுக்கு உயிர் உண்டு என்று கண்டறிந் தவர்கள் தமிழர்கள். அதனால்தான் மண்ணை நிலமென்னும் நல்லாள் என்றும் பூமாதேவி என்றும் கொண்டாடினார்கள்.

புது யுகத்தின் தமிழ் இளைஞர்களே, உங்கள் வாழ்வு கணிப்பொறியோடு முடிந்துவிடுவதில்லை. விஞ்ஞானம் கற்றுக்கொண்டு வேளாண்மைக்குத் திரும்புங்கள். நடந்து முடிந்த பெரும்போர் உங்கள் வாழ்வைக் குலைத்திருக்கிறது. உங்கள் உறவுகளை அழித்திருக்கிறது. பெற்ற பெரும்துன் பங்களிலிருந்து நீங்கள் மீண்டு வரவேண்டும். அடைந்த துன்பங்களையே அனுபவங்களாக மாற்றிக்கொள்ளவேண்டும். எல்லாத் துயரங் களுக்குக் கீழேயும் நம்பிக்கை என்ற விதை அழியாமல் கிடக்கிறது. அதை முளைக்கச் செய்யுங்கள்.

யாழ்ப்பாணம் வந்து இறங்கியதும் இந்த மண்ணை என் உள்ளங்கையிலெடுத்து என் நெற்றியில் வைத்து வணங்கினேன். முல்லைத்தீவிலும் முள்ளிவாய்க்காலிலும் கனத்த மனத்தோடு என் கண்ணீரைச் சிந்தினேன். யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, ஆனையிறவு, அம்பாறை, முல்லைத் தீவு, முள்ளிவாய்க்கால், வல்வெட்டித் துறை, புங்குடுதீவு என்பவை எல்லாம் வெறும் ஊர்ப்பெயர்கள் அல்ல. இந்த நூற்றாண்டின் வரலாற்றுக்குறிப்புக்கள். ஈழமகாகாவியம் ஒன்றை எழுதிமுடிப்பதைத் தான் என்வாழ்நாளின் பெரும் பணியாகக் கருதிக்கொண்டிருக்கிறேன். கடும் உழைப்பில் அதை நான் நிறைவு செய்வேன்.

இனி இந்த மண்ணில் இரத்தம் சிந்தவேண்டாம், எங்கள் தமிழ் மக்கள் புதிய திசையில் புதிய வாழ்வு பெறவேண்டும் என்று வாழ்த்துகிறேன். இந்தத் தியாகத்திருமண்ணில் நின்றுகொண்டு சொல்லுகிறேன்,
நிலமே உன்னில் நாங்கள் புதைத்தது போதும்
இனிமேல் விதைப்பதற்கு இடம்கொடு.

கடலே உன் அலைகள் இரத்தத்தால் சிவந்தது போதும் இனிமேலாவது வெள்ளை அலைகளை வீசு.

தீயே எங்கள் கூரைகளில் எரிந்தது போதும்
இனியாவது அடுப்பில் எரி.

காற்றே எங்கள் சுவாசப்பைகளை வாழ்வால் நிரப்பு,
ஆகாயமே உன் மீது வெடிகுண்டுப் பறவைகள் பறந்தது போதும். இனியாவது சமாதானப் புறாக்களைப் பறக்கவிடு.

தமிழர்களே,கல்வியால் உழைப்பால் உங்கள் வாழ்வை மேம்படுத்துங்கள் நாளை நம்முடையது.
இவ்வாறு கவிஞர் வைரமுத்து பேசினார்




# இளம் பெண்களுக்குத் தாடி பிடிக்கும் பக்ரீரியாவுக்கு பிடிக்கவே பிடிக்காதாம்!





இளம் பெண்களுக்கு தான் தாடி வைத்த ஆண்களை பிடிக்கும் என்பார்கள். ஆனால் ஆண்டிபயாடிக்கு கூட தாடி வைத்த ஆண்களை தான் பிடிக்கிறதாம். ”இதென்னப்பா புதுக்கதையாக இருக்குது..” என்று யாரும் வாயை பிளக்க வேண்டாம். இதை ஆய்வின் மூலமாக தான் ஊர்ஜிதம் செய்துள்ளார்கள். சமீபத்தில் ”ஜர்னல் ஆப் ஹாஸ்ப்பிடல் அண்ட் இண்.ஃ.பெக்ஷன்” என்ற மருத்துவ இதழில் வெளிவந்த ஆய்வறிக்கையில் தாடி வைத்த ஆண்களை விட முழுமையாக ஷேவ் செய்த ஆண்களுக்கு தான் அதிகமாக பாக்டீரியா தொற்று அபாயம் ஏற்படுகிறது என கூறுயுள்ளனர்....

குறைந்த பாக்டீரியா தாடி வைத்துக் கொள்வதால் குறைந்தளவு பாக்டீரியா தாக்கம் தான் ஏற்படுகிறதாம். மேலும் தாடியில் தங்கும் பாக்டீரியாக்கள் சாத்தியமுள்ள வகையில் புதிய ஆண்டிபயாடிக் உண்டாக காரணமாக இருக்கிறது என ஐரோப்பிய பிரபல ஊடகமான இண்டிபெண்டன்ட் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஆய்வறிக்கை "Journal of Hospital Infection" என்ற பத்திரிக்கையில், தாடி வைத்திருக்கும் ஆண்களை விட முழுமையாக ஷேவ் செய்த ஆண்களுக்கு தான் அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையிலான நச்சு தொற்றுக்கள் ஏற்படுவதாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வில் பங்கெடுத்தவர்கள் இந்த ஆய்வில் தாடி வைத்த, தாடி இல்லாத 408 ஆண்கள் பங்கெடுத்துக் கொண்டனர். இவர்கள் அனைவருக்கும் மருத்துவமனையில் வைத்து பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

பாதிப்பு அளவு முழுமையாக ஷேவ் செய்த ஆண்கள் தான் ஏறத்தாழ மூன்று மடங்கு அளவு அதிகமாக methicillin-resistant staph aureus (MRSA) எனும் வகையான பாக்டீரியாக்களை தங்கள் கண்ணத்தில் ஏந்தி திரிகிறார்களாம்.

ஸ்டாபிலோகோகஸ் ஆரோஸ் ஸ்டாபிலோகோகஸ் ஆரோஸ் எனும் பாக்டீரியாவும் 10% அதிகம் முழுமையாக ஷேவ் செய்த ஆண்கள் மேல் தான் பரவுகிறதாம். இந்த பாக்டீரியாக்கள் நிறைய சரும தொற்று, சுவாசக் கோளாறு போன்றவற்றை ஏற்படுத்தும் தன்மை கொண்டதாம்.

பராமரிப்பு அவசியம் என்னதான் தாடி நல்லது என்று கூறினாலும். அழுக்கு அதிகமாக சேராமல் பராமரிப்பு செய்ய வேண்டியதும் அவசியம். இல்லையேல் அழுக்கின் காரணமாக கூட நச்சுக்கள் சருமத்தில் அதிகம் பரவலாம்.

## வெற்றிமணி விழா

### எங்கே எப்போது!!!




வறட்சியான சருமம் வறட்சியான சருமம் இருப்பவர்கள், 1 டேபிள் ஸ்பூன் துருவிய கேரட்டுடன், 1 டீஸ்பூன் மில்க் க்ரீம் அல்லது பால் மற்றும் முட்டையின் வெள்ளைக்கரு சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவ, சருமத்தின் ஈரப்பசை வழுங்கப்பட்டு, சரும வறட்சி நீங்கும்.




## இளங்கலைஞர்களை.........தொடர்ச்சி vetti +1

அதன் பயனாக உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறுபட்ட நாட்டிய நிகழ்வுகளை இணைய வசதிகள் மூலமாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. வீட்டில் இருந்தவாறே நவீன கலைநுட்பங்களையும், ஆக்கத்திறன்களையும் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. மக்கள் தொடர்பாடல்கள் இலகுபடுத்தப்பட்டமையினால் உலகளாவிய ரீதியில் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று பரந்துபட்ட மக்களிடையே நாட்டியக்கலை சென்றடைகிறது.

நடனக்கலைகள் தொடர்பான இறுவட்டுக்கள் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளன. ஒளி-ஒலி வசதிகள் மூலம் பரதக்கலையின் அழகியல் வெளிப்பாடுகளையும், பரதநிகழ்வு வெளிப்படுத்த விளையும் கருத்துக்களையும் மெருகூட்டி வழங்க கூடியதாகவுள்ளது. நிறையப் பாடல்களையும், அதற்குரிய நடன ஆக்கங்களையும் இணையத்தினூடாக (YOUTUBE) பார்த்து அறிந்து கொள்ள கூடியதாகவுள்ளது. பழைய கலைஞர்களின் கலைப் பங்களிப்பு, அவர்களின் கலைப்பயணம் பற்றிய தகவல்கள், அவர்களின் ஆக்கங்கள் பெருமைகள் பற்றியெல்லாம் இணையத்தளங்களினூடாக அறியக் கூடியதாகவுள்ளது. இவ்வகையில் பரதக்கலையின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளமையினால் அக்கலை நிகழ்வுகளுக்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளது. நுட்பமான நடன அமைப்புமுறைகள், கற்பனைவளம் நிறைந்த ஆக்கங்கள், ஒப்பனை அலங்கார நுட்பங்கள் மற்றும் இன்னோரன்ன வசதிகள் மக்கள் மத்தியில் பரதக்கலையின்பால் ஆர்வத்தினைத் தூண்டியுள்ளது. தொடரும்.....



# வம்பு வார்த்தைகள் ஏனோ?



ஆழ்வாப்பிள்ளை

வம்பு வார்த்தைகள் ஏனோ? இலங்கை வர்த்தக ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத்தில் ஒலிபரப்பும் பாடல்கள் சில, திரையரங்குகளில் சினிமாவில் பார்க்கும் பொழுது வேறுபட்டு இருக்கும். இது ஏன் எப்படி என்று ஒரு குழப்பம் என்னிடம் முன்னர் இருந்தது. பின்னர் பாடல்கள் தணிக்கை செய்யப்படும் விபரம் தெரிந்த பின் தெளிவானது.

திரைப்படம் தயாரிப்பில் இருக்கும் பொழுதே அந்தப் படத்தின் பாடல்கள் இசைத்தட்டில் வெளிவந்து விடும். பின்னர் திரைப்படம் தயாரித்து முடித்தபின் தணிக்கைக் குழுவின் கைக்குப் போகும் பொழுது பாடல் வரிகளில் ஏதாவது ஏடாகூடமாக இருந்தால் கத்தரி விழ ஆரம்பிக்கும். அப்படி கத்தரி விழும் பாடல்களில் உள்ள வரிகளில் மாற்றம் செய்து பாடகர்களைக் கொண்டு மீண்டும் பாட வைத்து படத்தில் இணைத்து விடுவார்கள். முன்னரே வெளிவந்த இசைத் தட்டுக்கள் மாற்றம் இல்லாமல் ஒலித்துக் கொண்டிருக்கும்.
காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருந்த நேரம். எம்ஜிஆர் படங்களின் பாடல்களில் திமுக கொள்கைப் பிரச்சாரம் இருக்கும். அதனால் அங்கே கத்தரி கண்டிப்பாக விழுந்து விடும். அதுவும் இந்தக் கத்தரி விளையாட்டு எம்ஜிஆர் - வாலி கூட்டணியில்தான் அதிகம் நிகழ்ந் திருக்கிறது.
எங்கவீட்டுப் பிள்ளை திரைப்படத்திற்காக முதலில் வாலி எழுதிய பாடலின் வரிகள் இப்படி ஆரம்பிக்கும்,
„நான் அரசனென்றால்
என் ஆட்சி என்றால்
இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்“
இந்தப் பாடலைப் பார்த்த தயாரிப்பாளர் பி.நாகிரெட்டி, கண்டிப்பாக தணிக்கைக் குழு அனுமதிக்காது என்று சொல்ல நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால் என்று வாலி மாற்றி எழுதினார்.

பாடல் பதிவானது. ஆனாலும் தணிக்கைக் குழு இரண்டு இடத்தில் கத்தரி போட்டது.

ஒரு தலைவன் உண்டு- அவன்
கொள்கை உண்டு
அதை எப்போதும் காத்திருப்பேன் என்ற வரியில் “ஒரு தலைவனில் ஒரு தடவையும் “இந்தக் காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன் என்ற இடத்திலுமாக இரண்டு தடவைகள் வெட்டு விழுந்திருந்தன.
“இந்தக் காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன் என்ற வரி இந்தக் கூட்டத்தின் ஆட்டத்தை முடிப்பேன் என்றும் தலைவன் என்ற சொல் கடவுள் என்றும் திரைப்படத்தில் மாற்றம் செயயப் பட்டது.
அறிஞர் அண்ணா நம்நாடு பத்திரிகையில் அருமைத் தம்பி என்று விழித்து தொடராக கடித இலக்கியம் எழுதிக் கொண்டிருந்தார். அந்தக் காலகட்டத்தில் வெளிவந்த தாய்க்குப் பின் தாரம் திரைப்படத்தில் மருதகாசி எழுதிய பாடல் வரிகள் இசைத்தட்டில் இப்படி இருந்தன,

“மனுசனை மனுசன் சாப்பிடுறாண்டா அருமைத் தம்பி - இது
மாறுவதெப்போ தீருவதெப்போ ஏழைத் தம்பி“
அருமைத் தம்பிக்கு தணிக்கைக் குழுவின் கத்தரி விழுந்ததால் திரைப்படத்தில்,
“மனுசனை மனுசன் சாப்பிடுறாண்டா தம்பிப் பயலே - இது
மாறுவதெப்போ தீருவதெப்போ நம்ம கவலை“ என்று இடம் பெற்றிருந்தது.

அன்பே வா திரைப்படத்தில் “உதய சூரியனின் பார்வையிலே, உலகம் விழித்துக் கொண்ட வேளையிலே“ என்ற வரிகளில் உதயசூரியன் புதிய சூரியனாக மாற்றப் பட்டது. பெற்றால்தான் பிள்ளையா என்ற திரைப்படத்தில் “மேடையில் முழங்கு அறிஞர் அண்ணா போல்“ என்ற வரியில் அறிஞர் அண்ணாவை எடுத்து விட்டு திரு.வி.க. என்று மாற்றி இருந்தார்கள்.

எம்ஜிஆரின் அரசியற் பாடல்களில் மட்டுமல்ல, காதல் பாடல்களிலும் கத்தரி போட்டார்கள். படகோட்டி திரைப்படத்தில், அருகில் வராமல் அள்ளித் தராமல் ஆசை விடுவதில்லை என்ற வரி ஆபாசமாக இருக்கிறது என்று தணிக்கைக் குழு சொல்ல நேரில் வராமல் நெஞ்சைத் தராமல் ஆசை விடுவதில்லை என்று திரைப்படத்தில் மாற்றி இருந்தார்கள்.
பெற்றால்தான் பிள்ளையா திரைப் படத்தில்,
“தோகை மயிலின் தோளை அணைத்து
பள்ளி கொள்வது சுகமோ“ என்ற வரியில் பள்ளி கொள்வது ஆபாசம் என்று சொல்லி பள்ளியில் தணிக்கை குழு கத்தரி போட,
“தோகை மயிலின் தோளை அணைத்து
பழகிக் கொள்வது சுகமோ“ என திரைப்படத்தில் வரும்.
இதே பாடலில்
“உறவைச் சொல்லி நான் வரவோ
என் உதட்டில் உள்ளதைத் தரவோ“ என்ற வரியும் ஆபாசம் என்று தணிக்கைக் குழு சொல்ல,
உறவைச் சொல்லி நான் வரவோ
என் உயிரை உன்னிடம் தரவோ என்று மாற்றி இருந்தார்கள்.
பணம் படைத்தவன் திரைப்படத்தில்,
“அந்த மாப்பிளை காதலிச்சான்
கையைப் பிடிச்சான் என்ற பாடலில் இசைத்தட்டில்,
“அம்மம்மா என்ன சுகம்
அத்தனையும் கன்னி சுகம்“ என்று ஆண் பாடுவதாக இருக்கும். திரையில்
அம்மம்மா என்ன சுகம்
அத்தனையும் கண்டதில்லை என்று மாற்றி இருப்பார்கள்.



எம்ஜிஆர் பாடல்களில் மட்டுமல்லாமல், பொதுவாக ஆபாசம் அல்லது சமூகத்துக்கு முரணான கருத்துகள் கொண்ட மற்றையவர்களுடைய திரைப்படப் பாடல்களிலும் கத்தரி விழுந்து கொண்டுதான் இருந்தன.

வாழ்க்கைப் படகு திரைப் படத்தில்,
“பொல்லாத பெண்களடா
புன்னகையில் வேசமடா
நன்றி கெட்ட மாதரடா - நான்
அறிந்த பாடமடா என்ற வரிகள் பெண்களுக்கு அவமரியாதை செய்கிறது என்று தணிக்கை கத்தரி போட,
“பொல்லாத கண்களடா
புன்னகையில் வேசமடா
நன்றி கெட்ட மாந்தரடா - நான்
அறிந்த பாடமடா“ என்று பெண்கள் கண்களாகவும், மாதர் மாந்தராகவும் திரையில் மாற்றம் பெற்றிருக்கும்.
கடவுள் இருக்கின்றான் என்ற திரைப் படத்தில் இடம் பெற்ற இந்தப் பாட்டு
“கொஞ்சம் தள்ளிக்கணும்
அங்கே நிக்கணும் சொல்லாமல் தெரிஞ்சிக்கணும்“ என்று இசைத் தட்டில் இருக்கிறது. தள்ளிக்கணும் என்ற வார்த்தை தணிக்கையானதால் கொஞ்சம் சிந்திக்கணும் என்று திரைப்படத்தில் மாற்றி இருந்தார்கள். இதே பாடலில்,
“பாக்குற பார்வையில் விளங்கலையா
நான் பயப்படுறேனே தெரியலையா
ஷாக் அடிச்சா புள்ள நடுங்கலையா
நான் பேசடிச்சேனே புரியலையா“ என்ற வரிகளும் ஆபாசம் என்று தணிக்கை செய்ய,
“பாக்குற பார்வையில் விளங்கலையா
நான் பயப்படுறேனே தெரியலையா
கேக்கிற கேள்வியும் புரியலையே அந்தக் கேள்விக்குப் பதிலும் தெரியலையே“ என்று திரைப்படத்தில் மாற்றி இருப்பார்கள்.
நன்றி :மனஓசை

தொடரும்....




## காதலர்தினம் கவிதைகள்

### இடை இடையே மனதில் வந்து போகிறா(ள்)ன்

இனியவனே ,
நிச்சயமாய் தெரிகிறது உன்னுள்
தொலைந்து விடுவேன் என
தொலையாமலிருக்க என்னவெல்லாம்
செய்ய வேண்டுமோ அத்தனையும்
கவனமாக நினைவில் வைத்துகொள்ளுகின்றேன்
செய்துவிடக்கூடாது என்று ....
நீயோ என்மனதில்
இடை இடையே வீசும் காலைநேர
தென்றலாய் வந்துபோகுறாய் ...
என்னை எப்படியடா
மறந்தாய் ...?
அந்த ரகசியத்தை இடை இடையே
வந்து போகும்போதே
சொன்னாயெனின் நானும்
அப்படியே உன்னை மறக்க முயற்சிக்க ..
நன்றி !!!



நந்தினி

# மிரட்டும் கண்களுடன் சூர்யா





சூர்யா நடித்துள்ள '24' படத்தின் அனைத்து பணிகளும் முடிவடைந்து வெளியீட்டுக்கு தயாராக உள்ளது. இந்த படத்தை விக்ரம் குமார் இயக்கியுள்ளார். சூர்யாவுக்கு ஜோடியாக சமந்தா நடித்துள்ளார். இப்படத்தின் முதலாவது போஸ்டர்கள் ஏற்கெனவே வெளியாகி படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகமாக்கியுள்ளது. மேலும், இப்படத்தின் மீது அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் வகையில் போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளனர். இந்த போஸ்டரில் சூர்யா அடர்ந்த தாடி, அழுக்கான முகம், கலைந்த தலைமுடி, மிரட்டும் கண்கள் என அனைவரையும் மிரட்டும் விதமான தோற்றத்தில் இருக்கிறார்.

இந்த போஸ்டரை பார்க்கும்போதே திகிலூட்டும் விதமாக இருக்கிறது. இதை பார்க்கும்போது இந்த படத்திற்காக சூர்யா தனது அதிகபட்ச உழைப்பை கொடுத்திருக்கிறார் என்று தெரிகிறது. இப்படம் டைம் மெஷின் சம்பந்தப்பட்ட கதை.

இந்த படத்தில் சூர்யா 3 வித்தியாசமான வேடங்களில் நடிக்கப்போவதாக கூறப்பட்டது. அதை இந்த போஸ்டர்கள் உறுதி படுத்தியுள்ளன. ஏ.ஆர்.ரகுமான் இசையில் உருவாகியிருக்கும் இப்படம் தேர்தல் காரணமாக முன்கூட்டியே வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# காதல் போதையில் கௌதம் கார்த்திக்

வை ராஜா வை படத்தைத் தொடர்ந்து கவுதம் கார்த்திக் -பிரியா ஆனந்த் ஜோடி மீண்டும் ஒருமுறை முத்துராமலிங்கம் படத்தில் ஜோடி சேர்ந்திருக்கிறது. கடல் படத்தின் மூலம் அறிமுகமானவர் கவுதம் கார்த்திக். தொடர்ந்து இவர் நடிப்பில் வெளியான என்னமோ ஏதோ, வை ராஜா வை போன்ற படங்களும் கடல் படத்தைப் போன்றே பெரியளவில் எடுபடவில்லை.

இந்நிலையில் தற்போது முத்துராமலிங்கம் என்ற புதிய படத்தில் நாயகனாக கவுதம் ஒப்பந்தமாகியிருக்கிறார். இந்தப் படத்தில் இவருக்கு ஜோடியாக நடிகை பிரியா ஆனந்த் நடிக்கவுள்ளார். வை ராஜா வை படத்தில் நடிக்கும் போது கவுதம் கார்த்திக்-பிரியா ஆனந்த் இருவருக்கும் இடையில் நெருக்கம் ஏற்பட்டு டேட்டிங் சென்றதாகவும், இருவரும் ஒரே வீட்டில் தங்கியிருந்தார்கள் என்றும் பல்வேறு வதந்திகள் வெளியாகின. ஒரு கட்டத்தில் இருவரின் காதலும் முடிவிற்கு வந்ததாகவும் இதனால் பிரியா ஆனந்த் அமெரிக்காவிற்கு திரும்பிச் சென்று விட்டதாகவும் கூட கூறினர்.ஆனால் இது குறித்து இருவரும் வெளிப்படையாக எதையும் கூறவில்லை. இந்நிலையில் பிரியா ஆனந்த் மீண்டும் கவுதம் கார்த்திக்குடன் இணைந்து முத்துராமலிங்கம் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். இந்த ஜோடி மீண்டும் இணைந்திருப்பது தமிழ் சினிமாவில் பலரின் புருவத்தையும் உயர்த்தச் செய்திருக்கிறது. இளையராஜாவின் 1001 வது படமாக உருவாகும் இப்படத்திற்கு தயாரிப்பாளர், இயக்குநர், எழுத்தாளர் பஞ்சு அருணாசலம் பாடல்கள் எழுதுகிறார். இந்தப் படத்தின் மூலம் சுமார் 21 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இளையராஜாவுடன், பஞ்சு அருணாசலம் கைகோர்ப்பது குறிப்பிடத்தக்கது.

# பாலா எது சொன்னாலும் அதில் அர்த்தம் தெரிந்தது

தாரை தப்பட்டை படத்தை பற்றி யார் என்ன சொன்னாலும், வரலட்சுமி நடிப்பை பற்றி யாராலும் பேச முடியாமல் இருக்க முடியாது. அந்த அளவிற்கு இப்படத்தில் தன் அர்ப்பணிப்பை கொடுத்துள்ளார் இவர்.இந்நிலையில் சமீபத்தில் தமிழகத்தில் முன்னணி நாளிதழ் ஒன்றி பேட்டியளித்த இவரிடம், படப்பிடிப்பில் பாலா எப்படி என்று கேட்டுள்ளனர்.அதற்கு அவர் 'நான் அவரிடம் இந்த கதாபாத திரத்திற்காக ஏதும் பயிற்சி எடுக்க வேண்டுமா? என்று கேட்டேன், அவர் “அதெல்லாம் ஒன்றும் வேண்டாம், படப்பிடிப்பிற்கு வா, நான் சொல்வதை செய்” என்பார்.

பாலா தீட்டிய வைரங்கள்தான் விக்ரம் சூர்யா விஷால். எதைச் சொல்கிறார் பாலா அதை மட்டும் செ்தால் போதும். விஷாலுக்கு பெயர் கொடுத்த படம் பாலவின் அவன்... வரலட்சுமிக்கு இதுவரை பேர்சொல்லும் படம் எதுவும் அமையவில்லை. ஆனால் இப்போது...



படப்பிடிப்பில் இருந்த ஒரு வருடமும் படப்பிடிப்பு இடத்தில் நான் கண்ணாடியே பார்க்கல. ரெடியாகி பாலா சார் முன்னால போய் நிற்போம் அவர்தான் முடியைக் கலைச்சுவிடுவார், மேக் அப் சரி பண்ணுவார், தேவைப்பட்டா துணியை கூட கிழித்துவிடுவார்' என கூறினார்.

யேர்மனியில் பிராங்பேட் நகரில்

JAFFNA BASAR

உரிமையாளர்: நடராஜா சுதன்

Tel: 069 25 62 63 53

மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்

ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்

Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main





## நெடுந்தீவு முகிலனின்
# கதையும் கவிதைகளும் 3

கதை - **மாலதிக்குள் ஓர் மர்மம்.**

நிலா இறந்து விட்ட ஓர் இரவு... மணி பன்னிரண்டை தாண்டி போய் உலாவும் நேரம். ரஞ்சி வயிற்று வலியில் அலறுகிறாள். அப்பத்தான் கணவன் மிதுனன் வீட்டுக்கு வருகிறான். ரஞ்சிக்கு கண்ணீர் கன்னத்தை கழுவிக் கொண்டிருந்தது. ஒரு ஆற்றை கடந்து இரண்டு சந்திகள் கடந்து மூன்று மூலைகள் கடந்து ரஞ்சியை மிதுனன் டாக்டரிடம் கூட்டி வந்திட்டான்.

முதல் குழந்தை சுகப்பிரசவமாக பிறப்பது என்பது முடியாத ஒன்றுதான் என்றாலும் குழந்தை சுகமாகவே பிறந்தது. ஊழியர்கள் குழந்தையை கண்ணாடி பெட்டிக்குள் கொண்டு செல்லவும் மிதுனன் குழந்தைக்கு பின்னால் ஓடினான். மிதுனன் விருப்பப்பட்டது போலவே குழந்தை பெண் குழந்தை... ஆசைப்பட்டது கிடைக்கும் போது தேக்கி வைத்திருந்த கனவுகள் நெஞ்சை குளிர வைக்கும் .முன்னரே யோசித்து வைத்திருந்த "மாலதி" என்ற பெயரை குழந்தைக்கு வைக்கனும் என்று மிதுனன் உள்ளுக்குள் யோசிக்கின்றான்.

நீங்கள் நினைப்பீர்கள் மாலதி மிதுனனின் இள வயது காதலி என்று ஆனால் அப்படி அல்ல என்று சொல்லுவதற்கும் இல்லை இது ஒரு மாறுபட்ட மர்மம். மிதுனனுக்கு ஒரு பழக்கம் இருக்கிறது. எந்த விடையத்துக்கும் பாரபட்சம் காட்டவே மாட்டான். மிதுனனின் முதல் காதலி பள்ளிக்கூட தேவதை இட்லி போல சொக்கை வைச்ச மாளவிகா...
மிதுனனை விட மாளவிகா மூணு வயது மூப்பு என்றாலும் ஆரம்பத்தில் அக்கா அக்கா என்று அலட்டியவன் நாளடைவில் காதலிக்க ஆரம்பித்திட்டான்.. காதலை ஏற்று கொள்ளாத மாளவிகா மிதுனனின் சில கவிதைகளை ஏற்று கொன்டதுண்டு. மாளவிகாவை பாக்கிறதுக்கு மட்டுமே பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தான். ஆனால் மாளவிகா ஏற்கனவே கூட படிக்கிற பையனை விரும்பி இருந்தாள் இந்த விடையம் தெரிய வர மிதுனனே ஒதுங்கிட்டான். ஆனாலும் உள்ளுக்குள் சின்னதால் காதல் தோல்விதான்.

மாளவிகாவின் நினைவுகளோடு மட்டும் வாழ்ந்து கொண்டிருந்த மிதுனனுக்கு பல்கலைக்கழகத்தில் லதுசாவின் அறிமுகம் கிடைத்தது. லதுசாவை அழகென்று சொல்லுவதை விட அறிவான பொண்ணு அந்த அறிவு லதுசாவுக்கு றொம்ப அழகு. பார்த்தா அப்பாவி மாதிரி எல்லோருக்கம் பிடிக்ககூடிய பேச்சுதிறன் மிதுனன் லதுசாவை உள்ளுக்குள் நேசிக்க ஆரம்பித்தான். வெளியில் சொல்லாத காதலோடு வாழ்தவன் ஒரு நாள் தனியா கூப்பிட்டு தன் காதலை சொன்னான் அதுக்கு லதுசா யோசிச்சு சொல்றன் என்றாள். பாட்டியின் மரண வீட்டக்கு போயிட்டு இரண்டு வாரம் கழித்து மிதுனன் பல்கலைக்கழகம் வர லதுசா தொலைபேசியில் தொங்கிக்கொண்டிருந்தாள். மிதுனனை திரும்பிக்கூட பார்ப்பதில்லை வேனும் என்று மிதுனன் முன்னுக்கே போனில் யாரோடோ செல்லமாக அலட்டிகொண்டிருப்பாள். மிதுனனின் இரண்டாவது காதலும் திண்டாடிப் போனது.பல்கலைக்கழகம் முடிந்ததும் மிதுனனுக்கு வாத்தியார் வேலை கிடைத்தது. கற்க்க போன இடத்தில்தான் இதுவரை மிதுனன் காதலித்தான் என்றால் இப்போது கற்ப்பிக்க போன இடத்திலும் காதலிக்க ஆரம்பித்தான் . திவ்யா ரீச்சரை பார்த்தா காதலிக்க தோனும். அந்த அழவுக்கு அழகி.

வெட்க்கப்படாம காதலை உடனே திவ்வியாக்கு சொல் லிட்டான். காதலை ஏற்றுக் கொள்வதற்கு திவ்வியா க்கு மூன்று மாதங்கள் வரை தேவைப்பட்டதென்றாலும் ஏற்றுக் கொண்ட அடுத்த நிமிடமே கல்லூரிக்கே தெரிய வந்தது.. இரண்டு பேரும் சேர்ந்து சாப்பிட போறது ஒய்வு நேரத்தில ஒன்னா இருக்கிறது ஓடைக்குள் நின்று கை காட்டுறது. யாரும் பார்க்காத சந்தர்ப்பத்தில் கண் அடிக் கிறது இப்படி கல்லூரி வளாகமே திவ்யா ரீச்சரின் காதல் அட்காசத்தை அவதானி த்து கொண்டிருந்தது. மிதுனனுக்கு ஒரு நல்ல பொண்ணு கிடைத்திருக்கிறது என்று நண்பர்களும் பிரியப்பட்டார்கள். லீவுக்கு ஊருக்கு போன திவ்யா ரீச்சர் திரும்பி கல்லாரிக்கு வரவேயில்லை... வேலையையும் விட்டிட்டு மிதுனனையும் விட்டுட்டு வெளிநாட்டில இருந்து வந்த மச்சானை மணந்திட்டா.. . மிதுனனை ஏன் தான் ஏமாத்தினா என்பது இதுவரைக்கும் தெரியாது. மிதுனனுக்கு ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு காதல் இருந்ததே தவிர கடைசி வரைக்கும் ஒரு காதலி இருக்கவில்லை...



காலம் கடக்க கடக்க மிதுனனின் அம்மா பாத்து கட்டிவைச்ச பொண்ணுதான் ரஞ்சி ... இப்ப மிதுனன் ஒரு குழந்தைக்கு அப்பாவாகியும் விட்டான். காதல்கள் எல்லாம் காணாமல் போய் விட்டது.

## மாலதிக்குள் ஓர் மர்மம்

ஆரம்பத்திலே சொன்னேன் மிதுனன் பாரபட்சம் பார்க்காதவன் என்று மாளவிகாவில் வருகின்ற "மா" வும் லதுசாவில் வருகிற" ல" வும் திவ்யாவில் வருகிற "தி" யும் சேர்த்து குழந்தைக்கு "மாலதி" என்று குழந்தைக்கு பெயர் தயாரிக்கிறான். குழந்தையை மெதுவாய் தடவிக்கொண்டு மனைவியை நோக்கினான் வைத்தியார் அதிர்சி வார்த்தையை துப்பினார். சின்ன உசிரை மட்டும்தான் காப்பாற்ற முடிந்தது .
பெரிய உயிர் மேல போயிட்டு . பிரசவத்தின் போது மிதுனனின் மனைவி ரஞ்சி உயிரை விட்டுட்டா.... "இப்படி போயிற்று மிதுனனின் வாழ்க்கை"
காதலிகளின் நினைவுகளை நெஞ்சோடு வைத்திருக்கும் ஆண்களை மணம்முடித்து மனைவியாக வாழ்ந்து முடிப்பது என்பது மறுபிறவி எடுப்பதற்கு நிகர்.

கவிதை 01




ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte



Milin Impex GmbH
தமிழர்களுக்குத் தேவையான எல்லா உணவுப்பொருட்களின் மொத்த மலிவு விற்பனையாளர்கள்
Dortmund நகரில்
Geschäftszeiten: Dienstag, Mittwoch, Freitag 10:00 bis 19:00 UhrMontag & Donnerstag 07:00 bis 17:00 Uhr Samstags 09:00 bis 16:00 UhrSonn. und Feiertags: Geschlossen

மேலதிக விபரங்களுக்கு
Web :www.milinimpex.de
பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288

# எனக்கு பிடிப்பது எல்லாம் அவருக்கும் பிடிக்க வேண்டும்.






காதல் என்பது இளம் வயதில் ஏற்படும் மாயை என்று தெரிவித்துள்ளார் நடிகை அனுஷ்கா. தெலுங்கு, தமிழ் படங்களில் மிகவும் பிசியாக இருப்பவர் நடிகை அனுஷ்கா. கடந்த ஆண்டு அவர் நடிப்பில் என்னை அறிந்தால், பாகுபலி, ருத்ரமா தேவி, இஞ்சி இடுப்பழகி ஆகிய படங்கள் ரிலீஸாகின. தற்போது அவர் பாகுபலி இரண்டாம் பாகத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். சூர்யாவின் எஸ்-3 படத்திலும் நடிக்கிறார். இந்நிலையில் அனுஷ்கா காதல், திருமணம் பற்றி பேசியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,காதல் காதல் என்பது இளம் வயதில் அதாவது தெளிவு இல்லாத வயதில் ஏற்படும் ஒரு வகை மாயை. அவ்வளவு தான். இளம் வயதில் உள்ள அனைவரையும் அந்த மாயை பிடிக்கிறது.

நேரம் இல்லை வளர்ந்த பிறகு காதல் என்ற பெயரில் செய்ததை எல்லாம் நினைத்தால் சிரிப்பு தான் வரும். நான் யாரையும் இதுவரை காதலித்தது இல்லை. காதலிக்க எனக்கு நேரமும் இல்லை. சினிமாவை தான் தற்போது காதலித்துக் கொண்டிருக்கிறேன்.திருமணம் சரியான நேரம் வருகையில் நிச்சயம் என் திருமணம் நடக்கும். எனக்கு வரும் கணவர் ஒளிவு மறைவு இன்றி நடக்க வேண்டும், எனக்கு பிடிப்பது எல்லாம் அவருக்கும் பிடிக்க வேண்டும். அத்தகையவரை சந்திக்கையில் திருமணம் செய்து கொள்வேன்.




2011-ம் ஆண்டு. அவன் இவன் படம் வெளியான நேரம். விஜய் தொலைக்காட்சியில் படம் குறித்த சிறப்பு நிகழ்ச்சியில் இயக்குநர் பாலா, விஷால், ஆர்யாவை பேட்டி காண்கிறார் சிவா. பாலாவின் முறைப்புகளுக்கு பம்மியபடி கேள்விகளைத் தொடுக்க, அதை கிண்டலாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் விஷாலும் ஆர்யாவும். ஆனால் காலத்துக்கு குசும்பு ரொம்பவே அதிகம். சரியாக நான்கே ஆண்டுகள். அதே பாலாவின் தாரை தப்பட்டைக்கும், விஷாலின் கதகளிக்கும் போட்டியாக வந்து வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறது சிவகார்த்திகேயனின் ரஜினிமுருகன்! இன்று சிவாவின் வளர்ச்சி என்ன தெரியுமா.... "ரஜினிக்கு எப்படி வயது வித்தியாசமின்றி ரசிகர் கூட்டம் உள்ளதோ, அதே போல சிவகார்த்திகேயனுக்கும் உள்ளது. குறிப்பாக குழந்தைகள் மாணவர்கள் மத்தியில் அவருக்கு கிடைத்துள்ள வரவேற்பு பிரமிக்க வைப்பதாக உள்ளது. நான்கே ஆண்டுகளில் அவர் இப்படியொரு வளர்ச்சியை எட்டுவார் என்பதை யாரும் கற்பனை கூட செய்து பார்த்திருக்க மாட்டார்கள்", என்கிறார்கள்

**- நினைவெல்லாம் நீயே**



இப்போது எங்கே இருக்கிறாய்
தொலைபேசி அலறுகிறது
ஒரு தடைவையாவது தூக்கமாட்டாயா..?..?

தொலைபேசியை வீட்டிலே விட்டுவிட்டு.
நீ வெளியே சென்று விட்டாயோ..?

வெளியே செல்வதாயின் - நீ
யாருடன் சென்றிருப்பாய்

ஒரு வேளை தொலைபேசியை கையிலே
வைத்துக்கொண்டு
யாரோடாவது
உரையாடிக்கொண்டிருக்கிறாயோ..?

உனது உரையாடலிலாவது
நான் ஞாபகப்படுவேனா?..

நீ ஏன் எனக்கு
ஒழிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறாய்.

என்னை எங்கோ எறிந்து விட்டு நீ
காணமல் போனாய்.

காற்றில் உனது வாசனைகளை
அனுபவிக்கிறேன்.
கனாக்களில் உனது வருகையை
அவதானிக்கிறேன்.

இப்போதைய உனது தோற்றம்
எப்படிஇருக்குமோ
மாற்றம் நிகழ -நான் காரணம்
ஆனேனோ.?..?
எனது தொலைபேசி அழைப்பை
தூக்காவிடிலும்
துண்டித்தாவது விடுவாயா..?..?
உன் இருத்தலையாவது நான்
உறுதிப்படுத்தி கொள்வதற்கு!

கவிதை 02
**காணாமல் போன(அ)வள்**

எனது உயரம் இருப்பாள்.
கொலுசு கூச்சப்பட நடப்பாள்.
யாரையும் நிமிர்ந்து பார்க்க மாட்டாள்.
கன்னத்தில் குழி விளச்சிரிப்பாள்.
பேர் ஊர் தெரியாது ஆனால்
தமிழ் பேசுவாள்.
பஸ்சில் ஜன்னல் ஓரத்தில்தான்
உட்க்காந்து பயணிப்பாள்.
தாவணி அணிந்திருப்பாள் - அடிக்கடி
துப்பட்டாவை சரிபார்ப்பாள்.
கீழ் உதட்டின் ஓரத்தில்
ஒரு மச்சமும் இருக்கிறது.
உள்ளங்கையில் மருதாணி
பூசி இருப்பாள்.
கைக்குட்டையை கசக்கி
பிடித்திருப்பாள்.
மேலும் சொல்வதானால்.
கூந்தல் இரவைப் போலவும்
முகம் நிலவைப் போலவும் இருக்கும்.
கடைசியாய் மஞ்சள் தாவணியில்தான்
காணாமல் போனாள்.
தகவல் தெரிந்தவர்கள்
தொடர்பு கொள்ளவும்
கேட்கும் சன்மானம் வழங்கப்படும் - அது
என் உயிர் என்றாலும்
பரவாய் இல்லை







Hückelhoven நகரில் புதிய இடத்தில் புதுப்பொலிவுடன் ஆசியா சமுத்திரம் Parkhofstraße-101

**Asiatischer Super markt**

**ஆசியா சமுத்திரம்**

பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயைான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

துரித பணமாற்றுச் சேவை
Ria Money Transfer
MoneyGram International Money Transfer
VALUTRANS MONEY TRANSFER




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
காதலர்தின வாழ்த்துக்கள் . Feb. 14
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com


Jasmine Silk House
09.02.2016
முதல்
புதுப் புது டிசைன்களின்
வரவுகளுடன்
ஆரம்பமாகும்
காதலர்தின வாழ்த்துக்கள் . Feb. 14
என்றும் மலிவாக தரமாக திருமணப்
பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள்,
பஞ்சாபிகள்,அனைத்தும் புத்தம்,
புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
T.Mohanadas
Tel:02102 844744
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...
VALUTRANS MONEY TRANSFER
காதலர்தின
வாழ்த்துக்கள் . Feb. 14
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


புதிய இலங்கை உணவகம்
Dortmund நகரில்...
NEW CEYLON IMBISS
காதலர்தின
வாழ்த்துக்கள் . Feb. 14
Tel: 0231 72 52 859
0171 6157 130
இலங்கை உணவை
சுத்தமாக
சுவையாகச்
சுவைக்க
நாடுங்கள்
திங்கள் முதல் செவ்வாய்
வரை மற்றும் வியாழன்
முதல்
சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும்
விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை
புதன் விடுமுறை
Annen Str.1
44137 Dortmund


வீட்டுக்கடன்: 1,3 % லிருந்து வங்கி கடன்: 1000 € = 1,65 € மாத வட்டி
SEFA 24
Mein Allfinanzberater
நீங்கள் வீடு வேண்டப் போறீர்களா?
நீங்கள் வங்கிக் கடன் எடுக்க போறீர்களா?
இலவச ஆலோசனைக்கு எங்களை நாடுங்கள்!
எங்கள் வங்கிகள்:
COMMERZBANK
Postbank
Deutsche Bank
DSL Bank
ING DiBa
Sparkasse
Volksbanken Raiffeisenbanken
0231 546 015 20
SEFA24 Sozial-Ethnische Finanzagentur GmbH | Rheinische Str. 85, 44137 Dortmund | 0231 546 015 20 | info@sefa24.de


யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
StaR - Impex
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
காதலர்தின வாழ்த்துக்கள் . Feb. 14
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Kipper Str.3 44147 Dortmund Germany